# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 26 சனிக்கிழமை (09 – 05 – 1998) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 49


# புலிகள்–ஒட்டுணு பேச்சுகளில் பல விடயங்களில் இணக்கம்!

## நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

வவுனியா, மே 9

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் வன்னியில் தாம் நேரடியாக நடத்திய பேச்சுக்களின் போது பல விடயங்களில் இணக்கம் காணப்பட்டதாக ஐ. நா. தூதரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பேச்சுக்கள் குறித்து நேற்று வவுனியாவில் வைத்துத் தாம் விடுத்த செய்திக் குறிப்பிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

யுத்தத்தில் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்தொடர்பான விடயங்களில் ஐ. நா. செயலாளரின் விசேட பிரதிநிதியான ஒலரா ஒட்டுணு நேற்று முன்தினம் வன்னியில் புலிகளின் பிரதி நிதிகளுடன் பேச்சு நடத்தியது தெரிந்ததே.

இப்பேச்சுகள் குறித்து ஒட்டுணு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்காவில் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேசத்தில் சுற்றுலாவை மேற்கொண்டிருக்கும் ஒலரா ஒட்டுணு, வவுனியாவில் அரச மற்றும் அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்குச் சென்றார்.

அங்கு நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ள சமூகத்தின் வாழ்க்கை நிலையை நேரடியாக அவர் அவதானித்ததுடன் அவர்களின் கருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஒட்டுணு அகதிகளைப் பார்த்தார்

வவுனியா, மே 9

வவுனியா வந்திருந்த ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு வவுனியாவில் உள்ள அகதி முகாம்களுக்கு நேற்று விஜயம் செய்தார்.

வடபகுதி அகதிகள் தங்கியிருந்த பூந்தோட்டம், வேப்பங்குளம் அகதி முகாம்களுக்கு சென்ற அவரிடம் அகதிகள் தமது குறைகளை எடுத்துக்கூறினர்.

முகாம்களுக்குள் தம்மை அடைத்து வைத்திருப்பதாகவும்—

சுதந்திரமாக நடமாட அனுமதிக்கவில்லை என்றும்—அகதிகள் தெரிவித்தனர்.

மதகுவைத்த குளம், பகல அலுத்வேவ மாதிரிக் கிராமங்களுக்கும் அவர் சென்று பார்வையிட்டார். (உ–164–3)

## ஐ.நா. செயலருக்கு பிரபாவின் செய்தி?

வவுனியா, மே 9

வன்னி சென்ற ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு மூலம் ஐ. நா. செயலருக்கான விசேட செய்தி ஒன்றை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்வே. பிரபாகரன் அனுப்பி வைத்திருப்பதாக வனனித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவரால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு ஒன்று ஒட்டுணுவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்திய சமயமே அவரிடம் இந்தச் செய்தி கையளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## திருமலை பாடசாலைகள் சில காலம் மூடப்படும்?

### அதிகாரிகள் ஆராய்வு

திருகோணமலை, மே 9

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல் மற்றும் கொலரா ஆகியவை காரணத்தாலும்—

கடும் உஷ்ண நிலை அங்கு நிலவும் காரணத்தாலும்—

நகரின் பாடசாலைகளை குறிப்பிட்ட காலத்துக்கு மூடுவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைப் படகுடன் மோதிய மீனவர் படகு

### குடத்தனை மீனவர் மரணம்

வடமராட்சிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகும், கடற்படைப் படகும் கடந்த புதன்கிழமை இரவு மோதியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து குடத்தனையில் வசித்து வந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான ஞானப்பிரகாசம் வஸ்தியாம்பிள்ளை (43 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த விபத்தில் காணாமற்போயிருந்த இந்த மீனவரின் சடலம் பருத்தித்துறை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உசனில் கிளைமோர்! சிப்பாய் ஒருவர் பலி!!

தென்மராட்சிப் பிரிவில் உசனில் நேற்றுக் காலை 7 மணிக்கு வீதி துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டதாக பலாலித் தலைமையகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இத் தாக்குதலில் படையில் ஒருவர் உயிரிழந்ததாகவும், 3 படையினர் காயமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அத்தாஸுக்கு பயமுறுத்தல்:

## 2 விமானப்படையினரும் பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, மே 9

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் இராணுவ விமர்சகரான இக்பால் அத்தாஸுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பாக கைதான இரு விமானப் படையினரும் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் சிலர் கைது செய்யப்படவிருப்பதால் இவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது என முறைப்பாட்டாளர் தரப்பு சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

எனினும் இரகசியப் பொலீஸார் தரப்பில் பிணை அனுமதிக்கு ஆட்சேபனை ஏதும இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தலா ஐம்பதாயிரம் ரூபா ரொக்கம் மற்றும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல கங்கொடவில்ல நீதிவான் அனுமதியளித்தார். (உ-21)

## குளியாப்பிட்டியில் தொலைத்தொடர்பு நிலையம் குண்டு வெடிப்பினால் சேதம்!

கொழும்பு, மே 9

குளியாப்பிட்டியில் அமைந்துள்ள ரெலிக்கொம் தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்புக் காரணமாக அந்த நிலையத்தின் பின் பகுதியில் இயங்கிய ''மொபிட்டர்'' பரிவர்த்தனை நிலையமும், உபகரணங்களும் சேதமடைந்தன.

இந்த நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்ட முள்ளு வேலியை வெட்டி உள் புகுந்தவர்கள் இந்தக் குண்டை வைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

அண்மையில் களுத்துறை மத்திய தொலைபேசி நிலையத்தில் குண்டு வெடிப்பு இடம் பெற்ற பாணியிலேயே இந்தக் குண்டு வெடிப்பும் இடம் பெற்றதாக பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்புக் குறித்து ஆராய விசேடகுழு கொழும்பில் இருந்து நேற்று அங்கு சென்றுள்ளது.

தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் அனுரா பிரியதர்ஷனவும் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

(உ-3-7-9-8-10-21)

## 'வெற்றி உறுதி' நடவடிக்கையின் இறுதிக் கட்டமே எஞ்சியுள்ளது!

### இராணுவத்தளபதி தளுவத்த கூறுகிறார்

கொழும்பு, மே 9

''வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் முக்கிய கட்டங்கள் முடிந்து விட்டன. தற்போது இறுதிக்கட்டமே எஞ்சியுள்ளது'' — என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''வெற்றி உறுதி'' நடவடிக்கையின் சிரமமான — முக்கிய — கட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன. மூன்றில் இரண்டு பங்கு பூர்த்தியாகி இறுதிக் கட்டமே எஞ்சியுள்ளது. இந்த இறுதிக் கட்டத்தைப் பூர்த்தி செய்ய 6 ஆயிரம் படையினர் தேவை. அதற்காகவே தப்பி ஓடிய படையினருக்கு பொது மன்னிப்பு வழங்க முன் வந்துள்ளோம். அவர்களுக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம்.

புதியவர்களை படைக்குச் சேர்த்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களைப் போர் முனையில் ஈடுபடுத்துவதற்கு காலம் செல்லும்.

எனினும் பாடசாலைகளை விட்டு விலகுவோருக்கு இராணுவத்துறை சம்பந்தமான விளக்கம் அளிக்கவிருக்கிறோம். இத்தகைய திட்டம் மேற்கு நாடுகளிலும் நடைமுறையில் உள்ளது.

இத் திட்டம் தெற்கில் மட்டுமல்லாமல் வடக்கு—கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப் படும்—என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
சங்கப் பொதுச்சபை அங்கத்தவர்களின்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(30 - 05 - 1998)

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 30-05-98 சனிக்கிழமை காலை (இலங்கை நேரம்) 11.00 மணிக்கு சங்கத்தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (39, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) நடைபெறவிருக்கின்றதென் பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உபவிதி 26 இல் 7 ஆவதின் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின், அப் பிரேரணைப் பிரதியொன்றை 20-05-98 - க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட பிரதி பின்னர் கிடைக்கப்பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாதென்பதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

த. சிவசுப்பிரமணியம்
மாவட்ட தலைவர்

ந. பாலவிநாயகர்
மாவட்ட செயலாளர்

(சி/3706)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பரராசசிங்கம்

(சின்னராசா)

சங்குவேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை பரராசசிங்கம் 6-5-98 அன்று காலமானார்.

இவர் சின்னத்துரை செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், கணேஸ், கமலாவதி (கொழும்பு), பட்டு, மகிழ்மலர், பூபதி, சின்னக்கிளி, வீரசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் மகாலிங்கம், ஐயாத்துரை (சவுதிஅரேபியா), கதிரவேலு, அலஸ்ரன் (பிரதேச சபை, சண்டிலிப்பாய்), வீரசிங்கம் — லதா (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீவதாசன் (பாபுஜி), பருசன் (கோபி), மஞ்சிகா, துஷான், தனுசியா, ஆன்சிந்துஜா, ஆன்அனோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், தபேசனின் (கனடா) பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-05-98) சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. மகாலிங்கம்
(மைத்துனர்)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(55881)

## சின்னத்தம்பி நடராசா

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரான சின்னத்தம்பி நடராசா 8-5-98 இல் காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவனடியான் (I. C. R. C.), சிவேந்திரன் (ஜேர்மனி), சித்திரலதா (ஆசிரியை, யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. கந்தசாமி (அதிபர், யா/மீசாலை விக்னேஸ்வரா ம. வி.), டிலானி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், அருணியா, அன்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-5-98) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந. சிவனடியான்
(மகன்)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(55884)

## நோபேட் பங்கிராஸ்

சில்லாலை தெற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட நோபேட் பங்கிராஸ் நேற்று முன்தினம் (07-05-98) கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர், கிறிஸ்தோப்பர் கத்தரீனம்மா தம்பதிகளின் புதல்வரும், மானிப்பாய், சுதுமலையைச் சேர்ந்த கந்தையா தம்பதிகளின் மருமகனும், சறோவின் அன்புக் கணவரும், பிரகாஸ், கஜன், குகன் ஆகியோரின் அருமைத் தந்தையும், எட்வேட் பங்கிராஸ் (பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்), காலஞ் சென்ற நோபேட் பங்கிராஸ், அல்பேட் பங்கிராஸ், மேரி ஜெயநாயகி, வில்பட் பங்கிராஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேரிதிரேசம்மா (றோஸ்), ராகினி, ஸ்ரனிஸ்லோஸ், வலன்ரீனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எட்வேட் பங்கிராஸ்
(சகோதரர்)

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(55878)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், மே 9

தொண்டமானாறு சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்மதி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (இ-3)

## இலக்கிய திரை விருந்து

யாழ்ப்பாணம், மே 9

தமிழ் இலக்கிய அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இலக்கிய திரைவிருந்து ஒன்று இன்றும் நாளையும், வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கரவெட்டி கல்விக்கோட்ட பண்டிதர்பயிற்சிநெறியாளர் சார்பில் ஏற்பாடாகியுள்ள இந்நிகழ்வில் ''கர்ணன்'', ''சம்பூரணராமாயணம்'' ஆகிய படங்கள் காண்பிக்கப்படும். (இ-3)

## வதிவிட வேளாண்மை மதிப்பீடு

சுன்னாகம், மே 9

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்திய வதிவிட வேளாண்மைப் போட்டியை விவசாய திணைக்கள உத்தியோகஸ்தர்கள் கடந்த வாரம் மதிப்பீடு செய்தனர். இதில் முதன்மை வகிப்பவர்களுக்கு அடுத்த மாதம் பரிசில்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-27]


## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

அகல வெண் திரையில்

விஜய், சங்கீதா நடித்த

பூவே உனக்காக

காட்சி 10- 30 — 2-30

(55872)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

சனி, ஞாயிறு

T. ராஜேந்தர், ராஜீவ், சங்கர், ஜோதி நடித்த

ரயில் பயணங்களில்

திங்கள், செவ்வாய்

எம். ஜி. ஆர். நடித்த

ஊருக்கு உழைப்பவன்

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

தொலை பேசி இல.
070 - 212223

(55326)

## சிவா திரையில்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவன் கோயிலடி)

காட்சி 10-30 — 2-30

கார்த்திக், மீனா, ஹீரா நடிக்கும்

அரிச்சந்திரா

(சி/3712)

## வீடு வாடகைக்கு

நாவலர் வீதியில் நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

[illegible]
154, [illegible]
யாழ்ப்பாணம்.

(55886)


யாழ். மாவட்ட

தனியார் பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம் (வ - து)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்: 30-05-98 சனிக்கிழமை மு. ப. 10 மணி
இடம்: சங்கப் பணிமனை

விடயங்கள்:
1. ஆண்டறிக்கை
2. புதிய கேள்வி கோரல்
3. தலைவர், நிர்வாகசபை தெரிவு
4. பிற விடயங்கள்

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தந்து புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

செயலாளர்.

(55841)

## அறிவித்தல்

சகல ப. நோ. கூ. சங்கங்களினதும், 2ஆம் படிக் கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை (10-05-98) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு கூட்டுறவு அமைச்சின் செயலாளர் அவர்கள் பங்குபற்றி முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

செ. கு. சண்முகநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

(சி/3699)

## காணவில்லை

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த

திரு. கதிரன் பொன்னுத்துரை
(வயது 68)

உழவு இயந்திர சாரதி (ரைக்ரர் றைவர்)

என்பவரை கடந்த 4-5-98 (திங்கள்) முதல் காணவில்லை. கடைசியாக பச்சை நிற சாரமும், பெனியனும் அணிந்திருந்தார். அவர் பற்றிய தகவல் அறிந்தால் கீழ்க்காணும் முகவரிக்கு உடன் அறிவிக்கவும்.

தகவல்:
செல்வி பொ. தயாகாந்தி
மே/பா. க. பொன்னுத்துரை
மதவடி ஒழுங்கை,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி/3707)

## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

04 — 05 — 98 அன்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தின் பிரகாரம் யாழ். பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸிடம் தொண்டராசிரியர்களின் விவரங்களை எடுத்துக் கொடுக்க வேண்டியிருப்பதால், 10 - 05 - 98 அன்று 9 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை முன்பாக) ஒன்று கூடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சகல தொண்டர் ஆசிரியர்களும் தங்களை உறுதிப்படுத்தும் அதிபரின் கடிதத்துடன் வரவும். 10 ஆம் திகதி ஒன்று கூடலும், 11, 12 ஆம் திகதிகளில் விவரங்களும் சேகரிக்கப்படும்.

இலங்கை வித்தியாலய அதிபர்,
சங்க தலைவர்,
தொண்டர் ஆசிரியர்களும்.

(சி/3704)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபர்
அருட் திரு. எம். ஜெறோ செல்வநாயகம்
அவர்களின் அருமைத் தாயார்

திருமதி யேற்றுட்
இராசம்மா மனுவற்பிள்ளை

அவர்கள் கொழும்பில் காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(55880)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் குண்டு வெடிப்புகளும் அவை எழுப்புகின்ற சந்தேகங்களும்!

குடாநாட்டில் ஊடுருவியிருக்கும்புலிகள் அவ்வப்போது பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். அவை குடாநாட்டு மக்களுக்கும் படையினருக்கும் பரிச்சயமானவைதான்.

ஆனால் அத்தகைய தாக்குதல்கள் போலல்லாமல் இடம்பெறும் வேறு சில குண்டு வெடிப்புகள், கிரனேட் தாக்குதல்கள், கிளைமோர் தாக்குதல்கள் போன்றவை குடாநாட்டு மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையும் வினாக்களையும் எழுப்பத் தவறவில்லை.

கடந்த 12 ஆம் திகதி யாழ். நகரில் புதுவருடக் கொள்வனவில் ஈடுபட்டிருந்த மக்கள் மத்தியில் வெடித்த கிரனேட்டும் இவ்வாறு பல்வேறு சந்தேகங்களையும் கிளப்பியது.

இக்குண்டு வெடிப்பில் தனது குடும்பத்துடன் புது வருடத்துக்கு உடுப்பு வாங்க வந்த ஆசிரியை ஒருவர் கொல்லப்பட்டார்; 19 அப்பாவிகள் படுகாயமடைந்தனர்.

இதேபோன்ற தாக்குதல் ஒன்று கடந்த இரண்டாம் திகதி கொடிகாமம் நகரின் மத்தியில் சந்தைப் பகுதியில் இடம்பெற்றது. அக் குண்டு வெடிப்பில் பத்து அப்பாவிகள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களுக்குப் புலிகளே காரணம் என்றும் —

மக்கள் ஆதரவை இழந்த புலிகள் விரக்தி, நம்பிக்கையிழந்த தன்மை ஆகியவை காரணமாக வேறு வழியின்றி மக்கள் மீது இத்தாக்குதலை நடத்தியதாகவும் —

படைத்தரப்பு அறிவித்தது.

ஆனால் புலிகள் அந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துவிட்டு படைத்தரப்பே இத்தகைய குண்டு வெடிப்புக்களுக்குக் காரணம் என அறிவித்தனர்.

எது சரி, எது பிழை என்பதனை கண்டுபிடிப்பதோ, தீர்ப்புக்கூறுவதோ பொது மக்களாலோ இராணுவ விமர்சகர்களாலோ இயலாத காரியம். என்றாலும் இத்தகைய சம்பவங்கள்தொடர்பாக சில கேள்விகளை எழுப்பி ஆராய முடியும்.

அரசுப் படைகள் கூறுவது போல யாழ். குடாநாட்டின் மீதான தமது கட்டுப்பாட்டை இழந்து வருவதால் தமக்கு ஏற்பட்ட விரக்தி, நம்பிக்கையிழந்த தன்மை ஆகியவை காரணமாக புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக வைத்துக் கொண்டாலும் கூட—

அத்தாக்குதலை நடத்துவதற்கு வருடப் பிறப்புக்கு புத்தாடைவாங்க வந்த மக்களைப் புலிகள் ஏன் குறி வைக்க வேண்டும்? அதுவும் அப்பகுதியில் சீருடை தரித்த எவரும் இல்லாதபோது — அங்கு ஏன்புலிகள் தாக்குதல் நடத்த வேண்டும்?

படையினர் நடத்திய மாபெரும் இசை நிகழ்ச்சிகள் போன்றவை யாழ்ப்பாணத்தில் நடக்கும் போது—மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டிருக்கும் போது— அங்கு எதுவும் செய்யாத புலிகள், யாழ். நகருக்குள் வந்து மட்டும் ஏன் கிரனேட் எறிய வேண்டும்?

படையினர் நடத்திய இசை நிகழ்ச்சிகளின் போது பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம் இருந்ததால் அங்கு புலிகள் தாக்குதல் நடத்த முடியாமற் போயிருக்கலாம் என்று சிலர் கூறினாலும், நேரில் நிலைமைகளைப் பார்த்தவர்களுக்கு உண்மை புரிந்திருக்கும்.

துரையப்பா விளையாட்டரங்குக்கு அன்று மாலையில் வந்தவர்கள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இருள் சூழ்ந்ததும் நிலைமை மாறிவிட்டது. வந்தது யார், போனது யார் என்று தெரியாத நிலைமை. ஆட்டமும் பாட்டுமாக — இங்குமங்குமாக— இருளில் அள்ளுண்டு திரிந்த கூட்டத்தவர் மத்தியில் கிரனேட்டுடன் ஒருவர் வந்தால் கூட யாருக்கும் தெரிந்திருக்காது. நிலைமை அப்படி.

யாழ்ப்பாணத்தில் படையினரின் ஏற்பாட்டில் நடக்கும் பெரிய பெரிய இசை நிகழ்ச்சிகளின் போதோ, விளையாட்டுப் போட்டிகளின் போதோ மக்கள் கூட்டம் திரளும் போது, அங்கு இதுவரை குண்டுத்தாக்குதல் எதையும் நிகழ்த்தாத புலிகள், யாழ். நகரில் உடுபுடைவை வாங்க வந்த அப்பாவிகள் மீது ஏதேனும் காரணமின்றி குண்டுத்தாக்குதலை நடத்தியிருப்பார்கள் என்று கூறுவதை நம்புவது கஷ்டமாக இருக்கின்றது.

குடாநாட்டு மக்களைக் குறிவைத்தோ, மக்களை பெரியளவில் நேரடியாகப் பாதிக்கும் விதத்திலோ தாக்குதல்களை நடத்த மாட்டோம் என்று புலிகள் தரப்பில் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் படைத்தரப்பே இக் குண்டுத்தாக்குதல்களை நடத்தியிருக்க



வேண்டும் என்றுபுலிகள் கூறுவதையும் ஏற்கக் கஷ்டமாக உள்ளது.

யாழ். நகரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படைத்தரப்பு, தமது கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் அப்பாவிகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தும்— கட்டு மீறிய நிலை—காணப்படுகின்றது என்பதை வெளியுலக்கு காட்ட விரும்பமாட்டார்கள்.

இத்தகைய குண்டு வெடிப்புத் தாக்குதலின் குற்றச்சாட்டை புலிகள் மீது சுமத்தி, அவர்கள் மீது மக்களுக்கு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம் என்று படைத்தரப்பு எண்ணியிருக்கலாம் என்று ஒரு பேச்சுக்குக் கூறினாலும் கூட—

அத்தகைய சம்பவங்கள் 'பூமராங்' மாதிரி திரும்பவும் வந்து— குடாநாடு மீதாக படையினரின் அதிகாரத்தை சர்வதேச மட்டத்தில் கேள்விக் குறியாக்கி— திருப்பித் தாக்கும் என்பது படைத்தரப்புக்குத் தெரியாததல்ல என்பதால் அவர்கள் அவ்வழியை நாடியிருக்க மாட்டார்கள் என்று கருதலாம்.

அப்படியானால் இத்தகைய தாக்குதல்களை நடத்துபவர்கள் யார்?

இது தான் படைவட்டாரங்கள் மிகக் கவனமாக ஆராய வேண்டிய விடயமாகும்.

இவ்வாரம் பலாலி வீதியில் கோண்டாவில் பகுதியில் நடந்த கிளைமோர் தாக்குதலும் கூட இத்தகைய சில சந்தேகங்களைக் கிளப்பத் தவறவில்லை.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை பலாலி வீதி படையினருக்கு மிக முக்கியமான போக்குவரத்துப் பாதையாகும், அரச அதிகாரிகள், படையினர் மட்டுமல்லாமல் குடாநாட்டின் மூத்த படைத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் குடாநாடு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள மூன்று டிவிஷன் இராணுவப் படையணிகளின் பொதுக் கட்டளைத் தளபதிகளான மேஜர் ஜெனரல் சாந்த கோட்டகொட, மேஜர் ஜெனரல் சூள செனிவிரத்ன. மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன போன்ற படை உயரதிகாரிகளும் பல்வேறு பிரிகேடியர்களும் அவ்வப்போது பயன்படுத்தும் மிக முக்கிய பாதை இதுவாகும்.

தினசரி காலையில் பாதை இருமருங்கும் விசேட இராணுவப் படை அணிகளால் துப்புரவு செய்யப்பட்டு பாதை 'கிளியர்' என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இப்பாதை வழியாக இராணுவ வாகனங்கள் தமது போக்குவரத்தை ஆரம்பிப்பது வழமை.

சம்பவம் நடந்த 4 ஆம் திகதியன்று காலையில் அச்செழுவில் உள்ள 51 ஆவது படையணியின் கட்டளைத் தலைமைப்பீடத்தில் கட்டளைத்தளபதிமேஜர்ஜெனரல் சாந்தகோட்டேகொட தலைமையில் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற இருந்தது.

51 ஆவது படையணியின் கீழ் வரும் சகல பிரிகேட்டுகளின் கட்டளைத் தளபதிகளும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படையணியின் கட்டளைத்தளபதியான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸும் கூட்டத்தில் பங்குபற்றவிருந்தார்.

அச்செழுவில் உள்ள தமது படையணித் தலைமையகத்துக்கு அவர் செல்வதாயின் பலாலி வீதியையே பயன்படுத்த வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

அன்று காலையில் அச்செழுக் கூட்டத்துக்குப் புறப்படுவதற்காக பிரிகேடியர் மெண்டிஸ் தயாரான போது யாழ். கல்வி வலயம் 1 அலுவலகத்துக்கு முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் நடத்திய மறியல் போர் குறித்தும்—

தொண்டர் ஆசிரியர்கள் கல்வி அலுவலக வாயிலை மறித்து போராட்டம் செய்வதால் கல்வி அலுவலகத்துக்குள் ஊழியர்களோ, அதிகாரிகளோ தங்கள் பணிக்காகச்செல்ல முடியாதிருப்பது குறித்தும்—

அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

[illegible] தமது வாகனத்தில் கல்விப் பணிப்பாளர் என். சுந்தரலிங்கத்தையும் ஏற்றிக்கொண்டு கல்வி அலுவலகத்துக்கு விரைந்தார் பிரிகேடியர் மெண்டிஸ்.

அங்கு தொண்டர் ஆசிரியர்களின்பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் பேசி சுமுக நிலைமையை ஏற்படுத்துவதற்கு நேரத்தைச் செலவிட்டதால் அச்செழுக் கூட்டத்துக்கு பிரிகேடியர் மெண்டிஸ் தாமதமானார்.

ஆனால் அதற்கிடையில், கூட்டத்துக்கு தாமதமாவது குறித்தும் உடனடியாக அச்செழுவுக்கு விரைந்து வரும்படியும் 'வோக்கிடோக்கி' மூலம் பிரிகேடியர் மெண்டிஸின் வாகன அணிக்கு பல தடவைகள் அச்செழுவிலிருந்து தகவல் அனுப்பப்பட்டது. இத்தகைய தகவல்

## பாசுபதன்

பரிமாற்றம் சங்கேத மொழியில் அமைந்தாலும் வேறு 'வோக்கி டோக்கி' களிலும் அது கேட்கப்பட்டிருக்கக் கூடும்.

யாழ். கல்வித்திணைக்களக் கூட்டத்தை முடித்துக் கொண்டு பிரிகேடியர் மெண்டிஸ் தமது வாகன அணியில் அச்செழு நோக்கி விரைந்து கொண்டிருந்த சமயமே முன்னால் சென்ற — பிரிகேடியர் மெண்டிஸின் வாகனத்தை ஒத்த — 'பிக் — அப்' வாகனம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நேரத்தில் ஏற்பட்ட பிசகு காரணமாக அந்த வாகனத்தின் கண்ணாடிகள் மட்டுமே சேதமடைந்தன. வேறு பெரிய பாதிப்புகள் ஏற்படவில்லை.

இச்சம்பவம் நடந்த சமயம் சற்றுக் தொலைவில் பின்னால் பிரிகேடியர் மெண்டிஸின் வாகனம் வந்து கொண்டிருந்ததாக ஒரு தகவலும் —

சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பாலேயே அவரின் வாகனம் வந்தது என மற்றொரு தகவலும் — தெரிவிக்கின்றன.

பிரிகேடியர் மெண்டிஸின் வாகனத்துக்கு இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக பொதுவாகப் பேசப்படுகின்றது.

சரி. தாக்குதலை நடத்தியவர்கள் யார்? புலிகளா?— இதுதான் இப்போது கிளப்பப்படும் கேள்வி.

புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாகவும் —

பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனம் அந்த இடத்தில் அந்தச் சமயம் சென்றிருந்தால் அத்தாக்குதலுக்கு பொதுமக்களின் வாகனமும் இலக்காகி இருக்கும் எனவும்—

ஐ. நாவின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு சிறுவர் விவகாரங்களை ஆராயும் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள வேளையில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும்—

தெரிவித்து புலிகளைக் சண்டிக்கும் தொனியில் பலாலி படைத் தலைமையகம் அடுத்த நாள் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

பலாலி வீதி அதிக பாதுகாப்புக்கும் கண்காணிப்புக்கும் இடையில் பேணப்படும் ஒருபாதை. அந்தப்பாதையை இராணுவத்தை மீறி புலிகள் நெருங்குவதோ அங்கு ஒரு கிளைமோர் தாக்குதலை நடத்துவதோ மிகக் கடினமானதாகும். கடந்த ஏழெட்டு மாதங்களாக அப்பாதையோரத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தகவலே இல்லை. பாதையோரத்தில் நின்று கிரனேட் எறியலாம். ஆனால் கிளைமோர் கண்ணி ஒன்றைப் பொருத்தி காத்திருந்து வெடிக்க வைப்பது என்பது சிரமமானதாகும்.

ஆகவே இத்தாக்குதலை புலிகள் நடத்தினார்களா? அதற்கு வாய்ப்புண்டா என்பதை ஊர்ஜிதப்படுத்துவது கஷ்டமாகவே உள்ளது. அத்துடன் தாக்குதல் உரிய இலக்கை எட்டாமல் பிழைத்ததும் கூட கைதேர்ந்த புலி வீரர் ஒருவரின் வேலைதானா இது என்ற சந்தேகத்தையும் கிளப்புகின்றது.

ஐ நா. செயலரின் விசேட பிரதிநிதி யாழ். வந்து நிற்கையில் இத்தாக்குதல் இடம் பெற்றதும் வேறு விதமான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

தவிரவும், தாக்குதல் இலக்கு பிரிகேடியர் மெண்டிஸ்தானா என்பது குறித்தும் படை வட்டாரங்களில் முரண்பாடான கருத்து நிலவுவதையும் அறிய முடிகின்றது. சிலவட்டாரங்கள் 'இது இலக்கு பிழைத்த உள்வீட்டு வேலை' யாக இருக்கலாம் என மனதுக்குள் நமைவதாகவும் தகவல்.

இச் சம்பவம் குறித்து விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்று விசாரணைகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அறிபவருகின்றது.

இத் தாக்குகல் சம்பவம் குறித்து புலிகள் தரப்பும் தகவல் எதனையும் தெளிவு படுத்தக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எது எப்படியென்றாலும் பல மர்மங்களையும், சந்தேகங்களையும், வினாக்களையும் கிளப்பியுள்ள இந்தத் தாக்குதல் குறித்து என்றோ ஒருநாள் விவரங்கள் வெளியாகலாம். அல்லது லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பகடுவ மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளைப் பலிகொண்ட அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம் போல தொடர்ந்து புதிய புதிய தகவல்கள் வெளியாகி, மக்களைக் குழப்பும் நிலை தொடரவும் கூடும்.

★ ★ ★

## படைக்கு ஆள்திரட்டல்

படைத்தரப்பு பெரும் ஆள்பற்றாக் குறையை எதிர்நோக்குவது குறித்து இரண்டொரு வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

உடனடியாக 15 ஆயிரம் துருப்புகளையாவது புதிதாக இராணுவத்துக்குச் சேர்த்தால்தான் அடுத்துவரும் காலத்தில் எதிர்நோக்கக் கூடிய நெருக்கடிகளைச் சமாளிக்க முடியும் என்ற நிலைமை படைத்தரப்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.

வன்னியில் அகலக் கால் வைத்தமை புலிகளின் தொடர் தாக்குதல்கள் காரணமாக படைகளில் இருந்து ஆயிரக் கணக்கில் ஆள்கள் தப்பியோடியது போன்றவை படைத்தரப்புக்கு பெரும் ஆள்பற்றாக்குறையை ஏற்படுத்தியிருக்கின்றன,

இதுவரை காலமும் 'பாடசாலை மாணவர்களை — சிறுவர்களை — புலிகள் போருக்கு அனுப்புகிறார்கள்' என்று பிரசாரம் செய்து வந்த இலங்கை அரசுத் தரப்பு இப்போது வேறு வழியின்றித் துருப்புகளைத் திரட்ட பாடசாலைகளில் தானே பிரசாரம் செய்யப் போவதாக சில செய்திகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும்

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின் நிதி வளர்ச்சிக்காக நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி.

இடம்: ஆவரங்கால் சவாரித் திடல்

காலம்: 10-05-98 ஞாயிறு

பிற்பகல் 1.00 மணி

அன்பளிப்பு: 10 ரூபா.

(55830)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 31 — 12 — 1919



மறைவு: 01 — 05 — 1996

அமரர்

**கந்தையா மார்க்கண்டு**

திதி: 09 - 05 - 1998


கருணையுள்ளம் கொண்டவராய் வாழ்ந்தீர் ஐயா
கடமைதனை உயிரெனவே கொண்டீர் ஐயா
கணப்பொழுதில் எமைவிட்டுச் சென்றீர் ஐயா
காண்போமா உம் முகத்தைப் பாரினிலே?

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(55863)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அரியாலையூர்

**அமரர் கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்**

(ஜெகன்)

(யாழ். பரி. யோவான் கல்லூரி A/L மாணவன்)

மலர்வு: 1970—11—27

உதிர்வு; 1988—05—09

எங்கள் குலக் கொழுந்தே!
பெற்றவர், சோதரர் தவித்து அழ
பாதியிலே சென்றதேன்?
ஆண்டுகள் ஐயிரண்டு ஆனதையா
ஆறாகப் பெருகுதையா உன் நினைவு.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில்
மகேஸ்வர பூசை நடைபெறும்.

உன் நினைவுடன் என்றும்:
அப்பா, அம்மா,
சகோதரிகள். சகோதரன்,
மச்சான்மார், மருமக்கள்,
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள், அயலவர்கள்.

தகவல்:
பொ. கனகரத்தினம்,
இல. 441, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/3686)

## சமூக விஞ்ஞான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 9

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடல் தொடரின் மூன்றாவது அமர்வு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஏ.ஜே. கனகரட்னா தலைமையில் நடைபெறவுள்ளது.

"சமூகம் பற்றியவிஞ்ஞான நோக்கு" என்னும் தலைப்பில் தொடக்க உரையை இ. முருகையனும், தொடருரையை கலாநிதி சபா.ஜெயராசாவும் வழங்குவர்.

(ஐ)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மே 9

நவாலி புலவர்வீதியிலுள்ள கல் ஒழுங்கை நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ளது.

இவ்வீதியை உடன் திருத்தித்தருமாறு கோரி நவாலியூரைச் சேர்ந்த மக்கள் கையெழுத்திட்டு மானிப்பாய் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் ஊடாக, செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர்ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (ஐ-185)

## நவாலிக்கு மின் வழங்க கோரிக்கை

வலி- தென்மேற்கு மே 9

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆயிரத்து 400 - க்கும் மேற்பட்ட குடும்பங்கள்வசிக்கும் நவாலிப் பகுதிக்கு மின் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நவாலி இளைஞர் வட்டம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மானிப்பாய் மற்றும் இதர பகுதிகளுக்கு மின் விநியோகம் ஏற்கனவே வழங்கப்படுகின்றபோதும் நவாலிப்பகுதி இருளில் மூழ்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-185)


## உடன் விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையில் உள்ள நகைத்தொழில் இயந்திரம், கம்பி, தகடு அரைக்கும் மெசின் மற்றும் டைமெசின், பரல் காப்புகுவட்டும் மெசின் அதற்குரிய இரு மோட்டார்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
ஐ. சுரேஸ்,
இல. 288,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(55853)

மில்க்வைற்
நீல சோப்




500 மேலுறைகளுக்கு
ஓர் அழகிய
துவாய் இனாம்.

மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

[சி/3681]


# குளிக்கச்சென்ற பெண்கள் மீது பொலீஸார் சேஷ்டை?

## தடுத்த முஸ்லிம் மீது சூடு

மட்டக்களப்பு, மே 9

பெண்கள் குளித்துக் கொண்டிருந்த கிணற்றடிக்கு செல்ல முயன்ற பொலீஸாரை தடுத்த முஸ்லிம் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு ஐயன் கேணியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் முகமட் கனிபா முகைதீன் பாபா (60 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

வயோதிபரின் வீட்டுக்கிணற்றில் சுற்றாடலில் உள்ள சில பெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் அருகில் இருந்த காவலரணில் பணியில் இருந்த பொலீஸ்காரர் ஒருவர் கிணற்றடிக்குச் செல்ல முற்பட்டார்.

கிணற்றடிக்குப் போகவிடாது அவரை அந்த முஸ்லிம் நபர் மறித்தபோது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. உறுப்பினர் செய்யது அலி சாகீர் மௌலானா பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் —

இல்லாவிட்டால் இத்தகைய சம்பவங்களுக்கு எதிராகப் போராட மக்கள் வீதிக்கு வந்து விடுவார்கள் என்றும்— அவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்தார்.

(இ-21-3)

## சிறுகதைப் போட்டியில் முதலிடம்

சுன்னாகம், மே 9

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி குமுதினி சதாசிவமூர்த்தி முதலிடம் பெற்றுள்ளார். கடந்த வியாழனன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க தலைமையில் நடைபெறவிருந்த பரிசளிப்புவிழாவில் இதற்கான பரிசு வழங்கப்படவிருந்தது.

[ஐ-27]

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

**விஜயராணி கந்தசாமி**

எமது ஆலய தர்மகர்த்தா சபையின்
கௌரவ செயலாளரும், எமது கழகத்தின்
கௌரவ பரீட்சைச் செயலாளரும் ஆகிய
சிவத்திரு. வ. கந்தசாமி
அவர்களின் அன்பு மனைவியார்

**திருமதி விஜயராணி கந்தசாமி**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எமது கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

தர்மகர்த்தா சபை
சைவசமய அபிவிருத்திக் கழகம்
வண்ணை சாந்தையர்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்.

(55868)


## முக்கிய அறிவித்தல்

26 - 04 - 98 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச் சுருள்கள் (Film Rolls) யாவும் பிரதியாக்கம் (Printing) செய்து வந்து விட்டன. இன்று படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம்மிடம்

Nikon - FM 2, Nikon FM10, Yashica FX3 போன்ற கமராக்கள் மற்றும் பிளாஸ் வகைகள், கமரா உபகரணங்கள், பிலிம்றோல், B/W பேப்பர் போன்ற பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

25 ஆண்டு அனுபவம் மிக்க 'PHOTOCHROME'
இன் தரம் வாய்ந்த வர்ணப் படங்களைப்
பெற்றிட நாடுங்கள்:

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

(சந்திரன்)
கிறிஸ்ரல் கட்டடம்,
புலோலி தெற்கு, புலோலி,
பருத்தித்துறை.

(கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து வல்லிபுரக் கோயில் செல்லும் வீதியில்)


ஞாயிற்றுக்கிழமை கடை திறக்கப்படும்.

(55852)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை புனித தோமையார் ஆலய திறப்பு விழா சிறப்பிதழ்

09 – 05 – 1998



ஆலயத்தின் புதிய தோற்றம்

## யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

புவியில் ரீதியான மறைவட்டங்கள், பங்கமைப்புகள் திருச்சபை வரலாற்றில் மிகவும் பழைமையான பாரம்பரியமாகும். சமூகவியல்ரீதியில் பங்கமைப்புப்பற்றி பல கேள்விகளை எழுப்பினாலும், திருச்சபையின் திருப்பணியில் மிகவும் பயனுள்ள அமைப்பு முறையாகும்.

பங்குகள் தலத்திருச்சபையின் உயிர்நாடி, தாய்த் திருச்சபையோடும் தலத்திருச்சபையோடும் உள்ள விசுவாச உறவை தொடர்புபடுத்தி வளர்க்கின்ற உந்துசக்திகள். திருச்சபையின் பணிகளை பரவலாக்குவதோடு மறைபரப்புப் பணியை காவிச்சென்று கையளிப்பவர்கள். மக்களின் அருட்சாதன வாழ்வின் மையம், கிறிஸ்துயேசுவின் விசுவாச வாழ்வின் அடித்தளம். புனித சின்னப்பர் குறிப்பிடுவது போல ஒவ்வொரு பங்கும் உயிருள்ள கட்டடங்கள்.

இறை திருவுளத்தால் பருத்தித்துறைப் பங்கின் புனித தோமையார் ஆலயத்தின் ஒருபகுதி வழிபாட்டிற்கு மக்கள் ஒன்று கூட ஆசீர்வதித்து திறந்து வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன், புதுப் புனித தோமையார் ஆலயத்தை கட்ட திட்டமிட்ட பணி பாரிய பொறுப்புமிக்கது. பாரிய திட்டமிடலும் பெரும் பொறுப்புமிக்க இப்பணியை இறைவன் வழிநடத்தலுக்குக் கையளிப்போம். எமது வழிபாட்டு ஒன்று கூடல்கள் அர்த்தமுள்ளவையாக இருக்கவேண்டும்.

தொடர்ந்து வரும் போர் அவலங்கள், மக்களின் இடப்பெயர்வுகள், கடல்வலயத் தடைச்சட்டம், தொழிற்துறை முடக்கம் இவற்றின் மத்தியிலும் இறைவன் மீதுள்ள தளராத நம்பிக்கையையும், பங்குமக்களின் தன்னம்பிக்கையையும் இந்நிகழ்வு சுட்டிக்காட்டுகிறது. இப்பணிக்கு திறந்த மனதுடன் கையளித்தவர்கள், பல்வேறுதுறைகளில் பங்காற்றியவர்கள் தற்போது எம்மத்தியில் இல்லாதவர்கள், இறந்தவர்கள், அனைவரையும் இவ்வேளையில் நன்றியோடு நினைக்கின்றோம்.

இறைவிசுவாசத்தில் உங்களோடு ஒன்றிணைந்து ஆசிரை வழங்குகின்றேன்.

இறைபணியில் உங்களோடு இணையும் ஆயர்
பேரருட்திரு, தோமஸ் சவுந்தரநாயகம்
ஆயர் யாழ்ப்பாண மறை மாவட்டம்.

## பங்குத் தந்தையின் ஆசி

பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தின் புதிய கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியைக் கண்டு களிகூரும் பெரும் பாக்கியம் பெற்றுள்ளோம். கருணையின் வடிவான இறைவன் நமக்குத் தந்த கொடைக்கு நன்றி கூறி அஞ்சலிப்போம். காலா காலமாக நல்லாதரவு தந்துதவும் எம்மக்களின் தாராள மனப்பான்மையைப் பாராட்ட வேண்டியது இன்றியமையாக் கடமையாகும்.

கடந்த பல வருடங்களாக பல்வேறு துயரங்களையும், தொழில் துறைகளில் அவர்கள் மேற்கொண்ட கஷ்டங்களையும் பாராமல் தங்கள் பாதுகாவலரின் ஆலயத்தைக் கட்டி எழுப்பவேண்டுமென்று தியாக உணர்வோடு ஆர்வங்கொண்ட ஒவ்வோர் உள்ளங்களையும் பாராட்டுவது எமது முக்கிய கடமையாகும்.

புனித தோமையாரின் துணை கொண்டு துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும், ஆழமான இறைவிசுவாசத்துடனும் இறைமக்களாக வாழ்ந்து வருவது கண்டு களிப்படைகிறேன்.

பி. எம். இம்மானுவேல்
பங்குத்தந்தை, பருத்தித்துறை.

## புனித தோமையார் ஆலய வரலாறு

இயேசுக்கிறிஸ்து தெரிந்து கொண்ட பன்னிரெண்டு திருத்தூதர்களில் புனித தோமையாரும் ஒருவர். ''தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகின்றேன்'' (யோவான் 20:21) என்ற இயேசுவின் வார்த்தைகளின் படி உலகம் எங்கும் அனுப்பபட்ட திருத்தூதர்களில் புனித தோமையாரும் ஒருவர்.

பரிசுத்த ஆவியின் வருகையின் பின் திருத்தூதர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்றார்கள். அதன்படி புனித தோமையார் இந்தியா வந்து அங்கு நற்செய்தி போதித்து, தமிழ் நாட்டில் மைலாப்பூர் என்ற இடத்தில் வேத சாட்சியாக இறந்தார். அவர் இலங்கைக்கும் வந்திருக்கலாம் என்று ஆதாரமான செய்திகள் உள்ளன. புனித தோமையார் இந்தியா — இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகிறார்.


பருத்தித்துறையில் கடலலை முத்தமிட்டு விளையாடும் முனையிலே வாழும் கிறிஸ்தவர்கள் தமது பாதுகாவலராக புனித தோமையாரைக் கொண்டு அவர் பெயரால் ஆலயம் எழுப்பி இறைவனுக்கு வழிபாடு செய்து வருகின்றார்கள். போர்த்துக்கீசர் காலத்திலிருந்தே பருத்தித்துறையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். புனித சவேரியார் காலத்தில் அவர் பருத்தித்துறைக்கு வந்து பிரசங்கம் செய்தார் என்பதற்கான ஆதாரம் ஒன்று இருந்தது. பருத்தித்துறையில் பஸ்தரிப்பு நிலையத்தில் ஓங்கி வளர்ந்திருந்த புளிய மரத்தின் கீழ் புனித சவேரியார் பருத்தித்துறைக்கு வந்து பிரசங்கம் செய்தார் என்பதற்கான நடுகல் ஒன்று நாட்டப்பட்டிருந்தது. ஆனால் இராணுவ நட



வடிக்கையின் போது குண்டுத் தாக்குதல்களால் அவ்விடம் அழிக்கப்பட்டது. அழிக்கப்பட்ட இடிபாடுகள் அகற்றப்பட்டபோது அக்கல்லும் அகற்றப்பட்டு விட்டது.

பருத்தித்துறைப் பங்கு 1856 இல் வலிகாமப் பங்குடனும், 1875 முதல் பச்சிலைப்பள்ளி பங்குடனும் இணைந்திருந்தது. 1912 முதல் தனிப் பங்காக இயங்கத் தொடங்கியது. பருத்தித்துறை முனையில் வாழ்ந்தகிறிஸ்தவ மக்கள் 1860 இல் புனித தோமையார் பெயரால் ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டி 1862 ஆம் ஆண்டில் அவ்வாலயத்தில் வழிபாடு தொடங்கினர். வழிபாடு நடத்தும் பங்குக்குரு தங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க



பழைய ஆலயம்

## பொருளாளரின் வாழ்த்து

பருத்தித்துறை முனை கடற்கரைப் பகுதியில் அமைந்திருக்கும் புனித தோமையார் ஆலயம் 136 வருடங்கள் பழைமை வாய்ந்தது. சுண்ணாம்பினால் கட்டப்பட்டதினால் பலமுறை புனரமைப்புச் செய்தும் வழிபாட்டிற்கு உகந்ததாக அமையவில்லை. இதனால் ஆலயமக்கள் புதிய ஆலயம் அமைக்கவேண்டுமென்று 1982 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5 ஆம் திகதி அப்போதைய பங்குத்தந்தை றெஜி இராஜேஸ்வரனுடன் இணைந்து அத்திவாரம் இடலாயினர். நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலினால் ஆலயக் கட்டடவேலைகள் தாமதமாகின.

ஆலயக் கட்டட வேலைகள் பூர்த்தியாகி, மக்கள் வழிபாட்டிற்காக இன்று திறந்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆலய மக்களின் ஒற்றுமையினாலும் அவர்களின் பங்களிப்பின் மூலமும் தான் இதைச் சாதிக்க முடிந்தது.

புனித தோமையாரின் விசுவாச வாழ்வில் நாமும் என்றும் நிலைத்து இருக்க இந்த ஆலயம் ஒரு கலங்கரை விளக்காக அமையும்.

பி. வின்சன் டீபோல்
(பொருளாளர்)
புனித தோமையார் ஆலயசபை,
பருத்தித்துறை.

## முன்னாள் பங்குத்தந்தை ஆசி

பருத்தித்துறை கடற்கரை வீதியில் வாழும் கத்தோலிக்க மக்கள் தங்கள் வழிபாட்டுக்காக கட்டியெழுப்பும் புதிய தோமையார் ஆலயத்தின் பெரும்பகுதி முடிக்கப்பட்ட நிலையில், திறப்பு விழா கொண்டாடுவது அந்த ஆலயத்துடனும் அதன் மக்களுடனும் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கும் எனக்குமிக்க மகிழ்ச்சிதரும் ஒருநிகழ்வாக உள்ளது.

போரின் வடுக்கள் இன்னும் எம்மை விட்டு நீங்கவில்லை. எம்மைச் சூழ்ந்து எங்கும் அழிவுகள், சிதைவுகள் பரந்து கிடக்கின்றன. அப்படி இருந்தும் வானளாவிய பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டி எழுப்பியது ஒரு பெரும் சாதனையே. அதன் பெருமை அங்கு பணியாற்றிய ஆற்றுகின்ற பங்குத்தந்தையர்கள், ஊர்மக்களையே சாரும். அவர்களது தணியாத ஆர்வம், தாராளதன்மை, அயராத உழைப்பு ஒரு கனவை நனவாக்கியுள்ளது. அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

அருட்திரு. ம. றெஜி இராஜேஸ்வரன்
அதிபர், புனித மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.

FRANCIS ENTERPRISES
S. 8, Central Super Market Complex
2nd floor, Colombo-11
T. Phone: 434475, 344584
BRANCHES:
FRANCIS ENTERPRISES
Genaral Merchant,
Grand Bazaar,
Mannar.
T. Phone: 023-2135

மஹாலக்ஷ்மி
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

பிரான்சிஸ்றேடர்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

கிருஷிகேசன் கலையகம்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சில நாள்கள் மட்டும் பாவித்த மிகவும் நல்ல நிலையில் உள்ள ஒலிவெட்டி ஆங்கில தட்டச்சு இயந்திரமும், மெலோடிக்கா வாத்தியக் கருவியும் உடன் விற்பனைக் குண்டு. விவரங்கட்கு: இல. 03, மருதடி வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்)

[55825]

இறைச்சிக்கோழி புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல15, 6ஆம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்).

[55857]

குசன செற்றியும், சாப்பாட்டு மேசையும், 6 குசன் கதிரைகளும், சிறிராம் ஹொண்டா 650 ஜெனரேற்றரும், வீடியோலைற்றும், மின்ரெக்ஸ் 7000L கமராவும், 5 சிறி தொடர் இலக்க மொறிஸ் ஒக்ஸ்போட் காரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A G. செல்வராஜா, 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

[55858]

பிறிமா பிறவுண் ஒரு நாள் பேட்டுக் குஞ்சும், 45 நாள்கள் நிரம்பிய வயதுடைய குஞ்சும் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். [சி/3688]

1/½ மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய ஆண், பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மகேந்திரன், 183, சென். ஜேம்ஸ் லேன், யாழ்ப்பாணம் (புனித யாகப்பர் ஒழுங்கை). (55821)

வீட்டுத் தளபாடங்கள், பெட்டகம் உட்பட, மின் உபகரணங்கள், குசினிச் சாமான்கள், எவர்சில்வர், புத்தகங்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 11/1, நாயன்மார் வீதி, நல்லூர். (முத்திரைச்சந்தைக்கு அருகில்) (55733)

## உடன் விற்பனைக்கு

பிறிமா கைலன் பிறவுண் ஒரு நாள் பேட்டுக் குஞ்சுகளும், பிறவுண்சேவல் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' மார்க்கற் கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

[55791[

## ஆங்கில சிங்களககல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம், சிங்களம் தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு: 730, C/O உதயன் யாழ்ப்பாணம்.

[55286]

## வாடகைக்கு

திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் இருவளாகப் பெண் பிள்ளைகள் தங்கக் கூடிய வசதியான Annex வாடகைக்கு உண்டு. விவரங்கட்கு: S. வடிவானந்தம் (சுப்பே பிறாங் கடைக்குப்பக்கத்தில் உள்ள கடையில் விசாரிக்கவும்) பலாலி வீதி, திருநெல்வேலி. [55824]

## விண்ணப்பப் படிவம்

ஆசிரியர் கல்விக் கல்லூரிக்கான படிவம் விற்பனையாகிறது. விவரம் சித்திரை மாதம் 29 ஆம் திகதி தினகரன், 30 ஆம் திகதி வீரகேசரியைப் பார்க்கவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(55402)

## தவறிவிட்டது

கதிர்காமத்தம்பி ரகுராம் என்பவரது 710551308V இலக்கமுடையதேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன யாழ். நகர்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். காவேரி சில்க்ஸ், பெரிய கடைவீதி, யாழ்ப்பாணம்.

(55842)

செல்வம் ஜெயரெட்ணம் 2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி என்பவரது விசேட அடையாள அட்டை [091202492] 06-05-98 அன்று புதன்கிழமை அல்லைப்பிட்டிச் சந்திக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தொலைந்து விட்டது, கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

[55847]

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி [புறோயிலர்] சில்லறையாக விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும். (காலை தொடக்கம் மாலை வரை). Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely. [55837]

## கோழி விற்பனைக்கு

கல்பேட்ஸ் ஒன்றுரூபா200. சனி, ஞாயிறு சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் (கலட்டிசந்தி அருகில்) (55860)

## ஆங்கிலம் - கணிதம்

O/L பரீட்சையில் Distinction, Credit பெறுபேறடையவும் G.A Q. [Spoken English உட்பட) ஆண்டு 6-10 வரை கற்பிக்கப்படும். பல வருட அனுபவமுள்ள B.Sc ஆசிரியர், 85, சிவன்கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

]55775[

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## காணி கொள்வனவு

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரியில் தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள மேற்படி நிறுவனம் தனது கள் விற்பனை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு பொருத்தமான ஓர் இடத்தினை (கட்டடத்துடனான காணி அல்லது வெறும் காணி) கொள்வனவு செய்ய உள்ளது.

இந்த இடமானது கல்வியங்காடு சந்திக்கும், கோப்பாய் தெற்கில் உள்ள தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள இடத்திற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் (பிரதான வீதியாகிய பருத்தித்துறை வீதியிலோ அல்லது குறுக்கு வீதிகளிலோ, உட்பகுதிகளிலோ இருக்கலாம்).

காணியை விற்க விரும்புவோர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்.

(55799)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மு. அரியநாயகம்

[துர்க்காமில் உரிமையாளர், கல்வயல்]

தோற்றம்: 05-06-1932　　மறைவு: 19-04-1997

திதி: 9-05-1998

அன்பாய் பண்பாய் ஆதரவாய் எம்மை வளர்த்த
எமது அன்புத் தெய்வமே!
கலங்குமெங்கள் கண்களெல்லாம் குளமதுவாய்
மாறி நீர் அலைமோதுதப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.　　(55846)

# 2 அணிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

வடக்கு— கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தென்மராட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றின் அணிகள் கௌரவிக்கப்பட்டன.

சாவகச்சேரிக் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முதின்னம் நடந்த போதே அந்த அணிகள் கௌரவிக்கப்பட்டன.

சந்திரபுர ஸ்கந்தவரோதய கரப்பந்தாட்ட 17 வயது அணிக்கு ஆயிரத்து 500 ரூபாவும் —

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மென்பந்துக் கிரிக்கெட் அணிக்கு ஆயிரம் ரூபாவும்— கோட்டக் கல்விப் பணிப்பாளர் கா. கணேசனால் வழங்கப்பட்டுக் கொரவிக்கப்பட்டது. (இ-3)

# புனித ...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

வதற்காக 1880 இல் குருமனை கட்டப்பட்டது. இவ்வாலயம், பங்கில் வாழும் மக்களின் வழிபாட்டிற்குப் போதுமானதாக இருக்காமையாலும், பழுதடைந்தமையினாலும் புதிய ஆலயம் கட்ட தீர்மானித்தனர். அப்போது பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த அருட்திரு. றெஜி இராஜேஸ்வரன் புதிய ஆலய அமைப்புக்கு முன்னின்று உழைத்தார்.

1982 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் யாழ். ஆயர் பேரருட் திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகை புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆலய மக்களூன் மனமுவந்த பொருள் உதவியைக் கொண்டும் உடல் உழைப்பைக் கொண்டும் புதிய ஆலயக் கட்டடம் வளர்ச்சி கண்டது. ஆனால் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்த கால கட்டத்திலும், 1990 ஆம் ஆண்டு ஆனி முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் நடைபெற்ற போர் காரணமாகவும் கட்டட வேலைகள் தடைப்பட்டன. மீண்டும் கடந்த ஒருசில மாத காலங்களில் குறையாக இருந்த வேலைகள் துரித கெதியில் பூர்த்தி செய்யப்பட்டு புதிய ஆலயத்தின் ஒருபகுதி வழிபாட்டிற்காக இன்று சனிக்கிழமை 9-5-98 காலை 9. 30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்படுகிறது.

புதிய ஆலயத் திறப்பு விழா நன்னாளில் புதிய ஆலயம் அமைக்க முதல் முயற்சி எடுத்து ஆரம்பித்த அருட்திரு. றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரையும் அவரைத் தொடர்ந்து பங்குத் தந்தையர்களாகப் பணியாற்றிய அருட் தந்தையர்கள் அருட்திரு. பொனிபஸ் அருட்திருகிருபாகரன், அருட்திரு. நேசநாயகம் ஆகியோரையும் இன்று பங்குத் தந்தையாகப் பணிபுரியும் அருட்திரு. P.M. இம்மானுவேல் அடிகளாரையும் ஆலய மக்கள் நன்றிப் பெருக்குடன் மனதில் கொள்கிறார்கள்.

இ. ம. ஜெயசீலன்
(மறை ஆசிரியர்)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவு

மலர்வு: 11 — 11 — 1974



உதிர்வு: 09 — 04 — 1998

செல்வன்

### பசுபதி சிவவாசன்

(பேராதனை பல்கலைக்கழக 3 ஆம் வருட பொறியியல் பீட மாணவன்)

அன்பின் திருவுருவாய்
ஆழ்ந்த அறிவினையாய்
இங்கிதமாய்ப் பேசி
ஈடின்றி வாழ்ந்தவனே!
உந்தன் பிரிவதனால்
ஊமையராய் வாழ்கின்றோம்
எங்கு இனி உமைக்காண்போம்?
ஏங்குகிறது எம் இதயம்
ஐயாவே உன்தன் அழகுத்திருமுகத்தை
ஒரு நாளும் நாம் மறவோம்.
ஓயாத எம் துன்ப அலை
ஔடதமே நீர் எவர்க்கும்
அஃகாது உம் பெருமை
தாங்காத உள்ளமுடன்
தவிக்கின்ற மனதுடனே
தூங்காத விழிகளுடன்
துடிக்கின்ற நெஞ்சுடனே
நீங்காத நினைவுடனே
நினை நினைந்து வாடுகின்ற

அன்பான அப்பா
ஆருயிர் அம்மா
இனிய அண்ணா, அண்ணி
ஈடில்லா தங்கை
உந்தன் கவிக்குட்டி
உற்றார், உறவினர்கள்.

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு.　　(55818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊழியர் போராட்டம் காரணமாக

# தபால் திணைக்களத்தின் வருமானம்

# 60 சத வீதத்தால் தினமும் வீழ்ச்சி

கொழும்பு, மே 9

ஊழியர்களின் போராட்டத்தை அடுத்து தபால் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் 60 சதவீதத்தால் குறைந்துள்ளது என தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்திற்கு முக்கிய வருமானமாக அமையும் முத்திரை விற்பனை, மின் கட்டணங்களைச் செலுத்துதல், வாகனக் குற்றப்பணங்களை செலுத்துதல், தந்திகள் அனுப்புதல், பதிவுத் தபால் ஆகிய நடவடிக்கைகள் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக கடந்த மார்ச் மாதத்தில் கொழும்பு நகரத்தில் மாத்திரம் சுமார் 3 கோடி ரூபா வருமானத்திற்குப் பதிலாக 1 கோடி ரூபா மாத்திரமே கிடைத்துள்ளது.

(ஐ-10)

## பயிலுநர் ஆசிரியர் சம்பளம் ரூ. 2,500 வழங்க பணிப்பு

சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பளத்தை வழங்குமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

97ஆம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதி முதல் இந்தச் சம்பளத்தை வழங்குமாறு அவர் சுற்றறிக்கை மூலம் பணித்துள்ளார், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் 1996 ஜனவரியில் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களில் உடுவில் கோட்டம் தவிர்ந்த ஏனைய பகுதி ஆசிரியர்கள் இரண்டாயிரம் ரூபா சம்பளத்தையே பெற்று வந்தனர்.

உடுவில் கோட்டமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களும் கடந்த ஜூலை மாதத்திலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பளம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)

## கண்காட்சி

கலைஞானி அரும்பொருட் கண்காட்சி நாளை ஞாயிறு முதல் பத்துத்தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

சென்ற மாதம் நடைபெறவிருந்த இக்கண்காட்சி கலைஞானி நோய்வாய்ப்பட்டமையால் பிற்போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)

## அடகு நகைகளை மீளப் பெறலாம்

யாழ்ப்பாணம், மே. 9

மக்கள் வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளப்பெறுவதற்காக கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பணம் செலுத்தியவர்களின் நகைகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

உரியவர்கள் அவற்றைத் தற்போது பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். பிராந்திய உதவி முகாமையாளர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மார்ச், ஏப்ரல் மாதங்களில் பணம் செலுத்தியவர்களது நகைகள் விரைவில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் என்றும் அவை எடுத்துவரப்பட்டதும் அதுபற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

[ஐ]

## பிரதேச செயலகத்துக்கு கணனி

வலி. தெற்குபிரதேச செயலகத்துக்கு புதிதாக கணனியொன்று வந்துள்ளது. இதன் மூலம் செயலக கணக்கியற் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஐ-27)


## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

## பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் **22 - 05 - 1998** ஆம் திகதிக்கு முன்னர், ''செயலாளர், நகராட்சிமன்றம் பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் தற்போது சேவையாற்றும் பதில் ஊழியர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| | பதவிப் பெயர் | சம்பளத்திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|
| (1) 1. | பதிவேட்டுப் பொறுப்பாளர் | 43680 – 10 x 960 – 8x1320 – 63840 | க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் தமிழ் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2. | சுகாதாரத் தொழிலாளி | 40800 – 20x960 – 60, 000 | ஆகக் குறைந்தது 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

(2) வயது எல்லை: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) வதிவிடத்தகைமை: இந் நகராட்சி மன்ற எல்லைக்குள்ளும், அதனை அண்மித்த பகுதிகளிலும் வசிப்பவராக இருத்தல் வேண்டும்; எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

ஏற்கனவே இப் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள், பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதையும், அவர்களைத் திரும்பவும் விண்ணப்பிக்கும் படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

ந. சோமசுந்தரம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 05 – 05 – 1998.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### பருத்தித்துறை நகராட்சி மன்றம் பதவிக்கான விண்ணப்பம்

01. விண்ணப்பிக்கும் பதவி;
02. (அ) முழுப்பெயர்:
    (ஆ) முதலெழுத்துடன் பெயர்:
03. முகவரி:
04. பிறந்த திகதி: வயது:
05. இலங்கைப் பிரஜையாயின் பரம்பரை/ பதிவு செய்தமை விவரங்கள்:
06. இனம்:
07. கல்வித்தகைமைகள்:
08. நிரந்தர வதிவிட மாவட்டம்/ கிராம சேவகர் பிரிவு:
09. தற்போது நகராட்சி மன்றத்தில் கடமையாற்றுபவராயிருந்தால் விவரங்கள்:
10. விவாகமானவரா? அல்லது விவாகமாகாதவரா?

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலடங்கிய விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையென என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையற்றவராவேன் என்பதனையும் இப்பதவிக்கு நான்தெரிவுசெய்யப்பட்ட பின்பு அவ்வாறு கண்டறியப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

திகதி .............. ......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

(சி/3683)

## தையல் கைப்பணிக் கண்காட்சி

நாள்: 1998 – 05 – 09 தொடக்கம்
1998 – 05 – 11 வரை

நேரம்: காலை 10 மணி முதல்

இடம்: உயரப்புலம் ஆனைக்கோட்டை, அடைக்கலமாதா கோயிலடி

ஆரம்பித்து வைப்பவர்:
அருட்திரு. S. இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளார்
(மானிப்பாய் பங்குத் தந்தை)

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

எரிக் றொஷான்
பங்குத்தந்தை

(சி/3697)

# Jaffna Rehabilitation & Resettlement Programme

## Mine Action Pilot Project Jaffna

Minefield Surveyors

Also

Paramedics

Computer database specialist (Access)

The United Nations Office for Project Services is Planning to Commence the Mine Action Pilot Project In Jaffna within the next two months. The project is now seeking to identify condidates to be considered for the above roles,

Candidates must have a good grasp of the English Language and be numerate. Experience in survey techniques and computer literacy are desirable but not essential,

The role will involve opereting in close proximity to mines and will include destruction of isolated mines or unexploded ordnance that are encountered.

Successful candidates will benefit from comprehensive training in all aspects of survey and landmines. Supervision and training will be provided by internationally qualified specialists. Candidates Who successfully complete training courses will receive appropriate levels of remuneration and insurance.

Individuals who wish to be considered for tha above roles are invited to submit their resumes by Wednesday, 13 May 8, 1998, to;

Mine Action Co-ordinator, Mine Action
Centre, UNDP / UNOPS
123/1 Temple Road,
Jaffna.

Resumes do not need to be any longer than one page and may be hand written. They should include personal deteils including age, and a summary of relevant skills.

It should be noted that no personal interviews or appointments will ba considered at this stage. Suitable candidates will be notified of the next step of the interview process by letter. If applicants have not received a response by the 31 May 1998, they should assume that they have been unsuccessful on this occasion.

(558167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

யாழ்ப்பாணம் — சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளரும் சமயத் தொண்டருமாகிய

**சைவப் புலவர் வ. கந்தசாமி**

அவர்களின் அன்பு மனைவி

## விஜயராணி கந்தசாமி

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாரதி பதிப்பகம்.

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (55866)

# கண்ணீர் அஞ்சலி

யா / நாவலர்மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க உப தலைவரும், முன்னாள்ஆசிரியருமாகிய,

**சைவப்புலவர் திரு.வ. கந்தசாமி**

அவர்களின் அன்புத்துணைவியார்

## திருமதி விஜயராணி கந்தசாமி

அவர்களின்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

யா/ வண். நாவலர் ம.வி.
யாழ்ப்பாணம்

பழையமாணவர் சங்கம் (55864)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 01 — 1935

மறைவு: 20 — 04 — 1997

அமரர்

## தம்பிப்பிள்ளை கதிரமலை

(மலையர்)

திதி: 09 - 05 - 1998

ஓராண்டு ஓடி மறைந்தாலும் அப்பா
காதில் உங்கள் குரல்தான் கேட்குதப்பா!
நூறாண்டு சென்றாலும் உங்கள்
பாசம் நிறைந்த அன்பை மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காளித்தாயைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

காளிகோயிலடி, மல்லாகம். (55834)

# 31 ஆம் நாள் அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 09 — 01 — 1910

மறைவு: 09 — 04 — 1998

திருமதி

## சிதம்பரம் நாகமுத்து

அன்பின் திருவுருவாய் அமைதியின் இருப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய் வையத்துள் வாழ்வாங்கு வாழ எமக்கு அறிவூட்டிய அன்னையே!

உங்கள் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்தி அனுப்பியும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், [illegible]

மட்டுவில் வடக்கு. (55869)

# உதைபந்தாட்ட பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். உதைபந்தாட்ட தெரிவுக் குழுவைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்று வந்த உதைபந்தாட்டப் பயிற்சி மீண்டும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அங்கு சமுகமளிக்குமாறு பயிற்சிக்குழு முகாமையாளர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் கேட்டுள்ளார். (ஐ)

# அலுவலகம் புனரமைப்பு

சுன்னாகம், மே 9

வலிகாமம் தெற்கு பிரதேசசபை அலுவலகம் திருத்தப்பட்டு வருகிறது.

கடந்த இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்படி சபையின் சீலிங் பலகைகள் சேதமடைந்தும், காணாமற் போயியுமிருந்தன.

தற்போது புதிதாக பலகைகளால் தடுப்புக்கள் அமைக்கப்படுகிறது. பிரதேச சபைத் தலைவருக்கான அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-27)

# யாழ்ப்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வெளியாகியுள்ளன.

அடுத்து வரும் நாள்களில் துருப்புக்களை புதிதாகத் திரட்டுவதில் படைத்தரப்பு மும்முரமாக இருக்குமென தெரிகிறது. இதற்கான ஆயத்த வேலைகள் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வருகின்றன.

ஆள்களைத்திரட்டுவதற்கு இந்தத் தடவை எடுக்கப்படும் நடவடிக்கைகள்வெற்றியளிக்கப்படாவிட்டால்—

அதாவது தற்போதைய முயற்சியில் புதிதாய் 15 ஆயிரம் துருப்புக்கள் சேர்க்கப்படா விட்டால்—

கட்டாய இராணுவச் சேவையை நடைமுறைப் படுத்துவது, குறித்து அரசாங்கம் தீர்மானிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாய இராணுவசேவை திட்டம் சிங்கள மக்கள் மத்தியில் எவ்வித பிரச்சினைகளை உருவாக்கும்; சிங்கள மக்கள் அதனை எவ்வாறு எதிர் கொள்வர் என்பதை இப்போதே ஊகிக்க முடியாவிட்டாலும், அரசுத் தரப்புக்கு அது பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதை மட்டும் இப்போது கூறலாம்.

1988— 89 களில் இந்திய அமைதிப்படை இங்கிருந்த போதும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கட்டாய இராணுவ சேவைக்கு இளைஞர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். சட்டரீதியாக அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கட்டாய இராணுவ சேவைக்கு ஆள் திரட்டப்பட்டது அதுவே முதல் தடவையாகும்.

அத்தகைய ஆள் திரட்டல்கள் எவ்வாறு போய் முடிந்தன என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

யாருக்கு எதிராகப் போராடுவதற்கு கட்டாய இராணுவ சேவை நடைமுறைப்படுத்தப்பட்டதோ, அந்த ஆள்களுக்கே கட்டாய இராணுவ சேவை மூலம் விநியோகிக்கப்பட்ட ஆயுதங்கள் போய்ச் சேர்ந்தன.

மனதார இணக்கமில்லாத ஆள்களை கட்டாய இராணுவ சேவைக்கு [illegible] இவ்வகை [illegible] விளைவு தான் ஏற்படும் என்பதை அரசு மறந்துவிடக் கூடாது.

# அதிரடி அரங்கு

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடத்தப்பட்ட மாபெரும் (?) இசை நிகழ்ச்சியால் பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் 'பூரித்துப்' போனார்கள்.

புளகாங்கிதமடைந்த ரசிகப் 'பெரு' மக்கள், மகிழ்ச்சி தாங்காமல் கச்சான் பைகளில் மண்ணை நிரப்பி மக்கள் கூட்டம் மீது விட்டெறிந்து மக்களை மண்குளியல் செய்ததும் —

கூட்டத்தோடு கூட்டமாக பெண்களை நசித்து மகிழ்ந்ததும் — நேரில் கண்ட காட்சிகள்.

நள்ளிரவுவரை விளையாட்டரங்கில் ஆட்டம் போட்ட கூட்டத்தினரில் ஒரு பகுதியினரின் கைகள் நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பும் போதும் ஓயவில்லை; துருதுருவென்று இருந்தது போலும். அதனால்தான் வழியில் இருந்த வீடுகள் மீது கல்வீச்சு நடத்தி, வீட்டுக் கண்ணாடிகளைப் பதம் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

இனிமேல் இத்தகைய நிகழ்ச்சிகளுக்காக ஊரடங்கைத் தளர்த்தினால், நிகழ்ச்சி பார்த்து விட்டுப் போகும் கும்பல்களின் அடாவடித் தனத்தைத் தடுத்து நிறுத்தி வழியில் உள்ள வீடுகளைப் பாதுகாப்பதற்காக ஆங்காங்கே விழிப்புக் குழுக்கள் செயற்பட வேண்டியிருக்கும் போல் தெரிகின்றது.

மைதானத்தில் ஆட்டம் போட்டவர்கள் போகும் போது வீதிகளில் ஆட்டம் போடுவதைத் தடுக்க நல்ல 'ஹோட்டலில்' சாப்பாடு போட வேண்டிய தேவையும் வரக்கூடும்.

துரையப்பா விளையாட்டரங்கில் சோடி சேர்ந்த பலர், நள்ளிரவு நிகழ்ச்சி முடிந்த பின்னர் விளையாட்டு மைதானத்திலேயே தங்கியிருந்து நள்ளிரவை நல்லிரவாகக் கழித்ததாகவும் தகவல்.

எங்கு போகின்றது நமது சமூகம்? தடுத்து நிறுத்துவது யார்?

★ ★ ★

வலிகாமம் வடக்கில் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி ஒன்றில் மாணவர்கள் கல்வீச்சில் ஈடுபட்டது பற்றி சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

கடந்த வாரம் யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற — பெண்களுக்கான — வலைப்பந்தாட்டப் போட்டிகளின் போது யாழ். நகரில் நடந்த மற்றொரு சம்பவம் இது:- ஆட்டம் ஒன்றில் தோற்ற அணியின் மாணவிகள் மத்தியஸ்தம் வகித்த பெண்மணிகளுக்கு மண் மற்றும் கற்களை வீசியதாகக் குற்றச்சாட்டு.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உடனடியாக மாணவிகள் குறித்து நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட மத்தியஸ்தர்களையும், விளையாட்டு நிர்வாகிகளையும் சந்தித்துப் பேசி, நிலைமையைச் சுமுகப்படுத்தி விட்டதாகத் தகவல்.

என்றாலும் நமது விளையாட்டுத்துறை எங்கே போகின்றது?

கடந்த வாரம் தெற்கிலிருந்து விளையாட்டுத் துறையின் சமாதானச் செய்தியைத் தாங்கிக்கொண்டு வடக்கே வந்த உதைபந்தாட்ட அணியினர், யாழ். பல்கலைக்கழக அணியுடன் விளையாடிய விதமும் அப்படித்தான் இருந்தது. 'சினேக பூர்வ ஆட்டத்துக்கு வந்தார்களா? சினம் தீர்க்க வந்தார்களா?' — என்று கேட்டார் ஒரு யாழ். ரசிகர்.

உதைபந்தாட்டத்தை ரசிப்பதற்காக யாழ். விளையாட்டரங்கில் பல்லாயிரக் கணக்கில் திரண்ட ரசிகர் கூட்டம் யாழ். மண்ணில் விளையாட்டுத் துறைக்கு இன்னும் மதிப்பிருப்பதை எடுத்துக் காட்டியது. ஆனால் விளையாடுபவர்கள் அந்த மதிப்பைப் பேணுவார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்விக்குறி?

★ ★ ★ ★

யாழ். நகரில் சோதனை நடைபெறாத தடை நிலைகளைத் தாண்டும் போது சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் இருந்து இறங்காமல் ஓடிச் செல்லலாம் எனயாழ். நகர இராணுவத்தளபதி விடுத்த அறிவிப்பு ஒருவாறு இப்போது நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிகின்றது.

என்றாலும் யாழ். நகரப் பகுதியில் சில இடங்களில் இன்னமும் சிலர் சைக்கிள்களை விட்டு இறங்கி பவ்வியமாக நடந்து செல்வதைக் காண முடிகின்றது. யாரைத் திருப்திப்படுத்த—எதற்குமதிப்புக் கொடுக்க—இவர்கள் முனைகின்றார்கள்?

யாழ். நகர சோதனைத் தடைகள் குறித்து இப்போது யாரும் தமக்கு முறைப்பாடு செய்வதில்லை என நகர இராணுவத் தளபதி கூறுகின்றார். அப்படியாயின் சில இடங்களில மக்கள் ஏன் இறங்கி உருட்டிச் செல்கிறார்கள்? தவறு யார் பக்கம்? இராணுவத் தளபதியின் உத்தரவையும் மீறி தடை நிலைகளில் உள்ளோர் வேறு உத்தரவுகளைப் போட்டால், நாம் வெறுமனே அதற்குப் பணிந்து கொண்டு வாளாவிருப்பதா? உடனே உரியவரின் கவனத்துக்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க முயல வேண்டாமா?

நாம் சீறாவிட்டால் அடங்கிப் போக வேண்டித் தான் வரும். குனியக் குனிய குட்டுவார்கள். சீறி எழுந்து ஆட்சேபனை தெரிவித்தால்தான் ஓரளவாவது நிலைமை சீராகும்.

— மின்னல்

# பெண்கள் உட்பட 9 பேர் கொழும்பு விடுதியில்கைது!

கொழும்பு, மே 9

பம்பலப்பிட்டியிலுள்ள தனியார் விடுதி ஒன்றிலிருந்து கடந்த 5 ஆம் திகதி இரவு 5 தமிழ் பெண்கள் உட்பட 9 பேர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கி. மதன், க. ஜெயராஜ், க. கதிர்ச்செல்வன், எஸ். ரகு, க. விமலாதேவி, திருமதி ஆர். சுபைதா, எஸ். கௌரி, எஸ். கோமதி, எஸ். சசிகலா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

வடபகுதியைச் சேர்ந்த இவர்கள் வெளிநாடு செல்வதற்காக இந்த விடுதியில் தங்கியிருந்தார்கள். (இ-ங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடைப்பந்தாட்ட அணி; தெரிவான வீரர்கள்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட அணியைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கையாக — முதற்கட்டமாக—15 வீரர்கள் தெரிவாகி உள்ளனர் என்றும் —

அவர்களுக்கான பயிற்சிகள் நாளை காலை 8மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் ஆரம்பமாகும் என்றும்—

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் அறிவித்துள்ளது.

இப் பயிற்சிக்கு தெரிவான வீரர்களின் விவரம் வருமாறு:-

★ யாழ். பல்கலைக்கழகம் — த. கோபிசங்கர், கே. ஜூட் வோல்ற்றன், ப. தயாபரன், ம. மரியசெல்வம், சி. சிறிகரன், ரா. பரிமளேந்திரன்.

★ பற்றீஷியன் விளையாட்டுக்கழகம் —ற. ம. ஜெ. ரவிராஜபுத்திரன், ப. எட்வேட் ஹென்றி, அ. செ. டிலான்.

★ ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் — கோ. டா. மதியழகன், செ. சத்தியசீலன், செ. சசிகுமார்.

★ உதயன் விளையாட்டுக் கழகம் — சண். தயாளன்.

★ சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் — ந தெய்வீகன்.

★ ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் — தே. கௌரிபாகன்.

இந்த அணிக்கான பயிற்றுநராக ஆர். வசந்தகுமாரும், உதவிப் பயிற்றுநராக எஸ். சகாயராஜாவும் பணியாற்றுவர்.

இவ் வணிக்கான உடற் பயிற்சிகளை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ. விமலராஜன் வழங்குவார். (உ-3)


## ராஜா, யாழ்ப்பாணம்.

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்!

சினிமா ரசிகர்களின் ஆவலைத் தீர்க்க ராஜா டாக்கீஸ் அகண்ட வெண் திரையில் நிறைந்த ரசிகர் கூட்டத்துடன் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது.

முன்னாள் தமிழக முதல் அமைச்சர்கள் மக்கள் திலகம் M.G.R., —ஜெயலலிதா நடித்த

ஜெமினி தயாரிப்பிலும் இலங்கையில் S. T. R. பிலிம்ஸ் பெருமையுடன் திரையிட்ட —

## ஒளி விளக்கு

M.G.R. இன் 100 ஆவது படம்

தினசரி புதிய நேரம்:- 1.45, 4.45 மணி
சனி, ஞாயிறு காலை 10.00 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படும். (சி/3709)



## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தினால் நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டி சிறப்புற பல வழிகளிலும் உதவி புரிந்து எமக்கு ஊன்றுகோலாயிருந்த எமது அன்புக்குரிய ஆசிரியர் சைவப் புலவர்

திரு. வ. கந்தசாமி

அவர்களின் பிரியபத்தினியார்

திருமதி

**விஜயராணி கந்தசாமி**

அவர்கள் இறைபதமெய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் எங்கள் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஸ்ரீ காமாக்ஷி சனசமூக நிலையத்தினர்.
வண்ணை நாச்சிமார் கோயிலடி, (55887)



## தொண்டர் ஆசிரியர்கள் கவனத்துக்கு

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோரின் முழு விவரப் பட்டியலும் நிரந்தர நியமன நடவடிக்கைகளுக்கென சம்பந்தப்பட்ட அதி உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
தொண்டர் ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(55885)



யாழ். மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

## லொறி விற்பனை

மேற்படி எமது சங்கத்திற்குச் சொந்தமான 26 சிறி 9199 இலக்கம் கொண்ட இசுசு லொறி விற்பனைக்குண்டு. இது சம்பந்தமாக 20-05-98 ஆம் திகதிக்கு முன்னதாகத் தொடர்புகொள்ளவும்.

ந. பாலவிநாயகர்,
செயலாளர்,
யா. மா. பே உ. சங்கம்.

39, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி/3705)


# பிணை அனுமதி

கொழும்பு, மே. 9

பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த — தபால் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கத் தலைவர் — எம். கே. ஹெட்டியாராட்சியை 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு மாளிக்காவத்தை நீதிவான் எம். ஹசீத் நேற்று அனுமதித்தார். (உ-3-21-7)

# உ. கிழங்கு இறக்குமதி

அரியாலை, மே 9

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உருளைக் கிழங்கு இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் ஒரு தொகுதி உருளைக்கிழங்கு யாழ். நகர தனியார் வர்த்தகர்கள் இறக்குமதி செய்துள்ளனர்.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட உருளைக் கிழங்கு நேற்று நகரில் ஒரு கிலோ 65 ரூபாவாக விற்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூர் உருளைக்கிழங்கின் விற்பனை முடிவுற்றதை அடுத்து கொழும்பில் இருந்து உருளைக்கிழங்கு தருவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், மே 9

கொழும்புத்துறை கடற் பகுதியில் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியதாகத் தெரிவித்து கடந்த செவ்வாய்க் கிழமை மாலை, யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட இனம் தெரியாத சடலம் இனம் காணப்படாத நிலையிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

நான்கு நாட்களாக ஆஸ்பத்திரி பிரேத அறையில் இனம் காணும் பொருட்டு வைக்கப்பட்டிருந்தும் யாராலும் இனங்காணப்படாத இச்சடலம், மேலும் பழுதடைந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியதை அடுத்து நேற்று அரசசெலவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. (உ-15)

# விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மே 9

காரைநகர் போசுட்டி முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி முதல் விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 7·00 மணி தொடக்கம்(புதிய நேரம்) யாழ். பஸ் நிலையத்திலிருந்து பொன்னாலைக்கான விசேட சேவையும் பொன்னாலையிலிருந்து கோயிலுக்கான இணைப்புச் சேவையும் இடம்பெறவுள்ளதாக போசுட்டி முருகமூர்த்தி ஆலய ஸ்ரீசண்முகானந்த சபையினர் அறிவித்துள்ளனர். (உ-7)

# தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 9

வெசாக் தினமான 11 ஆம் திகதி விடுமுறை நாளாக உள்ளபோதிலும் வெசாக் விசேட தபால் விநியோகம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தபாலகங்கள், உபதபாலகங்கள் மூலம் இந்த விசேட விநியோகம் நடைபெறும் என்றும் —

யாழ். அஞ்சல் அத்தியட்சகர் பிரிவுக்குள்ளும் விசேட தபால் விநியோகம் இடம்பெறும் என்றும் —

யாழ். அஞ்சல் அத்தியட்சகர் சி. தர்மராஜா தெரிவித்தார். (உ-5)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 9

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். மறு நாள் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ஐ-103)

★ ★ ★

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் வருடாந்த இரதோற்சவம் நாளை காலை நடைபெறவிருக்கிறது.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெற்று இன்று மஞ்சத்திருவிழாவும், நாளை மறுதினம் சித்திரா பூரணையன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

கடந்த 6 வருட இடைவெளியின் பின்னர் இவ் வருடம் ஆலய உற்சவம் நடைபெறுகிறது.

நாளைய தேர்த் திருவிழாவை யொட்டி அராலியில் இருந்து ஆலயத்துக்கு விசேட பஸ் சேவையும் ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

★ ★ ★

காரைநகர் கருங்காலி போசுட்டி முருக மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு காரைநகர் ஸ்ரீ சண்முகானந்த சபை நடத்தும் தொடர் சமயச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை ''பெரியபுராணத்தில் பக்தி விறல்'' என்னும் தலைப்பிலும், நாளை ஞாயிறு ''ரதோற்சவ மகிமை'' என்னும் தலைப்பிலும் கல்வி வலயம் ஒன்றின் முதன்மை ஆசிரியர் ஆசிரியமணி எம்.எஸ். ஸ்ரீ தயாளன் சொற்பொழிவாற்றுவார். (ஐ-7)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் வருடாந்த இரதோற்சவம் நாளை காலை நடைபெறும்.

நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும், மறுநாள் பூங்காவனமும் இடம்பெறும்.

ஆலய உற்சவத்தில் நடைபெறும் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கத்தின் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ''படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே'' என்னும் தலைப்பிலும், நாளை ''தவயோகியும் தெய்வப் புலவரும்'' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவுகள் இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ தலங்காவல் விநாயகர்ஆலய கந்தபுராண படன பூர்த்தி விழா நாளை ஞாயிறு காலை 9.00 மணிக்கு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய முன்னாள் ஆசிரியை செல்வி தங்கப்பொன் சபாபதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

கந்தபுராண வித்தகர்களான சி. தம்பிஐயா, மு. ஆறுமுகம் ஆகியோர் இவ் விழாவில் பொன்னாடைபோர்த்தி பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

★ ★ ★

பருத்தித்துறை புனித தோமையர் ஆலயத்திறப்பு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய ஆலயத்தை வழிபாட்டுக்காக திறந்து வைப்பார்.

தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுப்பதுடன் நன்றி நவிலலும் இடம் பெறும். (ஐ-173)

★ ★ ★

இணுவில் மேற்கு பருத்தியடைப்பு ஸ்ரீசெகராசசேகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் தினமும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற்று வருகின்றன.

★ ★ ★

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது. மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் கொடி இறக்கமும் இடம்பெறும்.

# மிதிவெடியில் காயம்

விறகு எடுப்பதற்காகச் சென்றவரின் சைக்கிள் மிதிவெடியில் சிக்குண்டதில் அவர் காயமடைந்தார். அவரின் சைக்கிளும் பலத்தசேதமடைந்தது.

வளலாய், தையகபுலம் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பாலையைச் சேர்ந்த இராசதுரை (வயது 52) என்பவரே காயமடைந்தார். இவர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

★ ★ ★


## கே. கே. எஸ். மணிக்கொம்பிளெக்ஸ்

வடமராட்சி மக்களின் அதிர்ஷ்டம் வடமராட்சியிலேயே!

வடமராட்சி மக்களின் நன்மைகருதி வடமராட்சியில் கே. கே. எஸ். மணிக்கொம்பிளெக்சின் கிளை நிறுவனம் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் புதன்கிழமையிலிருந்து (13-05-1998) செயற்படும் என்பதை அறியத்தருகின்றோம். வடமராட்சி மக்கள் இனிவரும் காலத்தில் அங்கத்துவப் படிவத்தைப் பூர்த்தி செய்து கிளை நிறுவனத்திடம் நேரடியாகக் கொடுத்து அங்கத்துவ இலக்கம் குறித்த படிவங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

## வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தில் அங்கத்தவராகி படிவத்தில் குறிப்பிட்ட முழுத்தொகையைப் பெற்ற (1,024.00 ரூபாய்) செல்வி ஆர். கௌரி புதிய சிவன் வீதி, நல்லூர். ஏனைய அதிக தொகையைப் பெற்ற கணேசலிங்கம் நல்லூர், புஸ்பதேவன் காங்கேசன்துறை, தவநேசன் கொக்குவில் கிழக்கு, ரவிச்சந்திரன் ஆனைக்கோட்டை, நவரட்ணராஜா P.O. யாழ்., கமலேஸ்வரி கொக்குவில், ரகுராஜ புலோலி, தவனேஸ்வரி அறுகுவெளி சாவகச்சேரி. ஏனைய 1938 அங்கத்தவர்களுக்கும் பணம் பெற்றமைக்காக அவர்களுக்கும் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— முகாமையாளர்

கே. கே. எஸ். மணிக்கொம்பிளெக்ஸ்
59, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (55879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத் நேற்று திருமணம்

கொழும்பு, மே 9

இலங்கையின் முன்னணி கிரிக்கெட் வீரர் சனத்ஜெயசூரியா, ஏயர்லங்கா விமான சேவையில் பணியாற்றிய சுமுது வதாரா கருணாநாயக்காவை நேற்று திருமணம் செய்தார்.

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இத்திருமணம் நடைபெற்றது. ஜனாதிபதி சந்திரிகா உட்பட சுமார் நானூறு அழைக்கப்பட்ட பிரமுகர்கள் இத் திருமணத்திற் கலந்து கொண்டனர். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (உ-21)


## விற்பனைக்கு

புத்தம் புதிய
Sanyo Projector
300"
விற்பனைக்குண்டு.

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/3690)


# தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவு!

கொழும்பு, மே 9

தபால், தொலைத்தொடர்பு ஊழியர் தொழிற் சங்கங்கள் மேற்கொண்டு வந்த சட்டப்படி வேலைப் போராட்டம் நேற்று நள்ளிரவு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல தபால் ஊழியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தபால், தகவல் தொடர்புத் துறை, தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் நடந்த 4 மணி நேரப் பேச்சுவார்த்தையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (உ-3-7-10)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

றது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சில் நேற்று நடந்த விசேட மாநாட்டில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

தற்சமயம் பாடசாலைக்கு 50 வீதமான மாணவர்களும் ஆசிரியர்களுமே சமுகமளிக்கிறார்கள் என்றும் —

இந்நிலை மேலும் தொடரலாம் என அஞ்சப்படுகிறது என்றும் — பாடசாலை அதிபர்கள் அந்த மாநாட்டில் தெரிவித்தனர். (உ-3)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 9

'ஜொலி ஸ்ரார்' கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார்விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றுகாலை ஆரம்பமாகிறது.

இ. ச. பேரம்பலம் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியை அந்நிறுவன உரிமையாளர் பி. நாகரத்தினம் இன்று காலை 8-30 மணிக்கு ஆரம்பித்துவைப்பார்காலையில் நடைபெறும்முதலாவது ஆட்டத்தில் கொக்குவில் கே. சீ. சீ. சீ. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீஸியன் அணி மோதும்.

பிற்பகல் 1-00 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது ஆட்டத்தில்யாழ். பல்கலைக்கழக அணியும், சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியும் மோதவுள்ளன.

நாளையும்சுற்றுப்போட்டி ஆட்டங்கள் நடைபெறும். (உ-ஐ)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

முனைப்பகுதியில் நேற்றுக் கரையொதுங்கியது.

மந்திகை ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மரண விசாரணையையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-173-109)


எமது வீடியோ
CD வெளியீடுகள்!

★ முரட்டுக்காளை
★ முரட்டுக்காதல்
★ சந்திரோதயம்
★ மே மாதம்
★ சதிலீலாவதி
★ மூன்றாம்பிறை

**சுப்ப ஸோ வீடியோ,**
யாழ்ப்பாணம்.
(சி/3708)


# புலிகள் - ஒட்டுணு...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்களையும் நேரில் கேட்டறிந்தார்.

அங்கு உள்ளூராட்சி அதிகாரிகளையும், மன்னார் ஆயரையும் மற்றும் உள்ளூர், வெளிநாட்டு நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடிய அவர் அப்பிரதேசத்தின் மனித வாழ்வு நிலைமை குறித்து — குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகளின் நிலைமை குறித்து — கேட்டறிந்தார்.

மனிதாபிமான விடயங்கள் தொடர்பான தனது விஜயம் சம்பந்தமாக — தமிழீழ விடுலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனால் நியமிக்கப்பட்ட உயர்மட்டப் பிரதிநிதிகளான புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் ஆகியோரை — அவர் சந்தித்துப் பேசினார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் பாதுகாப்பு, உரிமை, நலன் ஆகியவை தொடர்பாக பல்வேறு விடயங்களை இச்சந்திப்பின் போது ஒட்டுணு எழுப்பினார்.

பேச்சுவார்த்தையின் பயனாக புலிகளின் தலைமை பல்வேறு விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்தது. அவற்றில் பின்வருவன அடங்கும்.

1. **சிறுவர்களை ஆள்சேர்த்தலும் ஈடுபடுத்தலும்:-** இன்றைய நிலையில் 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளை யுத்தத்தில் ஈடுபடுத்துவதில்லை என்று புலிகளின் தலைமைத்துவம் உறுதியளித்தது. 17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதில்லை என்றும் அவர்கள் உறுதியளித்தனர்.

2. **இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரமான நடமாட்டம்-:** இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கு தாமாக விரும்பிச் செல்வது தடுக்கப்படமாட்டாது என புலிகளின் தலைமைத்துவம் உறுதியளித்தது. முஸ்லிம் மக்கள் தமது இடங்களுக்குத் திரும்புவதும் தடுக்கப்படமாட்டாது என்றும் அவர்கள் உறுதியளித்தனர்.

**மனிதாபிமான பொருள்களின் விநியோகம்:-** பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு என அனுப்பப்படும் மனிதநேய பொருள்களின் விநியோகத்தில் தலையிடுவதில்லை என புலிகளின் தலைமைத்துவம் உறுதியளித்தது.

மேற்படி மூன்று விடயங்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட உறுதிப்பாட்டைக்கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் புலிகளின் தலைமைத்துவம் சம்மதம் தெரிவித்தது.

**சிறுவர்களின் உரிமை தொடர்பான சாசனங்களை அனுஷ்டித்தல்:-** அரசசார்பற்றதுறையினர் உட்பட சகல தரப்பினரும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சாசனங்களைக் கைக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஒட்டுணு வலியுறுத்தினார். மேற்படி சாசனத்தின் அடிப்படை விடயங்களை மதித்து நடப்பது தொடர்பாக தமது உறுதிப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்தும்படி புலிகளின் தலைமைத்துவத்தை ஒட்டுணு குறிப்பாக கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக மேற்படி சாசனத்தின் ஏற்பாடுகள் பற்றிய தகவல்கள், அறிவுறுத்தல்களை தமது உறுப்பினர்கள் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்ய தாங்கள் தயாராக இருப்பதை புலிகளின் தலைமைத்துவம் வெளிப்படுத்தியது.

5. **பொதுமக்களை இலக்கு வைத்தல்:-** நாடு முழுவதிலும் பொது மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் இடங்கள் இலக்கு வைக்கப்படுவது குறித்து தமது விசேட கவனத்தை ஒட்டுணு வெளிப்படுத்தினார். இது முக்கியமான, சட்டபூர்வமான விடயம் என்பதை ஒப்புக் கொண்ட புலிகளின் தலைமைத்துவம், இது தொடர்பாக தமது உத்திகளையும், தந்திரோபாயங்களையும் மறுபரிசீலனை செய்வதாகவும் உறுதியளித்தது.

இந்த உறுதிகளை செயற்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஒட்டுணு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீலங்காவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டசிறுவர்களின் பாதுகாப்பு, உரிமை, நலன் ஆகியவற்றை மேம்படுத்தும் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இவை அமையும் — இப்படி அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-21)


## விற்பனையாகின்றது

**தாவரவியல் - பகுதி I**
10 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும்
ஆசிரியர்:
V. குகாதரன் B Sc.

**முகாமைக் கணக்கீடு**
ஆசிரியர்:
எஸ். சுமந்திரன்
B. Com (Hons) S. L. Accts (MPDRR)

**சங்கீதம்**
ஆண்டு 6 முதல் 11 வரை
வினாக்களும் விடைகளும்
ஆசிரியர்:
பொன். சிறீ- வாமதேவன்
(சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

ஏக விநியோகத்தர்கள்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடு: சோதி பப்ளிகேஷன்ஸ்
(55883)

## SUNIL ARTS
## சுனில் ஆட்ஸ்

20-4-98 வரை எம்மிடம் ஒப்படைத்த படச் சுருள்களின் படங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

Kodak Express நவீன Computer மூலம் தரமான பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்பினால் சுனில் ஆட்ஸிடம் ஒப்படைக்கவும்.

படப் பிடிப்பாளர்களுக்கு விசேட கழிவு
Photo Print Quick Service
**SUNIL Arts**
272, ஸ்ரான்லி றோட், (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
12-05-98 அன்று Film கொழும்புக்கு அனுப்பப்படும்
(சி/3702)

**யாழ். நகர மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஒரு சேவையாக...**

## 'சுப்பஸோ' கலர் படச் சேவை

பதினைந்து நிமிட நேரத்தில் உங்கள் கலர் படச் சுருள்களை
நவீன கொம்பியூட்டர் மூலம்
உரிய தரம் வாய்ந்த படப் பிரதியாக கழுவிப் பெற்றிட
இன்றே நாடுங்கள்

**"சுப்பஸோ" கலர் படச் சேவை**
இல: 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-
**சுப்பஸோ வீடியோ**
**ரவி ஒளி கானம்**
இல: 100 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/3713]

## ஜெகா மோட்டோர்ஸ் அன் கொம்மினிகேசன் தொலைத் தொடர்பு சேவை

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத்தொடர்புகள் துரிதமாகவும் சகாய கட்டணத்திலும்
இலகுவில் பெற்றிட நாடவேண்டிய இடம்:

**ஜெகா மோட்டோர்ஸ்,**
பிரதான வீதி, நெல்லியடி T.P. No. 070 – 212228
(சி/3695)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 9-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

09 – 05 – 1998 சஞ்சீவி

**ராகம்ஸ்**
**பட்டுச் சோலை**

பட்டாடைகளின் அழகுச்சோலை
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளின்
தெரிவுக்கு கைராசியான புடைவைச்
சோலை
இன்றைய நவீன நாகரிகத்தின்
றெடிமேட் புடைவைகளின் சங்கமம்.
இல.24, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
(சி/3668)

## கருத்துக் கலசம்

மயூரா

### வெற்றி நாடி....

வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டும்; ஏதாவது ஒரு சாதனையைப் படைக்க வேண்டும்; இவற்றின் மூலம் புகழ் ஈட்ட வேண்டும் என்று விரும்பும் மனிதர்களே அனேகர்.

வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கும், சாதனை படைப்பதற்கும், தோல்வியைச் சந்திக்காமல் விரும்பியதை அடைவதற்கும் வழி அல்லது வழிகாட்டுதல் ஏதாவது உண்டா என்பதனைச் சம்பந்தப்பட்டோர் அறிவதில் நாட்டம் கொண்டிருப்பர்.

எதை நோக்கும் போதும் அதனை வெற்றி காணும் மனோபாவத்துடன் பார்ப்பது தான் வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படை — அத்திவாரம் என்று டேவிட் மெக்இலண்ட் என்ற அறிவியலாளர் கூறியுள்ளார்.

எல்லோர் மனதிலும் வெற்றியை, சாதனையை எய்த வேண்டும் என்ற உந்துதல் உண்டு. சிலரிடம் அந்த உந்துதல் அதிகமாகவும் வேறு சிலரிடம் குறைவாகவும் இருக்கும். வெற்றி பெறும் ஆர்வத்தை அதிகரிக்க, வெற்றி கிடைக்கும் என்ற மனோபாவத்தை வளர்ப்பதே அடிப்படை — இவ்வாறு இருபத்தைந்து வருட ஆராய்ச்சியின் பின்னர் மெக்இலண்ட் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும்; வெற்றிகாண வேண்டும்; சாதனை படைக்க வேண்டும் என்ற இலட்சியம் மனதில் இருந்தால் அதன் மீதே மனிதன் எப்போதும் கருத்தாக இருப்பான்—கருமமே கண்ணாயினார் என்பதுபோல.

மனம்இருந்தால் இடமுண்டு. எதனையும் நல்லதாகவே, ஆக்கபூர்வமாகவே பார்ப்பவனுக்கு எல்லாமே நல்லதாகவே, வெற்றியாகவே முடியும். ஒருவன் எந்த நிறக் கண்ணாடியை அணிந்திருக்கிறானோ காட்சிகள் யாவும் அந்த நிறமாகவே தெரியும். ஒருவன் தனது மனக் கண்ணை எத்தகைய நிலையில் அல்லது கோணத்தில் வைத்துப் பார்க்கிறானோ அதற்கேற்பவே நிகழ்வுகள் நடைபெறும். — இவை யாவும் மனோபாவத்தின் முக்கியத்துவத்தைநேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் வாசகங்கள்; எங்களுக்கு நன்றாகப் பரிச்சயமானவை.

எண்ணம் மனிதனின் மிகப் பெரிய சக்தி. அதனை முறைப்படுத்தி, பழக்கமாக்கி, வலுவாக்கும் போது வெற்றிக்கான சூழ்நிலை உருவாகிறது.

எதையும் வெற்றிக் கண்ணோடு பார்க்கும் எண்ணம் நிச்சயம் வெற்றியைத் தரும். ஒரே தடவையில் பெரிய வெற்றியாகக் கிடைக்க வேண்டும் என்பதல்ல. சிறு சிறு வெற்றிகள் எமக்குள்ள சக்தியைப் புலப்படுத்தும்; மேலும் வெற்றியை நாடிச் செயற்படத் தூண்டும்.

வெற்றிக்கான மனோபாவத்துடன் சலிப்பில்லாத முயற்சி நிச்சயம் வெற்றியைத்தரும்.

# திறமையும் முயற்சியுமே வெற்றிக்குத் திறவுகோல்

'நமக்கு இருக்கும் திறமை போதவே போதாது; இன்னும் வளர்த்துக் கொள்ள வேண்டும்' என்ற துடிப்பு நம்முடன் இருந்தே ஆக வேண்டும். துடிப்பே செயலைத் துரிதப்படுத்தும்.

இதற்கு மாறாக, 'என்னிடம் இருக்கும் திறமை வேறு எவருக்கும் கிடையாது!' என்று மார்தட்டி மமதையுடன் இருந்தால் நாம் ஒருநாளும் முன்னேற முடியாது.

நமக்கு நாமே அளவுகோல் போடாமல், நமக்கு அப்பாற்பட்டிருக்கும் அறிஞர்களின் திறமைகளை ஆராய்ந்து பார்த்து அவற்றைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆறறிவு பெற்ற மனிதன் ஐந்தறிவு வரை பெற்றிருக்கும் இனங்களை எல்லாம் அடக்கியாளும் திறமையும் தகுதியும் பெற்றிருக்கும்போது, நம்முடைய அறிவை மட்டும் நாம் அடக்கியாள முடியாதா என்ன?

முடியும்! நாம் மனது வைத்தால்!

நீரில் அசையாமல் அமர்ந்திருக்கும் சக்தி மீனிடம் இருக்கிறது. காற்றில் பறக்கும் சக்தி பறவையிடம் உள்ளது. ஆனால் நமக்குக் கொடுக்கப்படாத இந்த சக்திகளை நாம் அடைய அறிவை உபயோகிக்க வேண்டும். அப்படி உபயோகித்து வெற்றி பெறும்போது நம்முடைய ஆற்றலின் அரிய சக்தியை உணர்ந்துகொள்ள முடியும் அல்லவா?

''இந்த உலகில் நல்ல முறையில் அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு சிறிய பகுதி கட்டாயம் இருக்கிறது. அந்தச் சிறு பகுதி உங்களுடைய திறமைதான்'' — என்கிறார் ஹக்ஸ்லீ என்ற அறிஞர்.

ஆற்றலுக்கு மேலும் கீழும் சந்தர்ப்பச் சக்கரங்கள் சுழன்றுகொண்டேதான் இருக்கும். நேரமும் சக்தியும் இருக்கும்போதே நாம் அதைப் பயன்படுத்திக்கொண்டு பக்குவமாக வாழ வேண்டும்.

நாம் வசதியுடனும் வளமாகவும் வாழ, ஆற்றலையும் அறிவையும் முறையாக உபயோகப்படுத்த வேண்டும்.

வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டு விடுவதாலேயே உயர்ந்துவிட முடியாது. அவற்றைத் திறமையாகப் பயன்படுத்துவதில் தான் வெற்றியின் மேன்மையே இருக்கிறது.

''வீசும் காற்றும் எழும் அலையும் எப்பொழுதும் மிகவும் திறமையான மாலுமியின் பக்கமே இருக்கும்'' என்கிறார் ஆங்கில வரலாற்று ஆசிரியர் கிப்பன்.

வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லோரும் தங்களுடைய திறமையினாலேயே உருவானவர்கள்தான். வரும் வாய்ப்பையும் ஏற்படும் சூழ்நிலையையும் — தங்களுக்கு ஏற்ற வழியில், ஏற்றமளிக்கும் வகையில் சரியாகவும் சாமர்த்தியமாகவும், பயன்படுத்திக் கொண்டவர்கள்தான்.

ஆண்டவன் நம்மைத் திறமையுடன்தான் படைத்திருக்கிறான். நம்முடைய திறமையின் மேன்மையே நாம் வாழும் வாழ்க்கை.

சிந்தனையின் விளைவாகத் திறமையும், திறமையின் பரிசாக செயலும் தோன்றி சிறந்த வாழ்க்கைக்கு வடிவம் தருகிறது.

மனிதனாகப் பிறந்த நம்மிடம் படைப்பாற்றல், பகுத்தறிவு, செயல் திறன், சேவைஉணர்வு, சிந்திக்கும் உணர்வு ஆகியன இணைந்து இருப்பது மேன்மையாகும்.

இவற்றை நாம் தகுந்த முறையில் பயன்படுத்தினால் ... நிமிர்ந்து தன்மானத்துடன் ... முடியும்.

நாம் வாழ்க்கை என்ற நல்ல நிலத்தைப் பெற்றிருப்பதனாலேயே, திறமை என்னும் பச்சைப் பயிர் பசுமையாக — பாங்காக விளைகிறது.

அந்தப் பயிரைப் பாதுகாத்து உரம் போட்டு அதில் கவனம் செலுத்தி அல்லும் பகலும் பாடுபட்டால் நல்ல விளைச்சலை அறுவடை செய்யமுடியும்!

பயிரிடும் காலத்தில் பட்டுமெத்தையில் பல மணி நேரம் தூங்கி அசட்டையாக இருந்தால் —

அறுவடையின்போது கள்ளிகளையும், முள்ளையும்தான் அறுக்க முடியுமே தவிர பயிரை அறுவடை செய்ய முடியாது!

இது போலவே நாமும் நல்ல திறமையைப் பெற்றிருப்பதால் மட்டும் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட முடியாது. அவற்றை சிறந்த வழியில் செலவிட்டு செம்மையுடன் வெளிப்படுத்தித் தெளிவாக செயல்படும்பொழுதுதான், அதன் பலனை முழுமையாகப் பெறவும் உணரவும் முடியும்.



நம்மிடமுள்ள திறமையை உரிய முறையில் ஒழுங்காகவும் நேர்மையாகவும் வகைப்படுத்தி வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அதை அழகாக — அறிவாக முழுமையாக வெளிப்படுத்தி, மேன்மைப்படுத்துவதில்தான் வாழ்க்கையின் வெற்றியே அடங்கியிருக்கிறது.

மனிதனாகப் பிறந்த நாம் கட்டாயம் மேன்மையுடன் வாழத்தான் வேண்டும். அதற்கு உரிய வாழும் கலையைக் கற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தங்களுடைய பாதங்களை வரலாற்று ஏட்டில் பதிய வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நம்முடைய வாழ்க்கை ஓடும் நீராய் இருக்க வேண்டுமே தவிர ஒடுங்கி உள்ளடங்கிய நீராய் இருக்கவே கூடாது. ஓடும் நீர் ஊருக்கே உபயோகமாக இருக்கும். தேங்கி நிற்கும் நீர் எவருக்கும் பயன்படாது. ஓடும் நீரில் கிருமிகள் இல்லை. தேங்கி இருக்கும் நீரில் கிருமிகள் உண்டு.

இதே போல நம்முடைய திறமைகளை வைத்து மற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். திறமை வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். காலத்துக்கு ஏற்றபடி திறமைகளை ... கொண்டே செல்லும்போதுதான் நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

இதில் சந்தேகமே கிடையாது! வெற்றியின் திறவுகோல் திறமையே!

''ஒரு நல்ல வேலையை அதிர்ஷ்டத்தால் பெற்றுவிடலாம். ஆனால் அந்த வேலையை அதிர்ஷ்டத்தினால் காப்பாற்றிக் கொள்ளமுடியாது'' என்கிறார் என்றிலிட்டன்.

''எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் அவனுக்கு வந்தது! அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டானே!!'' என்று நடைமுறையில் மக்கள் கூறுவதைக் கேட்கிறோம்.

இதனுடைய அர்த்தம் என்ன?

## மேர்வின்

நல்ல வாய்ப்புக்கிடைத்தும் அதைப் பயன்படுத்தத் தெரியாமல், திறமையை உபயோகிக்காமல் வீணாக விட்டுவிடுவதுதான்.

அரிசி, சோறாக மாறுகின்றபோதுதான் சாப்பிடமுடியும். நூல் ஆடையாக ஆகின்றபோதுதான் அணிந்து மகிழ முடியும்.

கத்தரிக்காய், கூட்டாக மாறினால்தான் உண்ணமுடியும். சாப்பிட்டஉணவு ஜீரணம் ஆனால்தான் சக்திபெற இயலும்.

செங்கல் ஒழுங்காக அடுக்கடுக்காக வைத்துக் கட்டப்படும் போதுதான் வீடாக மாறும்.

ஓடிவரும் நீரைத் தேக்குவதன் மூலமே மின்சாரத்தைப் பெறமுடியும்.

இதே போல—

நம்முடையநல்ல சிந்தனைகள் செயலாக மாறும்போதுதான் வாழ்க்கையை பயனுள்ளதாகச் செய்யமுடியும்.

ஆண்டவன் வண்ண மயிலுக்குக் கண்ணைக் கவரும் தோகையைத் தந்திருப்பது எதற்காக?

அது ஆடி ஆனந்தம் அடைவதற்காக!

இறைவன் இதயத்தை ஈர்க்கும் குரலைக் குயிலுக்குக் கொடுத்திருப்பது ஏன்? அது பாடிப் பரவசம் அடைவதற்காக!

இதே போன்று கடவுள் மனிதனுக்குச் சிந்திக்கும் ஆற்றலை அளித்திருப்பது எதற்காக? அவன் அதைச் செயற்படுத்திச் சிறப்பு அடைவதற்காகத்தான்.

வறட்டுக் கத்தல் வளத்தைத் தராது. வெறும் பேச்சும் எழுத்தும் செயலாகா. துணிவுடன் செயலைச் செய்வதுதான் வாழ்க்கைக்கு உண்மையில் உதவும்.

நம்முடைய பேச்சும் எழுத்தும் செயலாக மாறுகின்ற போதுதான் நன்மையைப் பெற முடியும். வானொலியை அழகாக வைத்திருந்தால் மட்டும் ஓசையை இசையாகப் பொழியாது. அதனை சிறப்பான முறையில் இயக்கினால்தான் இசையின் இன்பத்தை அனுபவிக்க முடியும்.

நாம் எதைப் பற்றியெல்லாம் சிந்தித்தோம் என்பது பெரிது இல்லை. எதை எதையெல்லாம் செயற்படுத்தினோம் என்பதுதான் பெரிது.

''தெய்வீகக் குறிப்பேட்டில் நம்முடைய படிப்பும் பேச்சும் குறித்துக் கொள்ளப்படுவதில்லை. நம்முடைய செயல்கள் மட்டுமே குறித்துக் கொள்ளப்படுகின்றன'' என்று அழகாகக் கூறுகிறார் காந்தியடிகள்.

சிந்தனை செயல் வடிவம் பெற முயற்சி அவசியம் தேவை. உணர்ச்சிதான் முயற்சிக்கு உரமாக ஊக்கம்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் தரப்புத் தூதுக் குழு ஒன்று

# இந்தியா செல்ல முயற்சிக்கக் கூடாதா?

## யாழ். மே தினக் கூட்டங்கள் ஒற்றுமை கேட்டுத் தந்த பாடம்

இலங்கையின் பல பிரதேசங்களிலும் கடும் வெப்பம் மக்களை வாட்டுகிறது. வழமையாக மழை பெய்யும் கொழும்பிலும் இம்முறை அது மிகவும் குறைவு. வெப்பம் மிக அதிகரித்துள்ளதால், இலங்கையிலேயே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள திருகோணமலையில், பாடசாலைகள் நண்பகல் ஒருமணியுடனேயே மூடப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும் அக்னி வாரம் — காண்டாவனம் — தொடங்கி விட்டது. முந்திய காலங்களில், காண்டாவனத்தின் போது, வீடுகளின் ஓலைக் கூரைகள் எரிந்ததாக எங்களின் பேரன், பெற்றோர் கூறக் கேட்டிருக்கிறோம்.

இம்முறை அனல் கக்கும் வெய்யிலைப் பார்த்தால், மரங்களையும் எரித்துவிடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது. குடாநாட்டில் வெய்யில்தான் சுட்டெரிக்கிறதே அன்றி ஏனைய துறைகள் எல்லாம் மப்புக் கட்டியுள்ளன.

கடந்த வாரம் மே தினம் நடத்திய அரசியல் கட்சிகள், ஏன் தான் இந்த அக்கினிப் பரீட்சையில் ஈடுபட்டோம் என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பதாக உள்வீட்டுத் தகவல். அரசியல் என்று வந்துவிட்டு மே நாள் கொண்டாடாமல் இருந்தால் மதிப்பில்லை. சிறிய அளவிலோ வெறும் கூட்டத்தையோ நடத்தி தொழிலாளர் உரிமைகள், அரசியல் நிலைமைகள் குறித்து நாலு வார்த்தையாவது கொட்டா விட்டால் மக்கள் தம்மைக் கீழ் நோக்கிப் பார்ப்பார்கள் என்று அரசியல்வாதிகள் எண்ணினார்கள். ஆனால் பெறுபேறோ வெட்கத்துக்கு உரியதாகி விட்டது.

அரசியல் கட்சிகள் நடத்திய மே தின விழாக்கள் அல்லது கூட்டங்களில் கூடிய மக்களின் — தொழிலாளர்களின் — எண்ணிக்கை, 30,50,100 என்றே இருந்தது. அரசியல் கட்சி ஒன்று நடத்திய மே தின நிகழ்வில் பாதுகாப்புக் கடமைக்கு வந்திருந்த பொலீஸாரின் எண்ணிக்கை அதில் கலந்து கொண்டவர்களை விட அதிகம் என்றால் பாருங்களேன்!

இந்தப் பரிதாப நிலையை முன்னரே உணர்ந்திருந்தால் புளொட்டும், ஈ.பி.ஆர். எல். எவ்வும் சேர்ந்து நடத்தியதுபோல ஏனையோரும் சேர்ந்து ஒன்றாகக் கொண்டாட நினைத்திருப்பார்களோஎன்னவோ...! ஸ்ரீமான் பொதுஜனத்தின் கருத்துப்படி இத்தனை கால அரசியல் அனுபவத்தில் அது சாத்தியப்பட்டிருக்காது! தமிழர் அரசியலில் — தமிழ்த் தலைவர்களிடையே — அன்று தொடக்கம் இன்றுவரை பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் தனித்தனிக் குவியல்களாகவே இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசியல் நடத்த வந்த பின்னர் மே தினவிழா நடத்தாமல் இருக்க முடியுமா? — என்ற மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் அவை கொண்டாடப்பட்டன என்பது இப்போது ஊரறிந்த உண்மை.

### சிறு ஒளிக்கீற்று

எப்படியோ, யாழ்ப்பாணத்தில் நடந்த பெரிய— பிரதான — மே தின விழாவில் மக்கள் ஒரு நல்ல செய்தியைக் கேட்க முடிந்தது. அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என்று தமது கட்சி முடிவு செய்திருப்பதாக புளொட்டின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா தமது மேதின உரையில் அறிவித்தார். தமிழ்த் தலைவர்கள் — பழையவர்களும் புதியவர்களும் — ஒரே அணியில் சேர்ந்து உழைத்தால் மட்டுமே இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும். ஆனால் அந்த ஒற்றுமை எப்போதுமே வராதா என்பதே தமிழ் மக்களின் தொடர்ச்சியான ஏக்கமாக உள்ளது.

அந்த வகையில் புளொட்டின் புதிய முடிவு ஒரு ஒளிக்கீற்று எனக் கருதப்படுகிறது. அவசரகாலச் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டே அரசாங்கமும் அதன் படைகளும் தமிழர்களை மிகக் கேவலமாக, மிக சந்தேகப் பிராணிகளாக நடத்துகிறார்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. இதனைத் தடுப்பதற்கானவாக்குப்பலம் தமிழ்எம்.பிக்களிடம் உண்டு ஆனால் அவர்களோ நவக்கிரகங்கள் போல ஒவ்வொரு கட்சியினர் ஒவ்வொரு திக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதால் அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தை மாதாந்தம் நீடித்துத் தனக்கு வேண்டியதைச் செய்கிறது. இதனைக் கண்காணிக்க புளொட்டின்முடிவு சிறிய அளவிலாவது பங்களிக்கும்.

ஈ.பி.டி.பி. கட்சியும்இப்படி ஒரு முடிவுக்கு வருமானால் அரசுக்குச் சங்கடம் உண்டாகும். ஆனால் அத்தகைய ஒரு முடிவுக்குச் சம்பந்தப்பட்ட கட்சி வருமா என்பதில் தமிழ் மக்களுக்குப் பெரிய சந்தேகம் உண்டு.

தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இருக்குமானால் சந்திரிகா அரசாங்கத்திற்குச் சங்கடத்தை மட்டும் என்ன, அச்சத்தையும் கொடுக்க முடியும் என்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.

அது எப்படி என்கிறீர்களா?

இந்தியாவில் புதிய பி.ஜே.பி. அரசாங்கம் பதவிக்கு வந்ததும், அது தமிழர்களுக்கு ஆதரவாக எதனையும் சொல்லிவிடக்கூடாது என்று உறுதி செய்வதற்காக, தடுப்பதனையே நோக்கமாகக் கொண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விழுந்தடித்துக் கொண்டு புதுடில்லிக்குப் பறந்தார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை நீதியான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளவர்கள் புதிய அரசாங்கத்தில் பங்காளிகளாக இருக்கிறார்கள். அதனால் குஜ்ரால் அரசு போலன்றி, வாஜ்பாய் அரசு அணுகுமுறையை மாற்றி விடுமோ என்ற உளைச்சலுடனேயே சந்திரிகா, கதிர்காமரை தமது விசேட பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்.

ஆனால், பிரதமர் வாஜ்பாஜின் அப்போதைய பட்டும் படாத பதிலோடு, திருப்தி அடைந்தது இலங்கை அரசு. ஆனால் அந்தத் திருப்தி நிலையை [illegible] வந்திருந்த நாகேந்திரன் [illegible]ஜா ஒரு கலக்குக் கலக்கி விட்டார். இது குறித்து சென்ற வாரம் இப்பத்தியில் நீட்டமாக எழுதியிருந்தோம்.

வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைந்திருக்க வகை செய்யும் தீர்வே உகந்த ஒன்றாக இருக்கும் என்று அவர் தெரிவித்தது அரசாங்கத்துக்குப் பெரும் கோபத்தை மூட்டியது.

அந்தக் கருத்தே இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கு ஒப்பானது என்ற ரீதியில் இலங்கை அரசு கொதித்து எழுந்தது.

இனப் பிரச்சினை விவகாரத்தில் நரசிம்மராவ், குஜ்ரால் அரசுகள் கையாண்ட, நடப்பதை பார்த்துக் கொண்டு தூர நிற்பது என்ற அணுகுமுறையை வாஜ்பாய் அரசு பின்பற்றப் போவதில்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது.

இத்தகைய ஒரு புதிய பின்னணியில் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் ஒரு சிரேஷ்ட தலைவரின் தலைமையில் புதுடில்லிக்குச் சென்று அரசுப் பிரமுகர்களைச் சந்தித்து தமிழர் நிலைப்பாட்டையும், அரசும் எதிர்க் கட்சியும் ஒன்றை ஒன்று கடித்துக் கொள்வதையும், அரசியல் தீர்வைக் கொண்டு வருவதில் அரசு தாமதம் காட்டி வருவதையும் எடுத்துச் சொல்லலாம்.

ஆகக் குறைந்தது வடக்கு— கிழக்கு இணைந்த சுயாட்சி கிடைக்கவேண்டும் என்பதே தமிழர்களினுடைய நிலைப்பாடு என்பதையாவது இந்தியாவின் புதிய அரசியல் தலைவர்களு கு எடுத்துச் சொல்லலாம்.

அது குறித்து எந்தத் தமிழ்க் கட்சியாவது இது வரை சிந்தித்தது உண்டா? இரண்டு பேர், மூன்று பேர் தனிப்பட்டமுறையில் சென்று வருவதைவிட, எல்லாக்கட்சிகளையும் சேர்ந்த ஒரு தூதுக் குழு புதுடில்லி செல்லும் போது இலங்கை அரசுக்கும் நிச்சயமாக ''யோசனை பிடிக்கும்''!

# உள்ளும் புறமும்

**குறுமுனி**

அண்மையில் — புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் — இந்தியாவுக்குச் சென்று வந்த பிரமுகர் ஒருவர் —

இலங்கைத் தமிழர் பிரச்சினை, நீதியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் அங்கு புதிய விருப்பம் உண்டாகியுள்ளது தெரிகிறது. ராஜீவ் கொலையின் பின்னர் நிலவிய ஈழத்தமிழர் எதிர்ப்பு உணர்வும், கசப்பு உணர்வும் குறைந்துள்ளன—

எங்கள் தலைவர்கள் ராஜதந்திரம் தெரிந்தவர்களாயின் இந்தச் சந்தர்ப்பத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒரு சிரேஷ்ட அரசியல் தலைவரின் தலைமையில் சில கட்சித் தூதுக் குழுவாகச் சென்று புதுடில்லி அரசுத் தலைவர்களை அல்லது குறைந்த பட்சம் பிரமுகர்களையாவது சந்திக்க வேண்டும் — என்றார். இந்தக் கருத்தை ஆதரித்த ஸ்ரீமான் பொதுஜனம் —

தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேர்வார்களா? ஒரே தூதுக் குழுவாக செல்ல விரும்புவார்களா? தப்பித் தவறி புதுடில்லிக்குப் போனாலும், அங்கு ஹோட்டலில் தங்கி நிற்கும்போது தமக்குள் சண்டை பிடித்துக் கொண்டு திரும்பமாட்டார்களா— என்று சற்றுக் கிண்டலாகக் கேட்டார்!

சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் கைநழுவ விட்டுவிட்டுப் பின்னர் கவலைப்படுவது தமிழர் அரசியல் ஆகிவிட்டது. இதற்குக் காரணம் தமிழ்த் தலைவர்களிடையே நிலவும் ஒற்றுமையின்மையே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

★ ★ ★

வெளிநாட்டுச் செய்தியாளர் நண்பர் ஒருவர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவர் இதற்கு முதலும் இரண்டு மூன்றுதடவைகள் வந்து இங்குள்ள நிலைமையைத் தமது செய்தி நிறுவனத்திற்கு அறிவித்தவர். உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடைபெற்ற போதும் வந்திருந்து ஓடி ஓடிச் செய்தி சேகரித்தவர்.

யாழ்ப்பாணத்தில் இப்போது நிலைமை திருந்திவிட்டதா? மக்களுக்கு இயல்பு வாழ்க்கை நிலை வந்து கொண்டிருக்கிறதுதானே? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனார்.

நீங்கள் நினைப்பது போல —எதிர்பார்ப்பது போல—மக்கள் வாழ்க்கை நிலையில் பெரிதாக மாற்றம் எதுவும் இல்லை. யாழ்ப்பாணம் இப்போது உங்களுக்குத் தெரிந்த இடமாகிவிட்டது. பல இடங்களுக்கும் சென்று கதைத்துப் பாருங்கள்; அவதானியுங்கள் பின்னர் எழுதுங்கள் என்று கூறினோம்.

அடுத்த நாள் வந்தார். நீங்கள் கூறியது சரிதான். சென்ற தடவை வந்து பார்த்ததற்கும் இப்போதைய நிலைக்கும் பெரிதாக எந்த வித்தியாசத்தையும் காண முடியவில்லை என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

அத்தோடு விட்டுவிடவில்லை. கொழும்பிலிருந்து மினைக்கெட்டு வந்ததற்கு ஏதாவது ஒரு ''துண்டு'' செய்தாக வேண்டுமே என்றார்; சற்று நேரம் யோசித்தார். பொருளாதாரம் குறித்து ஒரு விவரணம் செய்யலாம். மேலும் சில நாள்கள்தேவை. உங்கள் கலைகள், மற்றும் பண்பாடு குறித்து ஏதாவது செய்யலாம் என்று தோன்றுகிறது என்றார்;

பரவாயில்லை செய்யுங்கள். கலாசாரம், பண்பாடு குறித்து ஏதாவது செய்ய விரும்பினால் செய்யுங்கள். ஆனால் ஆறுமாத காலத்திற்குள் செய்துவிடுங்கள் என்று சிரித்துக்கொண்டே கூறினோம்.

ஏன், என்று வியப்புடன் கேட்டார். எங்கள் கலாசாரம், பண்பாடு எல்லாம் அழிந்துகொண்டிருக்கின்றன. இளைஞர்கள், யுவதிகள் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று எமது பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஒவ்வாத வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த வேகத்தில் எங்களைத் தனித்துவப் படுத்தும் பலபண்புகள், மரபுகள் அழிந்து போகலாம் என்று அஞ்ச வேண்டியுள்ளது. அதுவே கவலை தருவதாக உள்ளது.—என்றுசற்று விவரமாகக்கூறியபோது அவரும் திகைத்துப் போனார்.

யாழ்ப்பாணத்தவர்கள் படித்தவர்கள், அறநெறி— ஆன்மநெறி சார்ந்த நல்ல மரபுகள், பண்புகள், கலாசாரத்தை உடையவர்கள் என்றே நானும் கேள்விப்பட்டுள்ளேன் —மேலும் உங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் எங்கள் நாட்டில் வாழ்கிறார்கள். மொழி, சமயம், மரபுகள், பண்பாடுகளை இழக்கக் கூடாது என்பதற்காக, அங்கு வாழ்ந்து கொண்டும் தம்மைப் பெரிதாக மாற்றிக் கொள்ளாமல் தனித்துவம் பேணுவதை அவதானிக்க முடிகிறது.—என்றார்.

எங்கள் மரபுகள், நற்பண்புகள், பண்பாடு என்பன எப்படிச் சீரழிகின்றன என்பதனை உதயன் — சஞ்சீவி அவ்வப்போது தொட்டுக் காட்டுகிறது. அதனால் உண்டாகக் கூடிய பாரிய பாதிப்புகளை எடுத்துச் சொல்கிறது.

மதுபானம், கசிப்பு மற்றும் அந்நியச் சரக்குகள், அந்நிய கலாசாரங்கள் இளைஞர்கள், யுவதிகளுக்குத் தாராளமாக எட்டுகின்றன. புதிய புதிய உறவுமுறைகள், அதனால் ஏற்படும் ஏமாற்றம், ஏமாற்றப்படுதல் என்று சமூகம் தறிகெட்டு, வழிகெட்டுச் செல்கிறது.

இவற்றுக்கு மேலதிகமாக கீழத்தரமான பண்புகளையும்,பழக்கங்களையும், ஆசைகளையும் தூண்டக்கூடிய மூன்றாந்தர சஞ்சிகைகள் தாராளமாக உலா வருகின்றன.

யாழ்.நகரின் பிரதான வீதிகளில் நின்றவாறே நீலப்படங்களையும் சஞ்சிகைகளையும் மாணவர்கள், இளைஞர்கள் படிப்பதை, பார்ப்பதைக் காணத் தமக்கு ஏதோபோல இருந்ததாக பெற்றோர்கள் பலரும் கவலை தெரிவிக்கிறார்கள்.

இவற்றை யார் கொண்டு வருகிறார்கள்? பணம் தேடுவதற்காக இப்படியும் ஒரு வியாபாரமா? இவர்களுக்குப் பக்கத்துணை யார்? கட்டுப்பாடு விதிக்க எவரும் இல்லையா? — என்பதே குடாநாட்டில் பலரும் எழுப்பும் கேள்வி.

குடாநாட்டு இளைஞர், யுவதிகளைவேறுவழி திருப்பி, வேண்டாத, ஒவ்வாத தீய பழக்கவழக்கச் சக்கரத்தில் சிக்க வைத்து. அவர்களை வேறு துறைகளில் நாட்டம் கொள்ளாது தடுக்கும் ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியாகவும் இது இருக்கலாம் என்று பலரும் தமக்குள் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் எதிர்ப்புக் குரல் கொடுக்கவோ

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாமிலிருந்தோர் அழுகுரல்

சகதியோரம் எழுமணத்தை சகித்துவாழுறோம்—ஒரு
சதுரஅடிதனை எமக்குள் உரிமை கோருவோம்
பகலிரவாய் நுளம்படித்து பொழுதுபோக்குறோம்—சுற்றி
பலர்ரசிக்க உறவுகொண்டு குழந்தை ஈனுவோம்!
சுகம் தொலைத்து மலங்கழிக்க 'கியூவில்' முந்துவோம்—அட
துவைப்பதற்கு உடையுமில்லை! குளிப்பதெண்ணிடோம்!
அகதியென்ற புகழ்கொடுத்த நிவாரணத்திலே நிதம்
அரைவயிறைக் கழுவுறோம்; நிம்மதியைத் தேடுறோம்.

குழந்தை குஞ்சு 'டயறியாவில்' துவண்டு வீழுது—உடன்
கொடுக்க குளிசை விலையைக்கேட்க குலைப்பன் தோன்றுது
கிழடுகட்டை பசிகிடந்து இறந்துபோகுது—ஏதும்
கிரிகையின்றி ''விதானை தந்த'' பணத்தில் நீறுது.
துளிர்கள் யாவும் இளமைவாட்ட துடித்துவேகுதே—துயர்
தொட; இரும்பு உளங்கள் கூட துருப்பிடிக்குதே!
பலர் ''உதவி வழங்க'' என்று பதிந்து போகிறார்—இந்த
பழிதுடைத்து எமைநிமிர்த்த வருவதிங்கு ஆர்?

—அருணன்—

# 'கொயின்ஸ் போன்'

தூக்க, உடன் காசுகேட்கும் சாமான் — வந்து
தூங்கிநின்று 'கோலெ'டுப்பம் ஆமாம்!
சாக்குப்போக்கு ஏதுமின்றிக் காசை — உள்ளே
தள்ளி நாமும் கதைக்கவதி லாசை!

'இன்சேட் கொயின்ஸ்' என்று வந்து — அங்கு
எழுத்திலே எழுதிவைத்துச் சொல்லும்
தன் வயிற்றில் சில்லறைகள் வாங்கி — பின்னர்
தன்மீது நம்பரினைத் தாங்கும்!

'கிணுகிணு'ன மணியடித்துப் பார்க்கும் — இன்றேல்
கிறுகிறுப்பாய் 'என்கேஜ் ரோன்' கேட்கும்
மனிதருக்காய்ப் பலதடவை முயலும் — தோற்றால்
மறுபடியும் காசுபெற இயலும்!

அடிக்கடியே பழுதுபட்டுப் போகும் — இது
அவசரத்தில் உபத்திரவம் ஆகும்
துடிக்கிறமே சில்லறைகள் மாற்ற — கியூவில்
தூங்கணுமே எம்தொழிலை ஆற்ற.

— கி. வீரயுபுத்திரன் —

# இரவு எங்களின் கைக்குள் இருந்தது

ஆறேழு மணிக்குள்ளே அத்தனை தெருவும்
ஆளரவமின்றி வெறிச்சோடிப் போனது!
கூட்டுக்குள் முடங்கும் கோழிகள் போல — கல்லுக்
கும்பிக்குள் ஒடுங்கும் கிரிகள்போல்
வீட்டுக்குள் அடங்கினர் எம்மக்கள்;
இனி
விடிந்த பின்னாலதான்
தொடங்கும் அசைவியக்கம்.
நேற்றைய வாழ்வை நினைக்கையில் உவகை
ஊற்றெனப் பெருக உடலும் சிலிர்க்கும்.
இரவு எங்களின் கைக்குள் இருந்தது;
இருளும் எமக்கு ஏவல் புரிந்தது.
விழாக்கோலம் பூணும்
விடியும் வரை நம்கோயில்;
வேத ஒலியும் நாதஸ்வரமும்
ஓதுவார்தம் பண்ணார் கீதமும்
நாதப் புனலாய் இரவைக் குளிர்விக்கும்
விடிவெள்ளி முளைக்குமுன்
துலா ஆடத் தொடங்கும்;
வெண்ணிலவின் தண்ணொளியில்
வள்ளம் கரை மீளும்.
இசைவிழா இரவின் பாதிவரை நீளும்;
இன்பத் தமிழ் வளர்க்கும்
கம்பன் பெருவிழாவில்
இரவிரவாய் இலக்கியத்தேன்
பருகவெனச் சனம் மொய்க்கும்.
முத்தமிழ் ஆய்வுகள், பட்டிமன்றங்கள்,
வித்துவம் விளையும் கலையரங்கேற்றங்கள்
எத்தனை நிகழ்வுகள் இரவினை அணிசெய்யும்?
அத்தனையும் இன்று பழங்கதையானது
அன்றைய இரவுகள் என்றுதான் மீளுமோ?

— எம். சிதம்பரநாதன் —

# ஏது பயன்?

வீற்றங்கிருப்போரை வேண்டித் தேடிவந்து
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானால்
நேற்றிங்கு வந்து நேரம் மினக்கெட்டு
காற்றிலே கலக்கவிட்ட சேதியால் ஏது பயன்?

அறிவிலே வறுமை அகத்துள் ஓங்கி நிற்க
பொறியிலே வீழ்த்தும் சூழ்ச்சிகள் பல செய்தும்
நெறியிலே அவர்கள் நீங்காமல் இருப்பரெனின்
குறியிலே கண்ணாய் இருந்ததனால் ஏது பயன்?

தலையாட்டும் பொம்மைகளாய் தகுதி பழக்குவித்து
விலை கேட்க... அதற்கோர் பதவி தானளித்து
சிலைகளாய் மெருகூட்டி சிறுவரிசை கட்டி வைக்க
மலைகளாய் அவர் எழுந்தால் மதியினால் ஏது பயன்?

பதவியை வைத்துப் பல பாராயணங்கள் செய்து
உதவி இல்லாவிட்டாலும் உபத்திரவம் பல கொடுத்து
நியதியை மாற்றி நிலை குலைய வைத்தாலும்
சகதியாய் எனை மதித்தால் சாதனையில் ஏது பயன்?

—வேலணை ஷணா —

# மயக்க மருந்துகள்

இன்னிசைக் கண்ணன்
தன்னை மறந்து
யாரு மறியாது
ராதைக்கும் தெரியாமல்
சடுதியாயிங்கு வந்து
விடுதிபோற் தெரிந்த
வெண் திரையரங்கில்
வேகமாய் நுழைந்தார்
கண்ணைப் பறிக்கும்
வண்ணத்தி லுருவான
தமிழ்ப் பட 'மது'
கூட்ட மதிகம் தான்
இடம் தேடிப் பிடித்து
வசதியா யமர்ந்தார்,
தன்னை ம(றை)றக்கவே
மாயக் கண்ணன்
கன்னத்தில்......
கை வைத்தாலும்
காட்சிகளைப் பார்த்து
கண்களை மட்டும்
ஏன் அடிக்கடி
காதற் கண்ணன்
மூடிக் கொண்டார்?

—க. நாகராசா—

# 'ரியூசன்' வியூகம்!

ஆ............ சிரியுங்கள்!
ஆசிரியம் இல்லாத
அரியகளம்!

'டே கிளாஸ்'
'அவ கிளாஸ்.........'
அடிபட்டுக்
கொள்ளுங்கள்
பணமிருந்தால்,
எந்த வாத்தியும்!
பக்க வாத்தியம்!
தாராள வசதியுள்ளோர்
தனித்தனியே கூட -
இந்த
வாத்தியத்தை
வாசிக்கலாம்
விரும்பின், வீடுவீடாய்...

மூக்கைப் பிடித்தால்
வாய் திறக்கத்தெரியா
முதலாம் ஆண்டு
முளைகளையும் கூட
இப்போ —
ரீயூட்டரி முதலைகளின்
முற்றுகை!

கல்வி என்ன
கடைச்சரக்கா?
காசைக் கொடுத்து
களஞ்சியப்படுத்த
கல்வி,
மனித நடத்தைகளை
நாகரிகமாக
நகர்த்திச் செல்வது

பண்பையும், பணிவையும்
பகுத்தறியும்
பக்குவத்தையும்
பகர்வது.
வயதிலும்,
வாண்மையிலும்
மதிப்புள்ளோரை
மதிக்காத கல்வியை
தூக்கி மிதி!

இன்றநெற்,
கணனியெனும்
இயந்திர மாணவர்
மட்டும்
இங்கு வேண்டாம்.
இங்கித மாணவமே
இங்கு வேண்டும்.
ஆளுமைத் திறனும்
ஆக்க அறிவும்
அன்புறவும்
மனித மனங்களை
மதிக்கும் பாங்கும் தான்
மாணவா! உன்னை
மாண்புறச் செய்யும்!

— மானியூர் ரட்ணேஸ் —

# ஏன்? ஏன்? ஏன்?

மனம் கண்ட மருதமும்—எழில்
வனம் கொண்ட முல்லையும்
தினம் விண் கொஞ்சும் குறிஞ்சியும்
தனம் விஞ்சும் நெய்தலும்—இங்கு
சினம் கொண்ட பாலையாகி
இனம் கொல்லும் வேலையானதேன்?

எள்ளுக்குள் ஈரமென்று பணங் கொண்டோர்
உள்ளுக்குள் உழைப் போர்க்கு உணர்வூட்டி
எளியவரை ஏணியாக்கி ஏறிநின்று—தாம்
வலியவராகி மாய வலை போட்டு
வேளைக் கூலி கொடாமல்—ஏழையவர்
தோளைக் கேலி செய்வதேன்?

அலைந்து திரிந்த காலமும் எங்கள்
கலைந்துபோன வாழ்க்கையும்
கூட்டுக் குடும்பமதைக் குலைய வைத்து — பாரம்பரியப்
பூட்டு நெகிழப் பாரெங்கும் பரந்து
சூடு கெட்டுச் சொரணை கெட்டு
வீடு விட்டு நாடு விட்டு வாழவைத்ததேன்?

வண்டு நாடும் பல் மலர்ச் சோலையும்—கல்வி
கண்டு தேடும் பல்கலைக்கழகமும்
உண்டு என்று நாடிவந்தவர்—காலொடிந்த
நண்டு போல வேலையற்று இருப்பதேன்?
வேலை உண்டு உண்டு என்று—தொண்டர்
காலை வாரி விட்டதேன்?

—இணுவை. எம். எழினி—

# பொங்கல்

அரசவெளி அம்மன் ஆலயத்தில் இன்றைக்கு
வருசத்துப் பொங்கல்!
வழமைபோல்..... இம்முறையும்
ஊர்சிலிர்க்கக் கோயில் ஒளிமயமாய் நிற்கிறது.
நாலுகூட்டம் மேளம்,
நாதஸ்வரச் சமா வேள்வி,
சீர்காழியின் பாட்டு...... சிவனே! குச்சொழுங்கையெல்லாம்
பூப்படைந்த பெண்ணாகப் பூரித்துப் பூக்கிறது!
பொங்கலென்றால் இங்கோர் புனித மணங்கமழும்!
குஞ்சு குருமானின் கும்மாளக் குழப்படிகள்
மிஞ்சையிலும்......வீதிவிழாக்கோலம் பூண்டிருக்கும்
வெறும்மேலில் சங்கிலிகள் மினுங்கி
வயிறுதொடப்பொடி செற்றும்,
கைகால் தெரியாது நகைபுனைந்த பொடிச்சிகளும்
குளித்துப் புதிதான கிழடுகளும்,
கலகலக்க எங்கும் கவினொழுகும்!
வரிவரியாய்ப் பொங்கிப்படைத்ததன்பின் பூசைபார்த்துக்
கோயிலடி
முன்நிழலில் கூடி பொங்கலுண்டு ஆறுகையில்
'தெய்வீகப்பேருரைகள்'
'ஸ்ரீ தேவி வில்லிசை'பின்
'கம்பன் கழகத்தின் பட்டிமன்றம்'......கடைசியாக
சாமம் கழிந்தபின்பு 'சாந்தன் இசைக்கோஷ்டி'
காலை விடியுமட்டும் களிப்போம்; எம்மோட்சமிது
ஊர்குவிந்தால்,
தூரத் துறவெல்லாம் ஒன்றாய்க்கை
கோர்த்திருந்தால்,
வேட்டி கூறையெல்லாம் அணிவகுத்து
சேர்ந்திருந்தால் அந்தச் 'சிறப்பிருக்கே' அது பெரிசு!

அரசவெளி அம்மன் ஆலயத்தில் இன்றும்தான்
வருசத்துப் பொங்கல்!
ஆனால்......இன்றுஐயர்
''ஆறடிக்கு'' முன் எல்லாம் அடங்குமென்றார்;
''ஊரடங்காம்''!
நாலு கூட்டம் மேளம், நாதசுரக் கச்சேரி
சீர்காழியின் பாட்டின்றும் சிதையலைதான்
எனினும் நாம்......
பொங்கி இரவிரவாய்ப் புளுகிநிற்கும் இன்பத்தை
இன்றிழந்தோம்!
யுத்த இடியில் முகமிழந்துள்ளோம்!

—த. ஜெயசீலன்—

# யாழ்ப்பாணத்து மருத்துவிச்சி வாழ்த்து!

ஆமிக்காரர் பிடியாமல் இருக்க வேண்டும்
அசம்பாவிதம் நடவாமல் இருக்க வேண்டும்
அடிக்கொரு சென்றி குறைய வேண்டும்
அம்பி நீ தொலையாமல் இருக்க வேண்டும்.

அரிசிப் பொதியோடும் வந்தீரோதம்பி
ஆமி அடையாளக் காட்டோடும் வந்தீரோதம்பி?

நெல்லுப் பொதியோடும் வந்தீரோதம்பி
நசனல் அடையாளக காட்டோடும் வந்தீரோ தம்பி?

மஞ்சள் பொதியோடும் வந்தீரோதம்பி
மஞ்சள் சீனி விலை கேட்டும் வந்தீரோதம்பி?

மிளகுப் பொதியோடும் வந்தீரோதம்பி
மீசை முளைக்காத ஆமியைக் கண்டீரோதம்பி?

உள்ளிப் பொதியோடும் வந்தீரோதம்பி
உலர் உணவு அட்டை கொண்டு வந்தீரோதம்பி?

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோதம்பி
இராணுவ தடை தாண்டி வந்தீரோதம்பி?

காசுப்பொதியோடும் வந்தீரோதம்பி
காணாமற் போகமால் இருப்பீரோதம்பி?

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோதம்பி
வெள்ளைப்பூரான் கடியாமல் வந்தீரோதம்பி?

— இராகவன் —

# கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திக்கு முந்திய சத்தியாக்கிரகி



'இந்தியாவின் முதல் சத்தியாக்கிரகி யார்?' என்று கேட்டால் பலரும் மகாத்மா காந்தியைத்தான் குறிப்பிடுவர். இதுவும் ஓர் அளவிற்கு உண்மையே ஆகும்.

ஆனால் நீண்ட நெடுங்கால வரலாறு படைத்த இந்தியநாட்டின் பழைய வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் மகாத்மா காந்திக்கு முன்னோடியாக ஒரு சத்தியாக்கிரகி வாழ்ந்தார் என்பதை அறிய முடியும்.

சத்தியாக்கிரகத்தின் அடிப்படை, அகிம்சையில் காலூன்றியுள்ளது. இதனுடைய இலக்கணம் யாது என்று வினவினால், உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பேராசான் அதற்கு இலக்கணம் கூறியுள்ளதைக் காணலாம்.

''உற்ற நோய் நோன்றல்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

இந்தக் குறள் அறத்துப் பாலில் துறவறயியலில் இருப்பதால் இதன் ஆழத்தைப் பலரும் கவனிக்காமல் விட்டு விட்டனர். தவம் என்ற சொல்லுக்குப் பதிலாகச் சத்தியாக்கிரகம் என்ற சொல்லை வைத்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.


''உற்ற நோய் நோன்றல்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே
சத்தியாக்கிரகத்திற் குரு''

என்று சொல்லலாம்.

சத்தியாக்கிரகத்தில் இரண்டு முக்கியமான உறுப்புக்கள் உண்டு.

முதலாவது — பிறரும் பிற உயிர்கள் என்பவர்களும் தனக்கு எவ்வளவு தீங்கு இழைத்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகும்.

பொறுத்துக் கொள்ளுதல் என்று கூறினவுடன், உடல் அளவில் பொறுத்துக் கொள்ளுதலை மட்டும் பலர் நினைப்பர். உடல் அளவில் பொறுத்துக் கொள்ளுபவர் கூட மனதளவில் பொறுக்காமல் துன்பம் செய்பவரை மனதுக்குள் ஏசுவர். அன்றேல் வாய்ப்புக் கிடைத்தால் எவ்வாறு அவர்களுக்கு இந்தத் தீமையைத் திருப்பி விடலாம் என்று எண்ணுவர். இவ்வாறு மனதாலும்



நினைத்தல் கூடாது என்பதை வலியுறுத்தவே வள்ளுவர் 'நோன்றல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

நோன்றல் என்றால் மனம், மொழி, உடம்பு என்ற மூன்றினாலும் பிறர் செய்யும் கொடுமையைப் பொறுத்துக் கொள்ளுதல் என்பது பொருளாகும்.

இதற்கு அடுத்த நிலை, பிற உயிர்களுக்கு மறந்தும் தீமை செய்யாதிருத்தல் ஆகும். இவை இரண்டையும் பெற்றுவிட்ட சத்தியாக்கிரகி தான் எடுத்துக் கொண்ட முயற்சி சிறியதோ பெரியதோ, முடிவதோ முடியாததோ அதுபற்றிக் கவலையே படமாட்டான்; இறுதிவரையில் தன் கொள்கையிலிருந்து வழுவவும் மாட்டான். அச்சம் என்பது சத்தியாக்கிரகிக்கு அருகிலும் அணுகுவதில்லை.

இந்த அடிப்படை இலக்கணத்தை மனதிற் கொண்டு 7 — ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் இந்தியநாட்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் என்ற பெருமகனாருடைய வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். அவர் குற்றம் இழைத்ததாகக் கருதிய மன்னன் அவரை அழைத்து வருமாறு பணியாளர்களை ஏவுகிறான். அரசன் தண்டனை தர அழைக்கிறான் என்பதை அறிந்த இந்தச் சத்தியாக்கிரகி, ''அஞ்சுவதுயாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை'' என்று பாடிக் கொண்டே செல்கிறார்.

## நாவுக்கரசரே!

மன்னவன் நீற்றறையில் இட்டான்; யானையைக் கொண்டு இடறச்செய்தான்; நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணுமாறு கொடுத்தான்; இறுதியாகக் கல்லுடன் கட்டிக் கடலிலே போட்டுவிட்டான். இவை அனைத்தையும் செய்த மன்னவனை இந்தப் பெருமகனார் வெறுத்ததாகவோ, மனதில் மாச்சரியம் கொண்டதாகவோ, ஒரு சொல் கூறியதாகவோ கூடத் தேவாரத்தில் எவ்விதச் சான்றுகளும் இல்லை. இதுவே 'உற்றநோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும்' ஆகும்.

சத்தியாக்கிரகி தொடங்கிய செயலை இடையில் விடுவதில்லை என்பது அடுத்த இலக்கணம்.

திருநாவுக்கரசர் எவ்வித முன்னேற்பாடுமின்றிக் கயிலைமலையில் இறைவனைக் காண வேண்டும் என்று புறப்பட்டு விட்டார். நாடு கடந்து, பனிப்பிரதேசங்கள் கடந்து செல்லுகையில் கைகளும் கால்களும் — Frost Bite என்று சொல்லுகிறோமே — அந்த நோயினால் செயலிழந்த பிறகும் மார்பினால் தத்தியும் தவழ்ந்தும் செல்லுகிறார். எதிரே வந்த முனிவர் ஒருவர் இவர் கருத்தையும் செயலையும் பார்த்து, ''மானுட உடலுடன் கயிலை செல்வது இயலாத காரியம்'' என்பதை எடுத்துக் கூறுகிறார். மாபெரும் அறிஞராகிய நாவுக்கரசருக்கு இது தெரியாதா? தெரிந்துதானே இந்தச் செயலை மேற்கொண்டார்? எனவே, ''மாளும் இவ்வுடல் கொண்டு இனி மீளேன்'' என்று கூறி மேலே செல்லத் தொடங்குகிறார்.

தனி ஒரு மனிதன் சூரியன் அஸ்தமிக்காத ஒரு சாம்ராஜ்யத்தைக் கத்தியின்றி, படைபலம் எதுவும் இன்றி எதிர்க்கிறார் என்றால், பிறர் இயலாது என்று நினைப்பதைத் தெரிந்துதானே மகாத்மா

பேராசிரியர்
அ. ச. ஞானசம்பந்தன்

இந்தச் செயலைச் செய்ய முற்பட்டார்? அதே போலத்தான் பிறர் இந்த உடலுடன் கயிலை செல்ல முடியாது என்று கூறுவதை அறிந்திருந்தும் நாவரசர் செல்ல முற்பட்டார். இந்தச் சத்தியாக்கிரகியிடம் அச்சம் என்பது மருந்துக்கும்இல்லை. எனவே இவர்கள் தாம் மேற்கொண்ட குறிக்கோளில் வெற்றி பெற்றதில் வியப்பு ஒன்றுமில்லை.

ஆதலால் இந்த உலகின் முதல் சத்தியாக்கிரகி திருநாவுக்கரசர் என்பதை அறிதல் வேண்டும். ★

# நல்லதோர் குடும்பம்!....

ஓர் ஆரோக்கியமான குடும்பம் தானும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு, சமூகத்தின் ஏனைய குடும்ப அமைப்புகளும் மகிழ்ச்சியாக இருக்க உதவுகின்றது. ஒரு சிறந்த ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்குவது தான் எல்லோரினதும் உந்துதலாக உள்ளது. இது ஒரு பெரிய விடயமல்ல; எல்லோராலும் இயலக்கூடிய ஒரு காரியமாகும்.

ஒரு குடும்பத்தில் தனிநபர் ஒருவர் உளத்தாக்கத்திற்குள்ளாகும் போதோ அல்லது பல அங்கத்தவர்கள் உளத்தாக்கமுறும் பொழுதோ அவர்கள் தங்களிடையேயும், பிறருடனுமான தொடர்புகளில் எதிர் உணர்வுகளைக் காட்டி நிற்பர். அவர்கள் தங்களது செயற்பாடுகளினால் தாமும் பாதிப்புற்று, ஏனையோரையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றனர். ஆரோக்கியமான குடும்பமானது இதற்கு எதிர் மறையாகச் செயற்படுகின்றது.

> ......தற்பொழுது நிலவுகின்ற புறச்சூழல்களின் பாதிப்பினால் குடும்பம் என்ற நிறுவனத்தின் அமைப்பும், இயக்கப்பாடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

ஆரோக்கியமான குடும்ப அங்கத்தவர்கள் உலக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பர்; [illegible] கெட்டவர்களை இனங்கண்டு கொள்வர். மற்றவர்களை அவரவர் குணங்களுடன் அப்படியே ஏற்றுக்கொள்வர்; அநேகமாக பிறரிடம் சகஜமாகப் பழகும் ஆளுமையைக் கொண்டிருப்பர். இந்த ஆளுமையின் காரணமாக எல்லோரிடமும் மனம் விட்டுப் பழகுவர்.

மற்றைய விடயம், எல்லோரும் வியக்கத்தக்கதான அன்பு செலுத்தும் மனப்பாங்கை இக்குடும்ப உறுப்பினர்கள் கொண்டிருப்பதாகும். ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு செலுத்துகின்றவர்களாகவும், அதே வேளை ஒருவர் இல்லாவிடில் கூட மற்றவர் சோர்வடையாமல் தன்னில் தானே தங்கியிருக்கும் மனப்பாங்கைக் கொண்டிருப்பவராகவும் இவர்கள் காணப்படுவர். தங்களது சுயாதீனத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருப்பர். மற்றவர் பிரிந்திருக்கும் பொழுது மகிழ்ச்சியாக வாழ்வதும், [illegible] மேலும் கூடுதலாக ஆனந்தப் படுவதுமான வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பர். அங்கத்தவர்களின் பிரிவு இவர்களுக்கு உளத்தாக்கத்தைக் கொடுப்பதில்லை. ஓர் ஆரோக்கியமான குடும்பத்தில் அன்பு ஒரு நெருக்கத்தையும், அதேநேரம் குறிப்பிடத்தக்க ஒரு தூரத்தையும் சுட்டி நிற்கும். ஒருவரில் ஒருவர் வாழ்வு முழுவதும் தங்கி வாழ்வதும் ஒருவர் இல்லாவிடின் மற்றவர் சோர்ந்து துன்பப்படுவதும் இல்லாதிருக்கும். இவர்களின் உறவுகள் அவாவை அடித்தளமாகக் கொண்டிருக்க மாட்டா.

ஆரோக்கியமான குடும்பமொன்றில் எல்லா அங்கத்தவர்களின் கருத்துக்களும் கலந்தாலோசிக்கப்படுகின்றன. சில குடும்பங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல், தாம் எடுக்கும் முடிவே சரியானது; அதையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலிந்து நிற்பர். இக்குடும்பங்களில் பிள்ளைகள் காணப்பட்டாலும் கேட்கப்படுவதில்லை. இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் பல்வேறு விதமான எதிர்மறை உள உந்தல்களுக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படுகின்றது. மாறாக, குடும்ப விடயங்கள் எல்லோருடனும் கலந்தாலோசிக்கப்பட்டு, அதனைச் செயலாற்ற எடுக்கும் முடிவை குடும்பத்தலைவர் நடைமுறைப்படுத்தும் பொழுது ஏனைய அங்கத்தவர்களும் தாம் கலந்தாலோசிக்கப்பட்டதான திருப்தியைக் கொண்டிருப்பர். முக்கியமாகப் பிள்ளைகள் சுயமாக விவாதிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். தமது பிரச்சினைகளை வெளிப்படையாகப் பெற்றோரிடம் விவாதிப்பதற்குப் பழக்கப்பட்டுக் கொள்வர். அவர்களது சரியான தீர்மானங்களை பெற்றோர்கள் கருத்திலெடுத்து நடைமுறைப்படுத்தும் பொழுது, முழுக்குடும்பமும் மகிழ்ச்சியாக இருக்கும்.

ஆரோக்கியமான குடும்பம் சமுதாய மாற்றங்களுக்கேற்ப

(IX ஆம் பக்கம் பார்க்க)

> யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் உள்ள உளவளத்துணைக்கும் ஆரோக்கியத்துக்குமான சங்கத்தினால் (Association For Health and Counselling)—உள நலம் சம்பந்தமாக 'மனவெளி' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. அண்மையில் வெளியான அதன் ஐந்தாவது. இதழில் ''குடும்பம்'' எனற தலைப்பில் மு. மணிவாசகன் வரைந்த கட்டுரை இது.

> சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் அமைந்துள்ளது. எங்கள் சமூகத்தில் குடும்பம் ஒரு பலமான அமைப்பாக இருந்து வந்துள்ளது; இன்னமும் இருந்து வருகின்றது. நெருக்கீடுகள் ஏற்படுகின்ற பொழுதும், தனது அங்கத்தவர்களில் ஒருவர் உடல், உளரீதியாகப் பாதிப்புறும் பொழுதும் குடும்பம் ஆதரவளிக்கும், பகிர்ந்து கொள்ளும் ஓர் அமைப்பாகத் தொழிற்படுகிறது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி

சஞ்சீவி சிறுகதை

காலைப் பொழுதின் களை இன்னும் கலைந்துவிட வில்லை. சின்னம்மா தன் வழமையான மரக்குற்றி ஆச னத்தில் அமர்ந்தவாறு பல் துலக்கிக் கொண்டிருந்தாள். அவளின் கைகள் தம் கடமை யைச் செவ்வனே செய்து கொண்டிருக்க, கண்கள் மட் டும் எதிர் வீட்டுப் பரமசுந்தரி யின் வேலியை இடமிருந்து வலமாயும், வலமிருந்து இடமாயும் மேய்ந்துகொண் டிருந்தன. அவளின் மனம் அனலிலிட்ட மெழுகாய்க் கொதித்தது. இரவோடிர வாய்ப் புதிதாக முளைத்த சில முருக்கங்கதியால்களை யும் அவள் கவனிக்கத் தவற வில்லை. அவை அவள் கண் வழி சென்று இதயத்தில் 'சுறுக்' கென்று தைத்தன.

''போன கிழமைதான் இஞ்சாலை புதிசாய்ப் போட்ட கதியால்களையெல் லாம் புடுங்கியெறிஞ்சனான். அந்தக் களைப்பு மாறிறதுக் கிடையில் பிறகும் புதிசாய்க் கதியால் போட்டிருக் கிறானே? இதை இப்படியே விடக்கூடாது'' என்று நினைத்தவளாய் சின்னம்மா தன் கையிலிருந்த உமிக் கரியை வீசியெறிந்துவிட்டு 'விறுக்' கென்று எழுந்தாள்.

''உது என்ன வேலியே? பாம்பு நெளிஞ்ச மாதிரிக் கதியாலெல்லாம் அங்கையு மிஞ்சையும் நிக்கிது. எல் லையைத் தள்ளித் தள்ளி எவ்வளவு காணியைப் பிடிச் சுப் போட்டான் இந்தப் பர தேசி'' என்று மனதில் கறு வியவாறே வேலியை நோக்கி வேகமாய் நடந்தாள். வந்த வேகத்திலேயே தன் கைய ளவு மொத்தக் கதியாலொன் றைப் ''படீர்'' என்று முறித்து அப்பாற் போட் டாள். அவ்வளவுதான், மறு பக்கத்திலிருந்து உடனடி யாகவே குரல் வந்தது.

''சின்னம்மா உன்ரை சின் னத்தனத்துக்கு ஒரு அள வில்லையே? ஏன் ஊராற்ற வேலியை முறிக்கிறாய்? உனக்கு எரிக்க விறகில்லை யெண்டால் கேளன்; உவன் ஏரம்புவின்ரை காலையிலை ஒரு தூக்கு வாங்கித்தாறன்'' என்றாள் பரமசுந்தரி.

''என்னடி சொன்னனி? கதியால் போட்டுப் போட்டுக் கள்ளக்காணி பிடிக்கிற நீ என்னோடை கதைக்க வந் திட்டியோ? கட்டையிலை போகேக்கை காணியெல்லாம் என்ன சுருட்டிக் கொண்டே போகப்போறாய்?'' என் றாள் சின்னம்மா.

''ஓமடி, நான் கட்டை யிலை போறன், நீ மட்டும் என்ன கழுதையிலையே போகப்போறாய்?'' என் றாள் பரமசுந்தரி.

''இஞ்சைபார் பரமசுந்தரி, எனக்கு விசர் வாறதுக் கிடையிலை மரியாதையாய் இந்த வேலியைப் புடுங்கி வடிவாய் அடைக்கப் போறியோ இல்லையோ?'' என்றாள் சின்னம்மா.

''ஓ, உங்கடை குடும்பமே ஒரு விசர்க் குடும்பமெண்டு எனக்குத் தெரியுந்தானே? உன்ரை கொப்பரின்ரை தம்பி விசர் பிடிச்சு றோட்டு றோட்டாய் அலைஞ்சது எனக்குத் தெரியாதெண்டு நினைச்சியே?'' என்றாள் பரமசுந்தரி.

''ஐயோ அம்மாளாச்சி, இவளின்ரை தலையிலை இடி விழ. அம்மன் வாலாயத் திலை திரிஞ்ச சித்தப்பா வைப் பார்த்து விசரனென் டோடி சொல்லிறாய்? அவர் செய்த அற்புதங்கள் உனக் குத் தெரியுமே?'' என்று சற்றே மாறுபட்ட தொனி யில் கத்தினாள் சின்னம்மா.

''ஓமடி, உங்கடை குடும் பமே ஒரு அற்புதமான குடும் பந்தான்'' என்று ஏளனமாய் நகைத்தாள் பரமசுந்தரி.

''எங்கடை குடும்பத்தைப் பற்றிக் கதைக்க நீயாரடி?'' என்றவாறு வேலித் தடி யொன்றை முறித்து ஓங்கி னாள் சின்னம்மா.

''இஞ்சை பார் சின்னம்மா வேலியிலை கை வைச்சியோ பிறகு கை நிலத்திலைதான் கிடக்கும்'' என்றவாறு தேங் காய் உடைப்பதற்காக வைத் திருந்த கொடுவாய்க் கத் தியை ஓங்கியவாறு சற்றே முன்னாக்கி வந்தாள் பரம சுந்தரி.

''ஓ, கட்டின பெண் சாதிக்கே கத்தியாலை குத் தினவனெல்லே உன்ரை கொண்ணன். அவனின்ரை தங்கச்சிதானே நீ'' என்றாள் சின்னம்மா.


''என்னைப்பற்றி என் னெண்டாலும் சொல்லு. என்ரை அண்ணனைப் பற்றி ஏதாவது சொன்னியோ, பிறகு நான் என்ன செய்வ னெண்டு எனக்கே தெரி யாது'' என்றாள் பரமசுந் தரி.

''ஓ, பாசமலர் சிவாசி கணேசன்தானே உன்ரை கொண்ணன். தறுதலை நாய்'' என்றாள் சின்னம்மா.

''என்னடி சொன்னனி?'' என்றவாறு வேலியின் ஓர் இடுக்கு வழியாக எகிறிப் பாய்ந்து சின்னம்மாவின் தலை மயிரைப் பற்றினாள் பரமசுந்தரி. பதிலுக்கு சின் னம்மாவும் பரமசுந்தரியின் தலை மயிரைப் பற்ற, இரு வரும் தரையிலே உருண்ட னர்.

இந்தக் காட்சியைக் கண்ட சின்னம்மாவின் கணவன் இராமநாதன் விரைந்துவந்து களத்தில் குதித்தார்.

''என்ரை காணிக்குள்ளை வந்து, என்ரை மனிசியின்ரை குடும்பியிலை பிடிக்க உனக்கு என்னடி துணிவு?'' என்ற வாறு பரமசுந்தரியை அப் பால் தள்ளினார் இராம நாதன்.



''ஐயோ, பொம்பிளை யெண்டும் பாக்காமல் இப் பிடித் தள்ளிப்போட்டானே இந்தச் சண்டாளன். இஞ் சாருங்கோ, கட்டின மனிசி கத்திறது உங்கடை காதிலை விழேல்லையோ? எங்கை யப்பா நிக்கிறியள்?'' என்று அலறினாள் பரமசுந்தரி.

புது வருடம் அண்மித்துக் கொண்டிருந்ததால் வீட் டைத் துப்புரவு செய்கின்ற பொறுப்பு கந்தையரிடம் விடப்பட்டிருந்தது. தனக்கு வழங்கப்பட்ட பணியை மிகுந்த கவனத்துடன் செய்து கொண்டிருந்தார் கந்தையர். அவரின் மனதில் தன் ஒரே மகளான வாசுகியின் திரு மணம் பற்றிய சிந்தனைகள் சங்கிலித் தொடராய் வந்து கொண்டிருந்தன. அவரின் உறவுக்காரப் பையனொரு வன் கனடாவிலிருந்து வாசுகி யைப் பெண் கேட்டிருந்தான். மாப்பிள்ளையின் பெற்றோர் சீதனம் எதுவும் வாங்கக் கூடாது என்னும் முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள்.

''நீங்கள் ஒரு சல்லிக் காசும் சீதனமாய்த் தரவேண் டாம். பிள்ளையைக் கனடா வுக்கு அனுப்பி விட்டாலே போதும்'' என்று திட்டவட்ட மாக எழுதியிருந்தனர்.

கந்தையருக்கும் இந்தக் கனடாச் சம்பந்தத்தில் இஷ் டந்தான். இருந்தாலும், வாசுகியை அந்தக் கண் காணாத தேசத்திற்கு அனுப்ப அவர் மனம் இடங் கொடுக்கவில்லை.

வாசுகி, அவருக்கு மக ளாகப் பிறந்திருக்காவிட் டால், கந்தையர் எப் போதோ சம்சார பந்தத்தை உதறி விட்டுச் சன்னியாசி யாய்ப் போயிருப்பார். இன் றைக்கும் அவர் ஒரு பாசம் மிக்க குடும்பத் தலைவனாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் வாசுகிதான். பரமசுந்தரியின் பலத்த தாக்குதல்களுக்கு அவர் இலக்காகும் போதெல் லாம் ஓடோடிவந்து அவ ரைக் காத்து இரட்சிப்பவள் வாசுகிதான். அப்பேற்பட்ட தன் அருமை மகளைப் பிரிய அவர் எப்படித்தான் சம்மதிப் பார்?

பெருமூச் செறிந்தவாறே நிமிர்ந்த கந்தையர், தன் வேலைகளை ஒருவிதமாய் நிறுத்திவிட்டு மேசையிற் கிடந்த அன்றைய தினசரியை எடுத்துக் கொண்டு தன் வழமையான சாய்மனைக் கதிரையில் சென்று சாய்ந் தார்.

''வாய்ப்பேச்சில் தொடங் கிய கலகம் வாள் வீச்சில் முடிந்தது. இருவர் பலி; நால் வர் படுகாயம்'' என்று கொட்டை எழுத்தில் போடப் பட்டிருந்த செய்தி அவரின் கண்களில் பட்டது. ''சாச் சாச்சாச்சா... விடியக்காத் தாலை கொஞ்சம் நிம்மதி யாய்ப் பேப்பர் பாக்கலாம் எண்டு பாத்தால் ஒரே வாள் வீச்சும் கத்திக் குத்துமாய்க் கிடக்குது. உலகம் நல்லாத் தான் கெட்டுப்போச்சிது'' என்றவாறு மறுபக்கத்தைத் திருப்பினார்.

''செவ்வாயின் தரையில் பாத்பைண்டர்'' என்ற தலைப்பு அவரின் கண்களில் பட்டது.

''அங்கையென்னடாவெண் டால், அவன் செவ்வா யின்ரை தரையிலை இறங்கி னான், இஞ்சை சிலதுகள் திண்டிட்டுச் சும்மா கிடக் கேலாமல் வெறும் வாயை மெல்லுதுகள்'' என்று சற்றுப் பலமாகவே கூறித் தனக் குள்ளே சிரித்துக் கொண் டார்.

அந்த வேளையில்தான், பரமசுந்தரியின் அலறல் பல மாய் அவர் செவிப்பறையில் வந்து மோதியது. கந்தையர் சடுதியாய்ப் பத்திரிகையை மடித்து[illegible] போட்டார். பரமசுந்தரி, அண்டை அய லவர்களோடு மல்லுக்கட்டுகின்ற போர்களிலெல்லாம் கந்தை யர் விரும்பியோ விரும்பா மலோ இராணுவ உதவி வழங்க வேண்டும் என்பது அந்த வீட்டில் எழுதப்படாத ஒரு சட்டம்.

முன்பு ஒரு தடவை, பக் கத்து வீட்டுப் பாக்கியத்துக் கும் பரமசுந்தரிக்கும் இடையே ஒரு பெரும் போர் மூண்டது. அப்போது கந்தை யர் அப்போரில் சம்பந்தப் படாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்து விட்டார். அதன் விளைவு, பரமசுந்தரியிடம் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டார். அது மட்டுமல்ல, பத்து நாள் கள் வெறும் பாணுடனும் பிளேன்ரீயுடனும் காலந் தள்ள வேண்டியதாயிற்று. இந்தப் படிப்பினையின் பின்பு, கந்தையர் ஒரு போதும் இப்படியான தவ றைச் செய்வதேயில்லை.

இனியும் இந்தப் போர்க் களத்தில் குதிக்காமலிருப்பது தனக்கு நல்லதல்ல என்பதை உணர்ந்தகந்தையர் சறத்தை மடித்துக் கட்டிக்கொண்டு 'சடக்' கெனக் களத்தில் குதித்தார்.

ஒருவிதமாய்த் தொண்டை யைக் கனைத்துக்கொண்டு, ''ஆரடா என்ரை மனிசி யிலை தொட்டவன்?'' என்று அவர் தன் தாக்குதலை ஆரம்பித்தார்.

''உன்ரைமனிசிக்கு என்ரை காணிக்குள்ள என்னடா வேலை? செய்யிறதையும் செய்துபோட்டு இப்ப கதைக்க வந்திட்டியோ? உன்னை...'' என்று பற்க ளைக் கடித்தவாறே தன்

ஆ. ரவீந்திரன்

கையிலிருந்த கையில் அகப் பட்ட கல்லோ மண்ணோ ஏதோ ஒரு பொருளை விட் டெறிந்தார்— இராமநாதன். —அது கந்தையரின் தலைக்கு மேலால் சென்று அப்பால் விழுந்தது. கந்தையர் தன் பளபளப்பான தன் முன் தலையை ஒருதரம் தடவிப் பார்த்துக்கொண்டார். இனி யும் வாய்ச் சண்டை தொடர்ந்தால் நிலைமை விபரீதமாகிவிடும் என்பதை உணர்ந்த கந்தையர் சற்றே யோசித்தார். இதற்கிடை யில் பரமசுந்தரியின் பார்வை கந்தையர் பக்கம் திரும்பி யது.

''அவன் செய்யிறதையும் செய்துபோட்டு வீரம்பேசிக் கொண்டு நிக்கிறான்: நீங்க ளென்னடா எண்டால் மரம்போல நிக்கிறீங் கள். நீங்களும் ஒரு ஆம் பிளையே? நான் உங்களைக் கட்டின நேரம் ஒரு தென்னை மரத்தைக் கட்டியிருக்க லாம்'' என்று பொரிந்துதள் ளினாள் பரமசுந்தரி.

டியூஷன் வகுப்பை முடித் துக்கொண்டு வீடு திரும்பிய கந்தையரின் மகள் வாசுகிக்கு அங்கே என்ன நடந்தது கொண்டிருக்கின்றது என்பது உடனேயே புரிந்துவிட்டது. தன் சைக்கிளை அவசர அவ சரமாய் நிறுத்திவிட்டு ஓடி வந்தாள்.

''அம்மா, இஞ்சாலை வாங்கோ. ஏனம்மா அண்டை அயலாக்களோடை தேவையில்லாமல் சண்டை பிடிக்கிறியள். சண்டைக்காரி யின்ரை பிள்ளையெண்டு வகுப்பிலை எல்லாரும் என் னைப் பகிடிபண்ணுகினம். எனக்குறோட்டிலைபோகவே வெக்கமாயிருக்குது'' என்று சிணுங்கினாள் வாசுகி.

''வெக்கமாயிருந்தால் வீட் டிலேயே கிட. அதுதான் பொம்பிளைப்பிள்ளையளுக்கு நல்லது. இப்ப எனக்கு முன் னாலை நிண்டு கதைச்சுக் கொண்டிருந்தியோ, மூக்கை யறுத்து முளகாய் தடவிப் போடுவன். போடியங் காலை'' என்று கத்தினாள் பரமசுந்தரி.

''நான் போறன்; செத் துப்போறன். இந்தவீட்டிலை எனக்கு நிம்மதியில்லை'' என்றவாறு அழுதபடி சென் றாள் வாசுகி—

இரு தரப்பாரும் மிகவும் களைத்துப்போயிருந்ததால் அன்றைய யுத்தம் ஒருவித மாய் முடிவுக்கு வந்தது.

''அடியே பரமசுந்தரி, இந்த சின்னம்மா ஆர் எண் டது இன்னும் கொஞ்ச நாளைக்குள்ள உனக்குவிளங் கும்.'' என்று சூளுரைத்த வாறு 'விறுக்' கென்று திரும் பிய சின்னம்மாவின் கண்க ளில் வேலியிலே பத்திரமாய் சொருகப்பட்டிருந்த ஒரு காகித மடிப்புத் தென்பட் டது அதை 'சரேல்' என்று உருவிக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள் சின்னம்மா. குசினி வாசலில் அதைப் போட்டு விட்டு அப்பால் சென்றவள், ஏதோ நினைத்தவளாய் மீண்டும் வந்து அந்தக் காகி தத்தை எடுத்துப் பார்த் தாள்.

ஒரு கணம் தன் கண்க ளையே அவளால் நம்ப முடியவில்லை.

''என் உள்ளத்தில் புகுந்து உயிரில் கலந்துவிட்ட உத்த மியே வாசுகி, உன்னைப் போலொரு பெண்ணை நான் இந்த மண்ணில் கண்ட தில்லை. என் கனவிலும் நினைவிலும் நீதான் நிறைந் திருக்கிறாய் வாசுகி, அச்சு வேலியிலுள்ள எங்கள் மாமா வீட்டில் ஏதோ தோட்ட வேலை இருப்பதாகவும், அதைச் செய்துவிட்டு வரும் படியும் அம்மா நாயாய்க் குரைத்தா, நச்சரித்தா.''

''பெத்த தாயை நாய் எண்டு சொல்லிற அளவுக்கு அவருக்கு அந்தச் சிறுக்கி பெரி பெரிசாய்ப் போனாளோ?'' என்று மனதில் கறுவியவாறு தொடர்ந்து படித்தாள் சின் னம்மா.

''அதனால்தான், அச்சு வேலி செல்கிறேன். இரண்டு நாட்களில் எப்படியும் திரும்பி விடுவேன். உன்னைக்காணா மல் இந்த இரண்டு நாள் களையும் எப்படிக் கழிக்கப் போகிறேனோ தெரிய வில்லை? கவலைப்படாதே. வேலை முடிந்ததோ இல் லையோ நான் இரண்டு நாள்களில் திரும்பி வந்து விடுவேன். அன்பே வாசுகி, என் அம்மாவும் உன் அம்மா வும் வேலிக்காக ஏன்தான்இப் படி அடித்துக்கொள்கிறார் களோ தெரியவில்லை. உன் கழுத்தில் தாலி கட்டிய வுடன் இந்த சனியன் பிடித்த வேலியைப் பிடுங்கி எறிந்து விட்டுத்தான் நான் மறு வேலையைப் பார்ப்பேன். அன்பே வாசுகி, உன் வீட் டாரும் என் வீட்டாரும் கீரி யும் பாம்புமாய் இருக்க லாம். ஆனால் நாங்கள் தேனும் பாலும்; வானும் நிலவும்; ஊனும் உயிரும்; வள்ளுவரும் வாசுகியும் போல இணைந்து வாழ் வோம். புதிய திருக்குறள் படைப்போம்...''

''ஒம்பது நாள் மினக் கெட்டும் ஒரு திருக்குறள் பாடமாக்கேலாத செம்மரி. புதிய திருக்குறள் படைக் கப்போறாராமோ? வரட்டு மவர்'' என்றவாறு எழுந் தாள் சின்னம்மா. மெது வாக வெளியே வந்து முற் றத்தில் இறங்கி நின்றாள். சூரியனின் கதிர்கள் 'சுள்' ளென்று அவள் உடலில் பட் டுத் தெறித்தன. ★

(யாவும் கற்பனை)

---


## எது?

கல்வி,
கரைகாண முடியாத
கடலென்பது
உண்மைதான்.
ஆனால், அதே
கல்வியினை
கரை சேர்க்கும்
போது நான்
எனக்குள் எழும்
சந்தேகம்;
கல்வி யென்பது
கடலா? ஓடமா?

ஆ. சசிரேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைத்துப் பாருங்கள்!



மேலேயுள்ள படத்தில் ஒன்று முதல் நூறு வரையுள்ள இலக்கங்களுக்குரிய புள்ளிகளை —அந்த ஒழுங்கிலேயே—கறுப்புப் பேனையால் அல்லது பென்சிலால் இணைத்துப் பாருங்கள். நீங்கள் விரும்பும் ஒரு விலங்கு வரும்.

## வித்தியாசம் தெரிகின்றதா?



மேலேயுள்ள இரு படங்களுக்கும் இடையில் குறைந்தது பதினொரு வித்தியாசங்கள் உள்ளன. உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா? முயற்சித்துப் பாருங்கள்



## காகத்தின் மதி நுட்பம்

தாகங் கொண்ட காகமொன்று
தவியாய் தவித்துப் பறந்தது
தாகந் தீர்க்க தண்ணீர் தன்னை
தேடித் தேடித் திரிந்தது.

அங்குமிங்கும் எங்கும் அலைந்து
அலைந்து அயர்த்துப் போனது
எங்கும் கொஞ்ச நீருமின்றி
ஏங்கி வருந்தித் துடித்தது!

ஓலைக் குடிசை ஒன்றின் முன்னால்
பானை ஒன்று தெரிந்தது
பாலைக் கண்ட பூனை போல
பரம திருப்தி கொண்டது!

சிறகிரண்டில் கற்கள் நிறைய
சேர்த்தெடுத்துக் கொண்டது
ஒரு முறை பானைக்குள்ளே
ஒன்று சேரப் போட்டது

மேலே வந்த தண்ணீர் தன்னை
வேண்டும் மட்டும் குடித்தது
ஏலே லோ பாடிக் கொண்டு
இன்பம் பொங்கப் பறந்தது!

— கோ. துஷியந்தன் —
(ஆண்டு 8, பரியோவான் கல்லூரி)

## பாப்பாவுக்கு ஒரு பாட்டு

சின்னச் சின்னப் பாப்பா ஒண்ணுகேளு — உன்
சிந்தனையை வளர்த்து முன்னேறு
வஞ்சனையை நெஞ்சிலிருந் தோட்டி — எதற்கும்
அஞ்சிடாது உழைத்து வாழ்பாப்பா

சந்திரனை விம்பத்திலே பார்த்தோம் — இன்று
எந்திரத்தால் அவனிடத்திற் சென்றோம்
இந்த நிலை வந்ததிங்கு எதனால்? — அவர்
சிந்தித்தங்கு செயலாற்றி யததனால்

கைவிரலிற் கணக்கை எண்ணிப்பார்தோம் — இன்று
கணனி மூலம் காரியங்கள் செய்வோம்
செய்மதியாற் சேதியெங்கும் சொல்வோம் — இவை
சிந்தனையால் வளர்ந்ததன்றோ பாப்பா!

பேய்பிசாசு பூதமென்று சொல்லி — உன்னை
ஏய்க்குமொரு கூட்டமிங்கு பாப்பா
ஆய்வுகூட மந்தரத்தில் அமைக்க — நீ
ஆய்த்தமாய் வளர்ந்துவிடு பாப்பா!


அல்லாஹ் சிவன் யேசு புத்தர் எல்லாம் — நல்ல
அன்பு மய மானவர்கள் என்ற
நல்லறிஞர் போதனைகள் கேட்டு — அதை
சொல்லிலல்ல செயலினிலே காட்டு.

— அன்னைதாசன் —

## பிராணிகள் உலகம்

## மருளும் மான்

மான் பார்வைக்கு அழகானது; மிகவும் சாதுவானது; அச்சமுடையது; மாட்டைப் போலவே அசைபோடும் இயல்புடையது,



மானின் உடல் உருண்டு திரண்டிருப்பதைப் பாருங்கள். உடலெங்கும் குறுமயிரடர்ந்து பார்க்கப் பளபளப்பாக இருக்கும். மானின் கண்கள் பெரியவை; மருளும் பார்வையுடையவை. காதுகள் நீளமாக இருக்கும். ஆனால் வால் மிகக் குட்டையானது. மானின் தோலில் மஞ்சள் குறுமயிர்கள் அடர்ந்து காணப்படும். அவற்றில் வெள்ளைப் புள்ளிகள் பளீரெனத் தெரியும்.

மானின் கால்கள் மெலிந்து நீண்டு உறுதியானவை. மான் அதன் கால்களின் துணையால் அதன் பகை விலங்குகளிடமிருந்து விரைவில் தப்பியோடிவிடும். மான் முப்பதடிக்கு மேல் தாவும்; அதன் கால்களின் நுனியில் பிளவுபட்ட குளம்புகள் உண்டு.




மான்கள் அவற்றின் இனத்துக்கு ஏற்ப பல வகையான கொம்பு வேறுபாடுகள் உடையவை. சில மான்களின் கொம்புகள் நேராகவும், உள் துளையுடனும் இருக்கும். சிலவற்றிற்கு உறுதியாகக் கிளைத்த கொம்புகள் உண்டு. சில மான்கள் வெள்ளாடு போலவும், சில பசுப்போலவும், சில எருமை போலவும், சில குதிரைபோலவும் உருவ அமைப்பு உடையவை.

புல்லே மானின் உணவு. மான் கொம்பு மருந்தாகப் பயன்படுகிறது! சிறு பொருள்கள் செய்யவும் பயன்படுத்துகிறார்கள். மானின் தோலைச் சிலர் படுக்கையாகப் பயன்படுத்துகிறார்கள்.

சிலர் அழகுக்கு மானை வளர்ப்பர். எல்லா மான்களும், ஊக்கமும், எச்சரிக்கையுணர்வும் உடையவை. இவை காடுகளில் கூட்டங் கூட்டமாக வாழும். புல்வெளிகளில் மான்கள் விளையாடுவது அழகாக இருக்கும். இராக் காலங்களில் வால் பக்கமெல்லாம் ஒன்றுசேர மான்கள் வட்டமாகப் படுத் துறங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரிகின்றதா?



மேலே தாறுமாறாக வரையப்பட்டுள்ள கோடுகளுக்கு நடுவே நான்கு நட்சத்திரங்கள் ஒளிந்துள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## சோடி சேருங்கள்!

கீழே நிரல் I, நிரல் II ஆகியவற்றில் உள்ள சொற்களை உரிய முறையில் சோடி சேருங்கள் பார்க்கலாம்.

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| (அ) பசு | — | (i) அகவும் |
| (ஆ) குதிரை | — | (ii) கரையும் |
| (இ) சிங்கம் | — | (iii) உறுமும் |
| (ஈ) குருவி | — | (iv) ஊளையிடும் |
| (உ) காகம் | — | (v) சீறும் |
| (ஊ) சேவல் | — | (vi) கத்தும் |
| (எ) நாய் | — | vii) கர்ஜிக்கும் |
| (ஏ) குரங்கு | — | (viii) கனைக்கும் |
| (ஐ) மயில் | — | (ix) கூவும் |
| (ஒ) யானை | — | (x) கீச்சிடும் |
| (ஓ) பாம்பு | — | (xi) பிளிறும் |
| (ஔ) ஓநாய் | — | (xii) குரைக்கும் |

(விடை XI ஆம் பக்கத்தில்)

## அறியும் தெய்வம் மூன்று

அன்பைக் காட்டும் அம்மா — அவள்
அறிவுரை கூறி எம்மை
கண்டிப்பாள் என்றும் சும்மா -அதனால்
அவளும் கடவுளில் ஒன்று

தப்புச் செய்தால் அப்பா — நமக்குத்
தண்டனை தந்து திருத்துவார்
நல்லதைச் சொல்லும் அப்பா
அவர் நமக்கு என்றும் வழிகாட்டி

அறிவைப் பொழியும் ஆசான் — அவர்
எமது இழிவைப் போக்கும் இறைவன்
என்றும் நல்லதைச் சொல்வார்— அவர்
எமக்கு நல்ல தலைவர்.

அறியும் தெய்வம் மூன்று
அதனை உணர்தல் நன்று
அம்மா அப்பா ஆசான்
அவர்கள் சொற்படி நடந்திடு
அழியாப் புகழை அடைந்திடு.

— வி. உதேஸ் —
(நாவற்குழி)

## ஔவை சொல்வழி நடந்து நீ அகிலம் புகழ வாழ்ந்திடு!!

அன்பை நாளும் வளர்த்திடு
ஆசையை அளவோடு அடக்கிடு
இன்சொல் ஒன்றே உரைத்திடு
ஈகை செய்து உயர்ந்திடு
உண்மை ஒன்றே உரைத்திடு
ஊரார் மதிக்க வாழ்ந்திடு
எண்ணும் எழுத்தும் கற்றிடு
ஏறு போல நடந்திடு
ஐக்கியமாக வாழ்ந்திடு
ஒன்று பட்டு சிறந்திடு
ஓடி ஓடி உழைத்திடு
ஔவை சொல்வழி நடந்து நீ
அகிலம் புகழ வாழ்ந்திடு!

— ம. அச்சுதன் —
(ஏழாலை மேற்கு)

# குடாநாட்டில் எய்ட்ஸ்!

## பதுங்கி இருக்கும் ஆபத்து!

(I)

...ய்ட்ஸ் நோயாளிகள் ... சந்தேகிக்கப்படும் ...ர் யாழ். ஆஸ்பத்திரி ...ர்வாங்கப் பரிசோத ...ள் மூலம் இனங் ...ப்பட்டுள்ளனர்''—இந் ... செய்தியை வெறும் ...ப்பான ஒரு விடய ... குடாநாட்டு மக்கள் ...ிருக்க முடியாது. ...ளில் சஞ்சிகைகள், ...கைகள், வானொலி, ...லைக்காட்சி போன்ற ...ர்பு சாதனங்கள் மூல ...ட்டும் அறிந்து வைத் ... ''எய்ட்ஸ்'' விவ ... இப்போது தங்கள் ... வாசலுக்கு வந்து ...து என்பதை அவர் ...உணரும் ஆபத்தான ... இது.

...ி அறிவு மிக்க, முற் ...த எண்ணம் கொண்ட ... எனக் கூறிக் கொள் ... கூடப் பேசவும், ...வும் தயங்குகிற ஒரு ...மாகவே 'எய்ட்ஸ்' ...மும் நம்மிடையே ...வர, மறுபுறத்தில் — ...ட பகுதியில் — அது ... சமூகத்துக்குள் அடி ...து மெள்ள மெள்ள ... கொண்டு விட்டது ...ு கசப்பான உண்மை. ...ட்ஸின் ஆரம்பம் ... என்பது இன்னமும் ...ாக நிருபிக்கப்பட ...ல. ஆயினும் 1980 ... ஆரம்பத்திலேயே ... மேற்கு நாடுகளில் ... கோர தாண்ட ...் முதலில் வெளிப்ப ...ய து அபிவிருத்தி ...ந்த, மிகவும் முன்னேற் ...ட அந்நாடுகளையே ...ஸ்' ஆட்டங்காணச் ...து.

...த்தட்ட இரண்டு ... காலத்துக்கு முன் ...எய்ட்ஸ் இலங்கைக் ... முகம் காட்டத் ...ங்கி விட்டபோதிலும் ... முழுமையான ... இன்னமும் கூட ...ப்படவில்லை. அதி ... குடாநாட்டில் ...ஸ பெரும்பாலா ... ஒரு பொருட்டாகக் ...தில்லை என்பது ...கசப்பான — கவலை ... — விடயமாகும்.

...ட்ஸ்' மேற்கத்திய ...ரத்தின் சின்னம்; ...ண்பாட்டுக்குள் அது ...தும் அடிவைக்க ...து என்று பெருமைப் ...ர்கள்; பெருமைப் ...கள் நம்மில் உள்ள ...

... பண்பாடு, மரபு, ... உறவு முறைகள் ... எல்லாம் 'எய்ட்ஸ்' ...ற சவால்களில் ... நம்மைப் பாதுகாக் ...சங்களாக உள்ளன ... இன்னமும்கூட எம் ... பெருமைப்பட்டுக் ... முடிந்தாலும் எச். (H. I. V) என்கிற ... வைரஸ் பரவி வரும் ...க்கு முன்னால் ... பண்பாடு என்கிற ... வெறும் நால்வேலி ... என்ற மற்றொரு ... உண்மையையும் ... கொள்ள வேண்டிய ...க இருக்கிறோம்.

... சமூகத்துக்குள் ... நுழைவதற்கான ...ள் பல எப்போதோ ...பட்டு விட்டன.

...ன் தூய்மையான ...பாலியல் ரீதியான, ...டான தொடர்பு ... அல்லது தன்னி ...ர்க்கையிலோ ஈடு ...லை. எனவே ...' என்னையோ ...ம்பத்தையோ அண் ... என்ற திடமான ...கயுடன் ஒருவர் ... இருக்க முடியாது.

உடல் உறவு, தன்னினச் சேர்க்கை இவை இரண்டும் எய்ட்ஸ் பரவும் வழி முறைகளில் முக்கியமானவை தான். ஆனால் இவற்றை விட இரத்த மாற்றுப் பிரயோகம், ஊசி போன்ற கருவிகள், பச்சை குத்துதல் போன்ற பல வழிகள் மூலம் தான் எச். ஐ வி. தற்போது வேகமாகப் பரவுகிறது. எனவே பாதுகாப்பான இல்லற வாழ்க்கை நடத்தும் ஒருவர் கூட எச். ஐ. வியை மிக இலகுவில் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு. (இவை பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்)

மொத்த தகவல்களைப் பெறமுடியவில்லை.

'எய்ட்ஸ்' நோயாளிகள் தொடர்பான விவரங்கள் பொதுவாக டாக்டர்களால் இரகசியமாகவே கையாளப் படுகின்றன. சம்பந்தப்பட்டவரின் நலன் கருதியும் வேறு காரணங்களுக்காகவும் இவ்வாறு செய்யப்படுவதாக யாழ். ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் தெரிவித்தார். ஆனால் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளிகளின் முழு எண்ணிக்கை விவரத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பது கவலைக்குரியது.

எய்ட்ஸை ''கூடாத நோய்' என்று அழைக்கும் வழக்கமும் தவறிழைத்தவர்களையே அது தண்டிக்கிறது என்ற மனோபாவமும் இன்றும் கூட நம்மவர்கள் பலரிடையே உள்ளன.

பாலியல் துர்நடத்தைகள் மூலமன்றி வேறு சாதாரண நாளாந்த நடவடிக்கைகள் ஊடாகவும் எச். ஐ. வி. இலகுவில் ஒருவரைத் தொற்றிக் கொள்ளும் என்ற உண்மை நிருபணமாகி பல ஆண்டுகள் கழிந்து விட்டன எனவே ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்ற வெறும் வெற்றுக் கோஷத்தை மட்டும் நம்பி இருப்பதால் எய்ட்ஸின் பேரனர்த்தத்தில் இருந்து எமது சமூகத்தைப் பாதுகாத்துவிட முடியாது.

> ...''ஒருவனுக்கு ஒருத்தி'' என்பது போன்ற வெறும் வெற்றுக் கோஷங்கள்மட்டும் 'எய்ட்ஸ்' என்கின்ற பேரனர்த்தத்தில் இருந்து எமது சமூகத்தைக் காப்பாற்றப் போவதில்லை என்ற கசப்பான உண்மையை குடாநாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய காலகட்டம் நெருங்கி வந்து விட்டது......

எச். ஐ. வைரஸின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளதாக யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்டோரின் எண்ணிக்கை இன்னமும் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இருந்து வருகிறது. இது சற்று ஆறுதல் தரும் விடயமாக இருந்தாலும் கூட மருத்துவ சோதனைகளில் அகப்படாத சில நூறு எச். ஐ.வி. காவிகளாவது குடாநாட்டில் இருக்கக் கூடும் என மருத்துவ வட்டாரங்கள் நம்புவதுதான் வயிற்றைக் கலக்கும் விடயமாக உள்ளது.

குடாநாட்டில் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1980 களின் நடுப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டதாக டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

எய்ட்ஸ் தொற்றியதால் வெளிநாட்டிலேயே உயிரிழந்த ஒருவரின் சடலம் இங்கு எடுத்துவரப்பட்டு மருத்துவர்களின் கண்காணிப்புடன் அடக்கம்

எய்ட்ஸ் நோயாளிகளை தனிப்பட்ட ரீதியில் பெயர் குறிப்பிட்டு பகிரங்கப் படுத்துவது மனிதாபிமான ரீதியில் ஏற்றுக் கொள்ள முடியாததுதான். ஆனால் அவர்கள் தொடர்பான வேறு தகவல்களை, பின்னணிகளை, ஏன் அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன்மூலம் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வை ஏனையோரிடம் ஏற்படுத்தலாமே?

எதிர்காலத்தில் எமது சமூகத்தின் ஓர் அங்கமாக நிலைத்திருக்கப்போகின்ற ஒரு பிரிவினரை தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைக்கும் பேராபத்தை தவிர்ப்பதற்கு முன் கூட்டியே எம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக நாம் அனைவரும் இருக்கிறோம்.

பெரும்பாலான மேற்கு நாடுகளில் எச். ஐ. வியுடன் வாழ்கின்ற சமூகங்கள் எங்கும் பரந்து உள்ளன.

எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றில் பிறந்த குற்றத்திற்காக சிறுமி ஒருத்தி தனது வகுப்பறையில் சக நண்பிகளால் வெறுத்து ஒதுக்கப்படுகிறாள்.

இது நடப்பது வேறு எங்கும் அல்ல. யாழ். நகரப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில்தான். இது பற்றிய தகவல் தெரிய வந்தபோது அதிர்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை.



தாயிடம் இருந்து எய்ட்ஸைப் பெற்றுக் கொண்ட ஒரு வெளிநாட்டுக் குழந்தை. யாழ்ப் பாணத்திலும் இது போன்ற காட்சிகளைக் காணும் காலம் வெகு தொலைவில் இல்லை.

வருத்தமாம்... நீ இனிமேல் அவளுடன் சேராதே......'' என்று வீட்டில் எவராவது அவர்களை எச்சரித்திருக்கலாம். எனவே அவர்களில் தவறு இல்லை. ஆனால் இத்தகைய சூழ்நிலைகளை எதிர்காலத்தில் எவ்வாறெல்லாம் கையாளப் போகிறோம், எவ்வாறு அணுகப் போகிறோம் என்பதை பற்றிச் சிந்தித்து திட்டங்களை வகுத்து மக்களை விழிப்படையச் செய்யும் பாரிய பொறுப்பு சமூகப் பிரக்ஞை உள்ள மருத்துவர்கள் மீதும், ஏனைய துறை சார்ந்த ஆர்வலர்கள் மீதும் சுமத்தப்படுகிறது.

தப்பான அபிப்பிராயங்களால் இச்சிறுமியை ஏனையோர் புறக்கணிப்பதைத்

வில் பெரியவர்களுக்கே விளக்க வேண்டி உள்ளது.

சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றில் முகச்சவரம் செய்யச் செல்கிறார் ஒருவர்.

முகச் சவரத்தின் போது ஒருவரது கன்னத்தில் சிந்தும் குருதியில் எச். ஐ. வி. இருப்பின் அவருக்குப் பின்னால் அதே சவர அலகால் சவரம் செய்து கொண்டவருக்கு அது இரத்தத்தின் மூலம் தொற்றிக் கொள்ள வாய்ப்புள்ளது என்ற மருத்துவ உண்மையை அவர் அறிந்திருப்பாரா?

அவ்வாறானால் பாலியல் உறவுக்கும் முகச்சவரம் செய்வதற்கும் என்ன சம்பந்தம்?

இத்தகைய கேள்விகள்

இது தொடர்பான முழுத் தகவலையும்வெளியிடுவதை சம்பந்தப்பட்ட சிறுமியினதும் அவள் சார்ந்த குடும்பத்தினரதும் தனிப்பட்ட நலன்கருதி தவிர்த்துள்ளோம்.

''செய்த தவறுக்கான தண்டனையே எய்ட்ஸ்', என்ற பிற்போக்குத்தனமான கருத்து இச் சிறுமியின் விடயத்தில் எவ்வளவு

தடுக்க சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு நேரடியாகச் சென்று அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவிகளைத் தனியாக அழைத்து அறிவுரை கூறி வீண் சந்தேகங்களைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட சில டாக்டர்கள் தயாராகி வருவதாக அறியமுடிகிறது.

இது வரவேற்கத்தக்கதும் முன்மாதிரியானதுமான

எழுவதன் காரணமாகவே 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவது அவசியமாகின்றது.

''எய்ட்ஸ்'' விடயத்தில் குடாநாட்டைப் பொறுத்தவரை ''வருமுன் காக்கும்'' காலகட்டம் எப்போதோ கடந்துபோய் விட்டது. வந்தபின் காக்கும் காலகட்டத்திலேயே நாம் இருக்கிறோம்.

எமக்கு நன்கு அறிமுகமான ஒருவரிடம் எச். ஐ. வி. இருக்கலாம்.

தடுப்பு ஊசி ஒன்றை ஏற்றிக் கொள்வதற்காகக் காத்து நிற்கும் வரிசையில் எமக்கு முன்னால் நிற்பவர் எச். ஐ. வி. காவியாகஇருக்கலாம். எமக்குப் பின்னால் நிற்பவர் எச். ஐ. வி. காவியாக இருந்தால் ஒருவேளை நாம் தப்பிக் கொள்ளலாம்.

எய்ட்ஸ் என்பது ஒரு நோயல்ல. பல நோய்களுக்கான காரணி. எனவே ஓர் எய்ட்ஸ் நோயாளி வேறு வகை நோயாளியாகவே முதலில் காணப்படுவார். அவ்வாறான சமயங்களில் ஆஸ்பத்திரிகளிலோ அல்லது தனியார் சிகிச்சை நிலையங்களிலோ ஏனைய நோயாளிகளுடன் சேர்த்து எய்ட்ஸ் நோயாளியையும் பராமரிக்கும் நிலை நிச்சயம் இருக்கும்.

எனவே நோயாளிகளைப் பராமரிக்கும் விடயத்தில் விடப்படும் சிறு தவறுகள், கவலையீனங்கள் மற்றும் வசதியீனங்கள் பேராபத்தை உண்டு பண்ணிவிடலாம்.

வசதியீனங்களுடனே இயங்கிப் பழக்கப்பட்டுப் போன மருத்துவ மனைகளே எச். ஐ. வியை விநியோகிக்கும் பிரதான நிலையங்களாக மாறிவிடக்கூடிய பேராபத்து குடாநாட்டில் உண்டு.

செய்யப் பட்டது. எய்ட்ஸ் நோயாளிகளாக இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப் பட்ட வேறு இருவர் 1980 களின் இறுதிப் பகுதியில் தலைமறைவாகி விட்டதால் அவர்கள் மீதான பரிசோதனை உறுதிப் படுத்தப்படவில்லை.

குடாநாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்ட அனைவருமே வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்கள் ஆவர். இவர்களில் பலரும் வெளிநாட்டு கப்பல் நிறுவனங்களில் பணி புரிந்து பல நாடுகளுக்கும் சென்று வந்தவர்கள் என்பது கவனத்துக்குரிய விடயம்.

குடாநாட்டில் 'எய்ட்ஸ்' நோயாளர்களின் வரலாறை மிகச் சரியான எண்ணிக்கை விவரங்களுடன் திரட்டுவதற்கு தீவிர முயற்சி எடுத்தபோதும் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினரிடம் இருந்தும் ஆவணப்படுத்தப்பட்ட ஒட்டு

எச்.ஐ.வியுடன் வாழ அவர்கள் பழகிக் கொண்டனர்; அதேபோல் எச். ஐ. வி தொற்றியவர்களுடன் வாழ ஏனையோரும் தயாராகி விட்டனர்.

**நல்லூர் தாஸ்**

ஆனால் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேச நாடுகளில் நிலைமை வேறு. 'எய்ட்ஸ்' நோயாளி எனச் சந்தேகிக்கப்பட்ட உடனேயே ஒருவரை தீண்டத் தகாதவராக ஒதுக்குவதுடன் அவரின் குடும்பத்தையே சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்துவிடும் மனித அவலம் எங்கும் நடைபெறுகிறது.

யாழ். குடாநாட்டிலும் தற்போது ஓரிரு குடும்பங்கள் இவ்வாறான அவலச் சூழலில் சிக்கி அதிலிருந்து மீளமுடியாது ... உள்ளன என்பது வெளியே தெரியாத உண்மை.

பொருந்தும்?

இச் சிறுமியின் எதிர்காலம் குறித்துச் சிந்திப்போரிடையே இன்னும் இவளைப் போன்ற எத்தனை பேரை உருவாக்கி விடப் போகிறோம் என்ற கவலை தொற்றிக் கொள்கிறது.

எய்ட்ஸின் கோரங்களை விட எமது சமூகத்திடையே நிலைத்திருக்கப் போகின்ற 'எய்ட்ஸ்' தொடர்பான அறிவீனமே பாரிய சீரழிவை ஏற்படுத்திவிடப் போகின்றது. அதற்கான முதல் அடையாளமே இந்தச் சிறுமி என்கிறார் சமூக ஆர்வலர் ஒருவர்.

அவரது இந்தக் கருத்தை பின்னால் வரவிருக்கின்ற பேரழிவுகளுக்கான கட்டியம் கூறலாக நிச்சயம் எடுத்துக் கொள்ளலாம்.

இந்தச் சிறுமியின் தோழிகளான சிறுசுகளுக்கு விவரம் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். ... ... தியின் அப்பாவுக்கு ஏதோ கூடாத

முயற்சியாக அமையும். இத்தகைய முயற்சிகள் பெருக வேண்டும்.

இது தொடர்பாகப் பெற்றார் ஒருவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் அளித்த பதில் ஏமாற்றம் அளித்தது.

...சிறுவர்களுக்கு 'எய்ட்ஸ்' பற்றி விளக்கமளிக்க முற்படுவது தவறான நடத்தைகளில் ஈடுபட அவர்களைத் துண்டுவதாக அமையும் என்ற சாரப்பட அவரது கருத்து அமைந்தது.

இத்தகைய கருத்துக்கள் முன்மாதிரியான முயற்சிகளில் ஈடுபட முயல்வோரைச் சோர்வடையச் செய்யலாம். ஆனால் இது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.


எய்ட்ஸ் ஒரு பாலியல் சார்ந்த நோய்தான். ஆனால் அது தற்போது தீவிரமாகப் பரவி வருவதற்கு பாலியல் ரீதியான உறவுகள்மட்டுமே காரணம் அல்ல என்ற உண்மையை சிறுவர்களுக்கு அல்ல முத

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 49



சொற்சிலம்பம் இல. 49
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

................... இங்கே வெட்டுக ...................

முடிவு திகதி; 15 — 05 — 1998

**இடமிருந்து வலம்**

1. கொப்பூழ். 6. சரஸ்வதி. 7. இந்த மனமே பொன் செய்யும். 9. கூர். 10. திருப்தி அடையா தவனின் பதில். 12. எல்லை. 13. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம். 14. பலவல்ல. 15. பேரூர் அல்லது பட்டினம். 16. பாண்டவருள் ஒருவன். 18. பொருத்தமான நிலை. 20. உயிர் ஆரம்பம் இங்கே. 21. இந்திய மாநிலம். 22. கிட்ட.

**மேலிருந்து கீழ்**

1. மரக்கலம். 2. உடலைப் பீடித்திருப்பது. 3. கண் தெரியாதவன். 4. போதை தருவது. 5. விநாயகருக்கு இப்படியும் ஒரு பெயர், 8. யாதொன்றும். 9. அருவியில் எழுவது. 11. விடாய். 12. பழம். 13. மனைவியின் சகோதரியின் கணவன். 14. கணவன் — மனைவி. 15. சிரி. 16. கடவுளை இது செய்; அவர் கைவிட மாட்டார். 17. மாட்சிமை. 19. அணி அல்லது நில். 20. விழி.

**சொற்சிலம்பம் 47 — முடிவுகள்**

**இடமிருந்து வலம்**

1. சுசந்திகா. 5. ராகு. 7. மாரி. 8. யாகம். 9. நகம். 10. திரை. 11. திரவம். 13. பரு 14. ராசி. 15. இடுப்பு. 17. கதகளி. 20. படை. 21. மின்னல். 22. புதிய. 23. குவியல்.

**மேலிருந்து கீழ்**

1. சுமாத்திரா. 2. சரி. 3. தியாகம். 4. காகம். 6. குதிரை. 9. நவ. 10. திருப்பதி. 12. ரசிகன். 13. படு. 15. துளி. 16. புடையன். 18. தனகு. 19. கல்வி. 21. மிடி. 22. புல்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** செல்வி கு. சுகந்தி,
இல. 'டி' 20, தொடர்மாடி
குருநகர்.

★ **இரண்டாம் பரிசு:** பா. கார்த்திக்,
இல. 43/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

★ **மூன்றாம் பரிசு:** செல்வி. இ. டுஷ்யந்தி,
13/1 'ஏ' சந்தன மாதா ஒழுங்கை,
சுண்டிக்குளி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 48 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

பல ஆடவர்களின் நினைப்பு — தாங்கள் ஏதோ சிங்கக் குட்டிகள் என்பதுதான். விரல் நிறைய வைரமோதிரம் — கையிலே தங்கப்பட்டி — கழற்றிவிட்ட பட்டன்களூடே தெரியும் கழுத்துச் செயின். திமிர் பிடித்த நடை. தங்களை விட்டால் ஊரில் ஆளில்லை என்ற நினைப்பு.

இதனால் ஊரவர் புகழும் நிலை எட்டி விடுமா? வீட்டு விவகாரங்கள் சந்தி சிரிக்கும் வகையிலே இருக்கும்போது இப்படியான எடுப்புக்களால் என்ன செய்ய முடியும்?

வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது. உனது இறுமாப்பை அது விட்டு வைக்காது. மின்னிடும் பொன் நகைகள் — உனது ஊர்வாயை மூட உலை மூடி ஆகா. ஊர் ஏதாவது குற்றம் பிடித்துக் கொண்டே இருக்கும்.

தனது மனைவியைப்பற்றி தாமே ஊர் முழுக்கக் குறைபாடித் திரிகின்ற ஆடவர்கள் இருக்கிறார்கள். வீட்டிலே கொஞ்சல் குலாவலுக்கும் குறைவு இருக்காது. மாறாக மனைவி புகழ்பாடிக் காலம் கழிப்பவர்களும் உண்டு. வீட்டிலே கலகத்துக்கும் குறைவு இருக்காது.

இரண்டு நிலைமையுமே பெருமையைத் தரப்போவது இல்லை. அப்படியானால் எது பெருமை?

பண்பிலும் செயலிலும் அடுத்தவர் குறை காண மாட்டாத இனிய மனைவி வந்து வாய்க்க வேண்டும். அவளை மனம் வைத்து ஊர் வாயாரப் புகழ வேண்டும். அப்படிப் புகழ் புரிந்த இல்லாளை நீ அடைந்து விட்டால் அதுவே பெருமை. வெளிப்பகட்டுகள் இனி வேண்டா!

இப்போ ஊரவர் உன்னை இகழ்ந்தாலும் அவர்கள் முன்னே சிங்கக்குட்டிபோல — ஏறுபோல் பீடு நடை — பெருமையுடன் நீ நடை போடலாம்.

மனைவி நிறைவாக அமையாத போது உனது பெருமை எவ்வளவு உயர்ந்தாலும் — உனது செயல் பெருமை ஆகாது.

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை
இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.
(வாழ்க்கைத் துணை நலம்)
—0059

—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [09 - 05 - 1998 முதல் 15 - 05 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வெ சனி | புத சூ* | செ | |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | | சந் |

மாற்றம்:

9–5–1998 இல் சித்திரை 1ம் பாதம் கன்னி இராசிக்கு சந்திரன் மாறும். 14-5–1998 இல் இடப இராசிக்கு செவ்வாய் மாறும்.

அரசியலில் திசை திருப்பங்கள் ஏற்படலாம். உலகநாடுகளின் கவனிப்பு, பேச்சுவார்த்தைகளில் நாட்டம் வரும் சூழ்நிலைகள் ஏற்படும். இந்திய அரசியலின் போக்கு மாறலாம். அரசியல்வாதிகளுக்கு நல்லதல்ல. வன்செயல்கள் அதிகரிக்கும். அமெரிக்க எதிர்ப்புணர்வு அலை இலங்கை, இந்தியாவில் வீசும். அமெரிக்காவில் அரசியல் அபிப்பிராய பேதம் ஏற்படும். கிழக்கு நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் தோன்றும்.

**மேடம்:** பாரச்சுமை தாங்க முடியவில்லையா? உங்கள் செல்வாக்கால் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முயலுங்கள். நெருங்கிய சொந்தக்காரரால் உபத்திரவங்கள் தேடி ஓடிவர இடம் உண்டு. காணி பூமி சொத்து விஷயமாக சில உடன்பாடுகள், மாற்றங்கள் வரும். தொழில் ஸ்தானத்தில் இறுக்கம் வந்தாலும் சமாளித்துக் கொள்ளுங்கள். இலாபம், நஷ்டம் சகஜம்தானே. அலைச்சலால் உடல் நலம் கொஞ்சம் பாதிக்கப் படலாம். உஷ்ணபீடைகள், வயிற்றில் நோ, கை கால்வலிகள் சிலருக்குக் கொடுத்து வரும். கோபித்துக் காரியங்களை சாதித்துக்கொள்ளுவீர்கள். அதற்காக அளவுக்கு மீறி அடிதடியில்போய் அவமானப்படாமல் நிதானமாக இருக்க முயலுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**இடபம்:** உங்களுக்கு எங்கே இருந்து இந்தக் கோபம் வருகிறது [illegible] உடைந்த கதைபோல் அல்லவா இருக்கிறது! காரியம் ஆற்றவேண்டுமாயின் கொஞ்சம் உலகை அனுசரித்துத்தான் போகவேண்டும். அரசியலில் நிதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்ற சிந்தனையுடன் அப்பனே சிவனே என்றுஇருங்கள். மற்றவர்களின் அலுவல்களில் வீணாகத் தலையிட்டு வாங்கிக்கட்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கைகால் விறைப்பு, உளைவு, சிறுநீரக வியாதிகள், வயிற்றில் வருத்தங்கள் வருத்தலாம். சகோதரங்களின் கடமைகள் காத்திருக்கும் காலமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**மிதுனம்:** ஓடியாடித் திரிந்து காரியங்களை சாதனைப் படுத்தும் காலமாகும். வீட்டில் இருந்தால் அலுவல்கள் முடியுமா? நாலு மனிதர்களைக் கண்டு அலுவல்களை செயற்படுத்த வேண்டாமா எனக்கேட்டிருக்கிறீர்கள். அதில் நியாயம் இருக்கிறது. தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் வேகமாக இருக்கிறீர்கள். கைகாலில் காயங்கள் வரும். கொஞ்சம் நிதானம் தேவை. மேலதிகாரிகளின் கண்டனத்திற்குஆளாகலாம். நண்பர்கள் உதவி செய்வார்கள். சகோதரங்களுக்கு மாற்றங்கள் திடீரென வரலாம். எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப் போங்கள். வாய்வு, வருத்தங்கள் வருத்தலாம். கைகால் விறைப்பு, வாதம் என்பன தொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்து வந்தால் சுகம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கடகம்:** அதிக கற்பனைகள், புதியதிட்டங்கள், அதிக செலவுகள் என்பன இருக்கும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் சாதகமான சூழ்நிலை உருவாகும். அரச உதவிகள் அல்லது மேலதிகாரிகள், நண்பர்களின் ஆதரவுகள் இருக்கும். தேடும்போது கிடைக்காது; தேடாதபோது கிடைக்கும். இதுதான் இயற்கையின் திருவிளையாடல். இக்காலத்தில் நீங்கள் விரும்புவது எல்லாம் கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டாம். சளிவியாதி, தோல் வியாதி, கைகால் உளைவு போன்ற வருத்தங்கள் வரலாம். எதிர்ப்பாலாரிடம் நம்பிக்கை வைத்து நடவுங்கள். அதனால் வருங்காலத்தில் பல நன்மைகள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன்.

**சிங்கம்:** என்ன ஐயா அட்டமத்துச் சனி, அட்டமத்துச் சனி என வெருட்டுகிறீர்கள் என்று கேட்கிறீர்களா? இன்பதுன்பத்தைத் தாங்கும் தைரியம் கொண்ட உங்களுக்கு சமாளிக்கும் தைரியம் இருக்கச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் வேகம், கோபம், நிர்வாகச் செயற்பாடுகள், அந்நியர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். புதியதிட்டங்கள் உருவாக்கங்கள் நல்ல வரவேற்பைக் கொடுக்கும். நல்லதைச்செய்யும் பொழுதும் சிலர் நன்மை

## மகாதேவா ஜோதிடம்

யைச் சொல்லமாட்டார்கள். தெய்வ சக்திமிக்கவர்கள் சாதாரண உணர்வுகளுக்கு ஆளாகுபவர்களைப் பற்றி அதிகம் சிந்திக்கமாட்டார்கள். இருதயவியாதி, உஷ்ண பீடைகள், முதுகு, கால் கைகளில் நோ என்பன சர்வ சாதாரணம்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.

## சோதிட சஞ்சீவி

**கன்னி:** கோபித்தாலும் காரியங்கள் உடனுக்குடன் செயற்படும்பலன்கள் காணப்படுகின்றன. தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகள் இருக்க இடம் உண்டு. கூடி இருக்கும் ஒருவரால் வேதனை ஏற்படும். நண்பர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும். நெஞ்சில் சளி, இடுப்பில்வலி, கைகால் பிடிப்பு என வைத்தியபீடங்களுக்கு ஓடி ஓடிச் செல்வீர்கள். ஆலயத் தொண்டு அதிக நன்மைகளைத் தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**துலாம்:** இருக்கும் போதே அனுபவித்து விட்டுப் போவோம். இறந்ததன் பின்பு என்ன நடந்தால் தான் என்ன? யார்கண்டார்கள்? — என்று சொல்லுகிறீர்களா! சந்தர்ப்பங்களை சாதகப்படுத்துவதில் கண்ணாக இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கொள்கைகள் வித்தியாசப்படலாம். பொருள் உழைப்பதில் கவனமாக இருங்கள். எதிர்ப்பாலாரால் வைத்தியச்செலவுகள் ஏற்படலாம். நாரிநோ, வயிற்றில் வருத்தம், தோல்வியாதிகள், உள்உறுப்புக்களால் உடல்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தீபனும் பகவத் கீதையும்!

-மட்டுவில் நல்லதம்பி-

பகவத் கீதையென்னும் ஞானோபதேசத்தை ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து கேட்கும் பாக்கியம் பெற்றவன் பாண்டுபுத்திரனான பார்த்தீபன்.

பாரதப்போர்க்களத்திலே, தான் எதிர்பார்த்த கர்ம யோகத்தைச் செய்விப்பதற்காகப் பார்த்தனுக்குச் செய்த உபதேசம் பகவத் கீதை. என்றாலும் சகல ஆன்மாக்களும் தமது ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் முத்திப் பேற்றிற்காகவும் ஆற்ற வேண்டிய யோக நெறி பற்றியே பரந்தாமன் அதில் கூறியுள்ளார்.

இந்தக் கீதோபதேசத்தைப் பெறுவதில் அர்ச்சுனன் எவ்வாறு பக்குவநிலையில் இருக்கிறான்; இது போர்க்களத்திலே நிகழ்வதற்கு ஏற்பட்ட வாய்ப்பு என்ன என்பவற்றைத் தெரிந்து கொள்வது நல்லது.

பாரதப்போரின் மிகமுக்கிய கட்டம் அது. சமரில் அர்ச்சுனன், கர்ணனை எதிர்கொண்டு யுத்தம் செய்வதற்கெனப் புறப்படுகிறான். திட்டமிட்டபடி பரந்தாமன் பார்த்தசாரதியாகச் செல்கிறான். போர்க்களம் அண்மித்து விடுகிறது. இனிமேல் வியூகம் அமைத்துப் படையை நடத்திப் போர்செய்ய வேண்டியதுதான் மிச்சம். அதன்படி, அர்ச்சுனன் களநிலையைப் பார்க்கின்றான்.


அர்சுனனின் சிந்தனைகலைகிறது. தனக்குஎதிரிலே எதிரிகளாக நிற்பவர்களெல்லாம், பெரியதந்தையின் பிள்ளைகளாகவும், பீஷ்மர். துரோணர் போன்ற பெரியோர்கள், ஆசிரியர்களாகவும் படுகிறது. 'இவர்களையா எதிர்த்துப் போர் செய்து கொல்லப் போகிறேன்?' என்ற மனக்கலக்கம் அவனிடம் எழுகிறது. இப்போது அவனுக்குத் தேர்ச்சாரதியாகக் கண்ணன் நிற்பதும் தெரியவில்லை; அம்பு, வில் எடுத்தகைகள்இப்போது செயலற்றுப்போயின; போர் செய்யும் முனைப்பு இன்றி நிற்கிறான்.

தான் யார் யாருடன்போர் செய்யவேண்டியிருக்கும் என்பது முன்னரே அர்ச்சுனனுக்குத் தெரிந்ததுதானே!

ஸ்ரீ கிருஷ்ணன் பார்த்தனுக்குச் சாரதியாக வருகிறேன் என்று வந்தாரேயன்றி போரை வழிநடத்த வருகிறேன் என்று வந்தவரல்லர்.

ஆனாலும் மாயக் கண்ணனுக்குப் பார்த்தனின் தயக்கம் விளங்கிவிட்டது. தான் செய்யப்போகும் கர்மத்தின் விளைவுகளைப்பற்றி விஜயன் சிந்திக்கிறான் என்பது தெரியாதா என்ன? பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவாக வந்து ஞானஉபதேசம் செய்வார். இங்கே ஸ்ரீ பரந்தாமன் சாரதி வடிவாக வந்து கீதோபதேசம் செய்யத் தொடங்குகிறார்.

பூபாரந் தீர்க்கப் பிறந்த புயல் வண்ணன், தனது அவ



தார எண்ணம் நிறைவேறுவதற்கு நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்கும் பாண்டவர்களைத் தெரிவு செய்திருக்கிறான். பாண்டவர்களுக்கு எப்பொழுதும் சகாயனாகவே காட்சியளிக்கும் கண்ணபரமாத்மா, மற்றவர்களுக்குப் பகைபோலவும் நடந்து கொள்ளவில்லை. மேலும், தனது அவதார மகிமையைக் காட்டாமல் அர்ச்சுனனைத் தனது தோழனாகவே சொல்லிலும் செயலிலும் காட்டி நிற்கிறார்.

தனது அவதார இலக்கு நிறைவேறுவதற்கு முழுக்க முழுக்க அர்ச்சுனனையே தேர்ந்தெடுக்கின்றான் கண்ணன். பாண்டவர்கள் ஐவரிலும், அர்ச்சுனனே போர் முறையில் வல்லவன்; வில்லாற்றலில் விஜயன்; தவம் செய்து பாசுபதம்பெற்றவன்; அறிவிலும் சிறந்தவன்; சிவ பெருமானுடனேயே போர் செய்யும் மனப்பக்குவம் உள்ளவன். இப்படி இந்தக் கருமத்தைமுடிப்பதற்கு இவனே ஏற்றவன் என்று முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டு விட்டது.

வீமன் சிறந்த வீரன்தான். துரியோதனனைக் கொல்வதென்று சபதம்செய்துகொண்டவன். ஆனால், முற்கோபமும் முரட்டுக் குணமும் கொண்டவன்.

தருமன் எப்பொழுதும் தருமத்தைப் பற்றியே சிந்திப்பவன்; ஐந்துபேரும் ஒரு மனைவியும் பிள்ளைகளும் வசிக்க ஒரு வீடாவது கேட்டுப் பெறும் நிலைக்கு இறங்கியவன்; சுற்றமோபகையோ யாருக்கும் அருளாளன். இவனைக் கொண்டு கிருஷ்ணர் பூபாரந் தீர்ப்பதாவது?

நகுல சகாதேவர்களும் பொருத்தமில்லாதவர்கள். ''காலிற்தளைபூட்டி நின்னையும் யான் கட்டுவனேல், வாராமற் காக்கலாம் மாபாரதம்'' என்று பரந்தாமனிடம் சவால் விட்டவன் சகாதேவன்.

ஆகவே பாண்டவர்களுக்குள்ளும் அர்ச்சுனனே தனது வினையை முடிப்பதற்கு ஏற்றவன் என்று பரமாத்மா முடிவு செய்து விடுகிறார்.

அதற்குஏற்றாற் போல பலகாரியங்களைக் ஸ்ரீகிருஷ்ணர் படிப்படியாகச் செய்து விட்டார். அர்ச்சுனனுக்கு நிகரானவனாய், துரியோதனனுக்கு நண்பனாய் விளங்கும்கர்ணன், அர்ச்சுனனைக் கொல்வதாகச் சபதம் பூண்டு இருக்கிறான். அவன துகையில் நாகாஸ்திரம்அர்ச்சுனனையே குறிவைத்துக் கிடக்கிறது. அதை ஒரு முறைக்குமேல் பிரயோகிக்கவிடாமல் குந்திதேவி மூலம் தடுத்துவிட்டான் கண்ணன். கர்ணனின் கவச குண்டலங்களை இந்திரனை அனுப்பிப் பெற்றுவிட்டான். பாண்டவர்கள் சகோதரர்கள் என்பதனை கர்ணனுக்கு உணர்த்தி அர்ச்சுனனைத் தவிர மற்றவர்கள் மேல் பாணப்பிரயோகஞ் செய்யக் கூடாது என்று குந்தி மூலம் வரம் பெற்றான். இத்தனையும் இரகசியமாக இருக்கவும் வகைசெய்து விட்டான் மாயக் கண்ணன். இவையெல்லாம் அர்ச்சுனனுக்கு எங்கே தெரியப்போகிறது? சகாதேவனுக்கு விளங்கும். அவனது வாயையும் கட்டிவிட்டான் கண்ணன்.

இத்தனை முன்னேற்பாடுகளையும் செய்துவைத்துக் கொண்டு, ஒன்றும் அறியாதவன் போலச் சாரதியம் செய்துகொண்டுபோன கிருஷ்ணபகவான், அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்யத் தொடங்குகிறான்.

''பார்த்தா! எப்பொழுதெல்லாம் அறம் அழிந்துபோய் மறம் மேலெழுகின்றதோ அப்பொழுதுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன்''

''நல்லாரைக் காப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன்.''

''பார்த்தா! மூவுலகிலும் எனக்குக் கடமையேதும் கிடையாது. அடையாத ஒன்றை இனி அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லை. ஆயினும் நான் கர்மம் செய்துகொண்டே இருக்கிறேன்.''

''ஏன் என்று கேட்கிறாயா? அர்ச்சுனா! நான் அயர்வின்றி எப்பொழுதும் கர்மத்தில் ஈடுபடாவிடின், மனிதர்கள் என் வழியையே யாண்டும் பின்பற்றுவர்''

''மறை என்பது, தகுதியில்லாதவர்களுக்கு என்றும் மறை பொருளாய் இருக்கும் வேதம். இப்பொழுது, அர்ச்சுனா, நீ என் பக்தனாகவும் தோழனாகவும் இருக்கின்றாயாதலால் இப்பழைய, அதே யோகமானது என்னால் உனக்கு இயம்பப்பட்டது. இது மேலான மறையாகும்''

''அர்ச்சுனா, எனக்கும் உனக்கும் பிறவிகள் பல கழிந்து போயின. அவற்றையெல்லாம் நான் அறிகிறேன்; நீ அறிய மாட்டாய்''

''நான் பிறப்பற்றவன்; அழிவற்றவன்; உயிர்களுக்கெல்லாம் ஈசன் என்னும் என் பிரகிருதியை வசப்படுத்தி ஆத்ம மாயையினால் அவதரிக்கின்றேன்''

''இங்ஙனம் எனது திவ்விய பிறப்பையும் செயலையும் உள்ளபடி அறிபவன் உடலை நீத்து மறுபிறப்பு எய்துவதில்லை; என்னையே அடைகிறான்.''

''தனஞ்செயனே! உலகிலே, மானிடப்பிறவி எடுத்தவர்கள் முத்தி அடைவதற்கு தமக்குக் கிடைத்த உடம்பைக் கொண்டு முறையான பயன்பாடுள்ள கர்மம் செய்து, அதனால் ஆத்ம ஞானமும் கர்மபந்த நீக்கமும் பெற வேண்டும்''

''அதிலும், சத்திரியனான நீ, பாப புண்ணியங்களுக்குப் பயந்து கர்மம் செய்யாமல் ஒதுங்கியிருக்க முடியாது. மன்னுயிர்களைப் பாதுகாப்பது மன்னனுடைய தர்மமல்லவா?''

''அப்படிக் கர்ம சந்நியாசம் பெற்று முத்தி பெறுவது சிறந்த வழி எனக் கொண்டாலும், கர்மயோகஞ் செய்து, பலவழிகளிலும் ஜீவனைப் பண்படுத்திக்கொண்டு சந்நியாசம் பெறுவதுதான் தகுதியானது''

''காயாக மரத்தில் ஒட்டியிருந்து முறையான சத்துக்களைப் பெற்று பழமாகி மரத்தைவிட்டு விழுவதுதான் பழத்துக்கு இனிமை. ஈஸ்வரனிடத்தில் நம்பிக்கை வைப்பதில் குழந்தையைப் போன்ற விசுவாசம் வேண்டும். கர்மயோகி ஒருவன் தண்ணீரிலிருக்கும் தாமரை போன்றவன். தாமரை என்றும் நீரால் நனைவதில்லை.''

இவ்வாறு ஸ்ரீபகவான் உபதேசம் செய்யும் பொழுது ஒரு கையில் சாரதிக் கடிவாளமும் மறு கையில் சின்முத்திரையும் பிடித்துக் கர்மயோகியாகக் காட்சியளிக்கிறார்.

ஸ்ரீ பகவான் தொடர்கிறான்.

''அர்ச்சுனா, மரண காலத்திலும் என்னையே நினைந்து உடலைத் துறந்து யார் போகிறானோ அவன் என் சொரூபத்தை அடைகிறான். இதில் ஐயமில்லை. ஆகையால், சர்வ காலமும் என்னையே நினைந்து கொண்டே போர்புரி; மனம், புத்தியை என்னிடத்தில் அர்ப்பணம் செய்வதால், சந்தேகமின்றி என்னையே அடைவாய்!

இவ்விதம் கர்ம யோகத்தைப் பகவான் விளக்கியபின் மனந்தெளிவுற்ற பார்த்தீபன், இதுவரை ஸ்ரீ பகவானின் அவதார மகிமையை உணராமல் தோழமையாக 'ஏ கிருஷ்ணா!, ஏ யாதவா!, ஏ கூட்டாளி!' என்றெல்லாம் அழைத்து வந்தமையை மன்னித்தருள வேண்டி, பகவானின் விசுவரூபத்தைக் காண ஆசைப்படுகிறேன் என்கிறான்.

அவ்விதமே அருள் செய்கின்றார் ஸ்ரீபகவான்.

யோகேசனான ஸ்ரீ கிருஷ்ணனின் உபதேசம் பெற்றுந் தெளிந்த காண்டீபன் மன உறுதியோடு போர் செய்யத் தொடங்குகிறான்.

★

## நல்லதோர்....

(IV ஆம் பக்கத் தொடர்)

தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மையைக் கொண்டதாக இருக்கும். அது தனக்கு என இறுக்கமான எல்லைகளைக் கொண்டிராமல் ஒரு தெளிவான — திறந்த — எல்லைகளைக் கொண்டதாக இருக்கும்; நல்ல சமுதாய மாற்றங்களை ஏற்றும், ஏனையவற்றை ஒதுக்கியும் விடும் குணங்களைக் கொண்டிருக்கும். இக்குடும்பம் தான் வளர்வதுடன், ஏனைய சமூக மாற்றங்களுக்கும் ஈடுகொடுத்துத் தன்னைச் சமூகத்துடன் இயைபாக்கிக் கொள்ளும்; தங்களின் சமநிலையைப் பேணிப் பாதுகாத்துக்கொள்ளும்.

ஆரோக்கியமான குடும்ப அங்கத்தவர்கள் தமக்குத் தேவைப்படும் உணர்வுபூர்வமான உதவிகளை இனங்கண்டு கொண்டிருப்பர். தம்மை விரும்புபவர்களை, தம்மோடு இருப்பவர்களை, தமக்கு ஆலோசனை கூறுபவர்களை, தமக்கு உதவுபவர்களை, அவர்கள் எங்ஙனம் தமக்கு உதவுவார்கள் என்பதை எல்லாம் புரிந்து கொண்டிருப்பர். தமக்கு இவ்விதமான உதவிகள் தேவைப்படும் பொழுது அவற்றைத் தயங்காமல் கேட்டுப்பெற்றுக் கொள்வர்.

சமுதாய மாற்றங்கள் ஏற்படும் பொழுது, அதனை உள்வாங்குவதற்கு குடும்பங்களுக்கு ஒரு கால இடைவெளி தேவைப்படுகின்றது. ஆரோக்கியமான குடும்பங்கள் இக்காலப்பகுதியில் அந்த மாற்றங்களை எதிர்கொண்டு ஊடகப்படுத்திக் கொள்ளும் இயல்பைக் கொண்டிருக்கின்றன.

ஆரோக்கியமான குடும்ப அமைப்பை உருவாக்குதலிலும், பேணுதலிலும் அன்பு, உணர்வு பூர்வமான உதவி, ஓய்வு போன்ற விடயங்களின் முக்கியத்துவம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

குடும்ப அங்கத்தவர்கள் தம்மிடையே நல்ல உறவைப் பேணுதல் மூலம் தங்களிடையேயும், சமுதாய மட்டத்தில் ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடனும் மகிழ்ச்சியையும், சிநேகபூர்வமான உறவையும் வளர்த்துக் கொள்கிறார்கள்; நல்ல உதவிகளை உரியவர்களிடமிருந்து உரியநேரத்தில் பெற்றுக் கொள்கின்றார்கள்.

ஆரோக்கியமான குடும்ப அமைப்பை உருவாக்க உழைப்போம்.

★

## குகை மனிதர்கள் குறித்து புளுகுக் கதைகள்!

மனித இன ஆராய்ச்சியாளர் சொன்ன மாபெரும் புளுகு இது.

1971 ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸிலுள்ள தேசிய சிறுபான்மை நிறுவனத்தின் தலைவர் மேனுவல் எலிசால்டே அந்நாட்டில் உள்ள காடுகளில் நவீன நாகரிகத்தைப் பற்றி எதுவுமே அறியாத, குகையில் வாழும் கற்கால மனிதர்களைத் தாம் கண்டதாகக் கூறினார். இலைகளைக் கோவணமாகத் தரித்துக் கொண்டிருந்த இந்தப் பழங்குடி மக்கள் 'டாஸடே' என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் குகையில் வசிக்கிறார்கள்; பூமியின் கீழ் விளையும் சில வகைக் கிழங்குகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றைத் தின்று உயிர் வாழ்ந்துவருவதாகவும் அவர்களுக்குப் பயிரிடத் தெரியாது எவ்விதமான [illegible] பற்றியும், அவர்கள் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் எலிசால்டே தெரிவித்தார்.

இந்தச் செய்தி விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தக் 'குகை' மனிதர்களைக்



காண பலர் காடுகளுக்குள் சென்றனர். இதற்காக ஹெலிகொப்டர்கள் இறங்க விசேட மேடைகள் அமைக்கப்பட்டன. 'டாஸடே' பழங்குடி மக்கள் பத்திரிகை உலகின் செல்லப் பிள்ளைகளாயினர்.

உலகப் புகழ் பெற்ற பத்திரிகையான 'நேஷனல் ஜோகரஃபிக்' இதழும் எம். பி. ஸி. தொலைக்காட்சி நிறுவனமும் 'டாஸடே' குகை மனிதர்கள் பற்றிய கவர் ஸ்டோரி எழுதவும், செய்திப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் எலிசால்டேவுக்கு 50 ஆயிரம் டாலர்கள் (ரூ.40 லட்சம் இன்றைய மதிப்பில்—சுமாராக) தந்தன. இதற்கிடையில் பிலிப்பீன்ஸ் அதிபர் பேர்டினண்ட் மார்கோஸ் குகை மனிதர்கள் வாழும் பகுதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தனது அரசே எடுத்துக் கொள்ளும் என்று அறிவித்தார்.

1986 இல் பெர்டினண்ட் மார்கோஸ் பதவி இழந்தார். இதற்குப் பிறகு சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகை

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிவுக்குக் கிடைத்த பரிசு

## குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்

நியூயோர்க் நகரத்திலிருந்து ஒரு மனநல மருத்துவ நிபுணரிடம் ஆலோசனை கேட்பதற்காக ஒரு பெண் வந்தாள்.

''நான் ஒரு தொழிற்சாலையின் தலைமை அதிகாரியிடம் சுருக்கெழுத்தாளராக வேலை டார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. என்னால் அவனுடைய கோபதாபங்களையெல்லாம் தாங்க முடியவில்லை. அவனுடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. ஆதலால் வேலையை விட்டுவிடவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன். அதற்கு முன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்று வந்தேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று பரபரப்போடு கேட்டாள்.

அவள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டுவிட்டு மருத்துவர் சொன்னார்.

''அம்மா, நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என்னிடம் வா. ராஜினாமாவைப் பற்றிச் சிந்திப்போம்'' என்றார்.

அவர் சொன்ன யோசனை இதுதான்: ''சிடுமூஞ்சியிடம் சில நல்ல குணங்கள் பதுங்கிக்கொண்டிருக்கும். அவற்றைத் தேடிக்கண்டுபிடித்து வாயாற அவற்றைப் பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள்'' என்று சொல்லியனுப்பினார்.

இந்த ஆலோசனையை அந்தச் சுருக்கெழுத்துப் பெண் பின்பற்ற ஆரம்பித்தாள்.

மறுநாள் சுருக்கெழுத்து எழுதுவதற்கு தன் அதிகாரியிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்து நடையின் சிறப்பை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாக, பாராட்டு ஏற, ஏற அதிகாரியின் சிடுமூஞ்சித்தனமும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. முடிவில் சிடுமூஞ்சியாயிருந்த அவன் அவளுடைய அன்பார்ந்த காதலனாகிவிட்டான்.



மூன்றுமாதம் கழித்து அந்தப் பெண் மருத்துவரைப் பார்க்கச் சென்றாள். ''என்னம்மா, வேலையை ராஜினாமா பண்ண வேண்டியதுதானே?'' என்று கேட்டார் மருத்துவர். ''ஐயோ, ராஜினாமாவா? பாருங்கள் இதை!'' என்று சொல்லி தன்னுடைய அதிகாரி தனக்குப் பரிசாகக் கொடுத்திருந்த வைர மோதிரத்தை அவள் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக்காட்டிக்கொண்டிருந்தது. விரைவில் அதிகாரிக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தது.

நம்மைச் சுற்றியிருப்பவர்களிடம், நம்மிடமிருப்பது போலவே, பல குற்றங்கள் இருக்கலாம். அவற்றைக் கொஞ்சநேரமாவது மறந்துவிட்டு, அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து, நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால் நம்மிடமிருக்கும் வெறுப்பும் நம்மை விட்டு அகலும்; மன அமைதியும் பிறரிடம் நல்லுறவும் வளரும்; இங்கிதம் பெருகும் சமுதாயத்தில் மங்களம் பொங்கும். ★

# திருடன் செய்த பிரதி உபகாரம்

கிறிஸ்துவப் பாதிரியார் ஒருவர் தனது காரில் போய்க்கொண்டிருந்தார். அவர் போகும் வழியில் ஒரு சிறைச்சாலை இருந்தது. அதன் வழியாகப் போகும்போது அவரது காரை அப்பொழுதுதான் விடுதலை அடைந்த ஒரு திருடன் நிறுத்தினான்.

பாதிரியார் தனது காரை நிறுத்தி, ''என்ன வேண்டும்?'' என்று அந்தத் திருடனை விசாரித்தார். திருடன் ''தங்களுடன் நானும் வந்து தேவாலயத்தில் பாவ மன்னிப்புக் கேட்கப் போகிறேன்'' என்றான். பாதிரியார் மனமகிழ்ந்து அவனைத் தன் காரில் ஏற்றிக் கொண்டார்.

காரில் போகும்போது அவனுக்கு அறிவுரைகள் கூறினார். அவற்றுள் ''தீமை செய்தவனுக்கு நாம் நன்மையே செய்ய வேண்டும். அதுவும் நன்மை செய்தவனுக்கு பிரதி உபகாரமாக நன்மையே செய்ய வேண்டும்'' என்பதும் ஒன்று. திருடன் உபதேசங்களை நன்றாகக் காதில் வாங்கிக் கொண்டான்.

அவனிடம் பேசிக்கொண்டே வந்த பாதிரியார் போக்குவரத்து விதிகளுக்கேற்ப தனது காரை ஓட்டாததால் ஒரு பொலீஸ்காரரால் நிறுத்தப்பட்டு அவரது முகவரியும் பொலீஸ்காரரின் டயரியில் குறிக்கப்பட்டது. பாதிரியார் மறுநாள் நீதிமன்றத்துக்கு வரும்படி ஆணையிடப்பட்டார். அவரும் ஒப்புக் கொண்டார்.



தேவாலயம் வந்தவுடன் திருடன் இறங்கினான், ''உங்களுக்கு இப்போதே நான் பிரதி உபகாரம் செய்ய நினைக்கிறேன். காரணம் உங்கள் உபதேசம் தான். இத்தனை தூரம் என்னை காரில் ஏற்றி வந்து இறக்கி விட்டதற்கு இந்தாருங்கள் எனது பரிசு'' என்று ஒரு நோட்டுப் புத்தகத்தை அவரிடம் கொடுத்தான்.

பாதிரியார் விலாசத்தைக் குறித்து வைத்துக் கொண்ட பொலீஸ்காரரின் டயரிதான் அது. பாதிரியார் திகைத்தார். ★



# பரிவோடு பழகு!

ரஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் பெருஞ்செல்வராக இருந்த போதிலும் இரக்க குணம் உடையவராக விளங்கினார். தம்மை நாடி உதவி கேட்டு வருபவர்களுக்குத் தாராளமாய்ப் பொருள்களை வழங்கினார்.

ஒரு நாள் டால்ஸ்டாய் ஏதோ வேலையாக ஓர் ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார். கந்தல் ஆடையுடன் கண்கள் குழிவிழுந்து பரிதாபமாகக் காட்சி அளித்த



பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம், ''ஐயா! நான்கு நாளாகப் பட்டினி, இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று கையை நீட்டினான்.

அந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென்று நினைத்த டால்ஸ்டாய் தம் சட்டைப் பைகளைத் துழாவினார். உண்மையிலேயே அப்பொழுது அவரிடம் ஒரு காசு கூட இல்லை.

என்ன செய்வது என்று நினைத்த அவர், பிச்சைக்காரனைப் பார்த்து, ''சகோதரனே; என்னிடம் இப்பொழுது காசு இல்லை. நீ என் வீட்டிற்கு வந்தாலோ அல்லது உன்னை மறுமுறை சந்தித்தாலோ நான் உனக்கு நிறையப் பிச்சை போடுகிறேன்'' என்றார்.

இதைக்கேட்ட பிச்சைக்காரன் தழுதழுத்த குரலில், ''ஐயா! யாரும் இதுவரை எனக்கு அளிக்காத பெரிய பிச்சையைத் தாங்கள் எனக்கு அளித்தீர்கள். என்னையும் மனிதனாக மதித்துச் சகோதரனே என்று அழைத்தீர்கள்; அதுவே எனக்குப் போதும். நன்றி'' என்று கூறிவிட்டுச் சென்றான். ★

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

நோக்கள் என்பன வருத்தும். எதையும் மெதுவாக நிதானமாகச் செயற்படுத்த எண்ணும் நீங்கள் காசு விசயத்தில் ஏன் அவசரப்படுகிறீர்கள்?

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

விருச்சிகம்: என்ன எடுத்தெறிந்து கோபக்கனல் பறக்குமே? வீட்டில் சகோதரங்களுடன் போட்டிகள் ஏற்படத்தான் செய்யும். எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப் போவதிலேதான் உங்களுக்கு நல்ல பலன்கள் நடக்கும். பொருள் களவுகள் போகலாம். தொழில் ஸ்தானத்தில் கசப்பான பலன்கள் நடக்கும். நன்மை, தீமை மாறிமாறி நடக்கும். உழைப்பிலே கருத்தாக இருக்கவும். கிருமித்தாக்கம், திடீர் விபத்து, கைகால் தாக்கம், இரத்த அழுத்தம் என்பன இருக்கும். இக்காலங்களில் அவதானமாக நடந்துகொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்; வெள்ளி.

தனுசு: உள்ளத்தில் நல்ல உள்ளம உறங்காது என்பார்கள். நல்ல காரியங்களைக் கொஞ்சம் போராடித்தான் செயற்படுத்த வேண்டும். அதற்காக தயங்கக்கூடாது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் அனுசரணைகள் இருக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்களைக் கண்டபடி செய்ய யோசிக்கவேண்டாம். எதிர்ப்பாலார் கொஞ்சம் எதிர்ப்புக் காட்டத்தான் செய்வார்கள். நாடிவரும் நட்பு கூடிவரும் உறவுகளில் நம்பிக்கையில்லை. போகவிட்டுப் புறம் சொல்லி வேதனை தருவார்கள். அலைச்சலுக்கு குறைவு இருக்காது. கைகால்உளைவு, விறைப்பு, குடல் வருத்தங்கள் வருத்தும். உஷ்ணபீடைகள் கொடுக்கும். உள்ள தெல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்காமல் நிதானமாக இருக்க முயலுங்கள். அல்லது எக்காரியத்தையும் செயற்படுத்த முடியாமல் இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

மகரம்: அடக்கமாக, அமைதியாக இருந்து கருமமாற்றி வெற்றி பெறுங்கள். சலசலப்பால் எவ்வித பிரயோசனமும் இல்லை. தொழில் ஸ்தானத்தில் பக்கத்தில் உள்ளவர்களால் வீண் சோலிகள் மாறி மாறி வந்தபடி இருக்கும். வீடு மனை, பொருள், வாகனம் என கலகலப்பாக ஓடும். எதிர்ப்பாலார் கொஞ்சம் எதிர்ப்புக்காட்டுவார்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பிரயாணங்களால் நன்மைகள் இல்லை. அவசரப்படாதீர்கள். இருக்கும் இடத்திலேயே உங்களை உருவாக்கப் பாருங்கள். வயிற்றில் கலக்கம் — மனதில் ஏக்கம் — நரம்புச் சோர்வு, கைகால் தாக்கம் என்பன கொடுக்கும். வைத்தியம் செய்யச் சுகம் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

கும்பம்: அதிக கற்பனை, அடிக்கடி மனக்குழப்பநிலை பதற்றப்பட்டு என்ன பலன்? மனிதர்களிடம் குறைகுற்றங்களைச்சொல்லி வேதனைப்படுவதால் இலாபம் இல்லை. ஆண்டவனிடம் முறையிடுங்கள்; அமைதி ஏற்படும். நம்பி இருந்தவர்கள் நடுக்கடலில் விட்டுவிடுவார்கள். தொழில் ஸ்தானத்தில் குறை குற்றங்கள் ஏற்படும். திட்டமிட்டுச் செயற்பட முடியாத நிலை ஏற்படும். எதிர்பாலார் உதவிகள் செய்வார்கள். சகோதரங்களாலோ, இனஜனங்களாலோ நன்மைகள் ஏற்படும். கைகால் நோ, அடிக்கடி உடல்களைப்பு, மனச்சோர்வு, சளித்தொல்லை, இரத்த அழுத்தம் என்பன கொடுக்கும். இடமாற்றங்களைத்தவிர்த்து விடுங்கள். ஆலயங்களுக்குப் போய்வருவதனால் நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

மீனம்: என்னையா, ஏழரைச்சனி, என்ன செய்து விடப் போகின்றது? எதையும் எதிர்நீச்சல் அடிப்பதிலே தான் தங்கியுள்ளது. பொருள்களிலே கவனமாக இருங்கள். ஓடும் வாகனத்தைச் சிலர் களவெடுக்க நாடிவரலாம். எந்த அலுவல்களிலும் ஒரு மந்தநிலை இருக்கச்செய்யும். எதிர்பாலாரால் எதிர்ப்பிருந்தாலும் அடிக்கடி அவர்களின் ஆலோசனைகள் முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் பொருளில் கவனமாக இருக்கவும். கைகால் தாக்கம், வயிற்றுநோ, உள்ளுறுப்புக்களில்நோ, சளித்தொல்லை என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியம்செய்யவும். சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்துவரவும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்

# குகை...

(IX ஆம் பக்கத் தொடர்)

யாளர் ஒருவர் இந்த 'மர்மக்' குகை மனிதர்களைக் காணச் சென்றபோதுதான் உண்மை வெளிப்பட்டது.

நவீன நாகரிகத்தைப்பற்றி எதுவுமே அறியாத, கிழங்குகளையும், பழங்களையும், காய்கறிகளையும் மட்டுமே தின்று உயிர் வாழ்ந்து இலைகளால் உடலை மறைத்துக் கொண்டிருந்த அந்தக் குகை மக்கள் 'ரி' சேர்ட்டுகளையும் அரைக்காற் சட்டைகளையும் படு ஸ்டைலாக அணிந்து கொண்டிருந்ததைப் பார்த்த சுவிஸ் பத்திரிகையாளர் திகைத்துப் போனாராம்.

எலிசால்டேதான் தங்களைக் குகை மனிதர்கள் போல் நடிக்கச் சொன்னதாக அந்தக் குகை மனிதர்களே தம்மிடம் கூறியதாக சுவிஸ் பத்திரிகையாளர் தெரிவித்தார்.

எலிசால்டே எந்த அளவுக்குப் புளுகியிருக்கிறார் என்பது பின்னர்தான் புரிந்தது. எலிசால்டே [illegible] டதா என்பது பற்றித் தெரியவில்லை. ★

# ஆராயாமல் இகழாதே!

ஈராக்கில் பாயும் டைக்ரிஸ் நதிக்கரையோரமாக ஒரு நாள் உலவிக்கொண்டிருந்தார் காஜா ஹஸன். பொழுது சாய்ந்து இருள் பரவும் வேளை. சற்று தூரத்தில் மரநிழலில் ஓர் இளைஞன் ஒரு பெண்ணிடம் மிகவும் மெதுவாக ஏதோ பேசிக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு போத்தல் வேறு! காஜா அவனைத் திட்டலானார்: ''கயவனே! நாத்திகனே! இந்த மாலை வேளையில் கூட உன் தீய செயல்களை நீ கைவிடவில்லையே? தொழுகை செய்வது எப்படி என்று தெரியாவிட்டால் என்னிடம் கற்றுக்கொள்.'' இப்படி அவர் சொல்லிவிட்டுத் திரும்பும் நேரத்தில் நதியில் ஒரு விபத்து நடந்தது. படகு ஒன்று கவிழ்ந்தது. அதில் வந்தவர்கள் தண்ணீரில் தத்தளித்தபடி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார்கள்.

மரநிழலில் இருட்டில் இருந்த அந்த ஆள் கண்ணிமைக்கும் நேரத்தில் ஆற்றில் குதித்து நீந்தி, எத்தனையோ பேரை மூழ்காமல் காப்பாற்றிக் கரை சேர்த்தான்.

'நாத்திகன் என்றும், கயவன் என்றும், நான்நினைத்த இந்த இளைஞன் இவ்வளவு நல்ல மனதுள்ள மனிதனாக இருக்கிறானே!' என்று ஆச்சரியத்தில் மூழ்கினார் ஹசன். அந்த இளைஞன் கரை ஏறி வந்ததும் ஹசன் அவனைப் புகழ்ந்து பேச ஆரம்பித்தார். அப்போது ஹசனை வணங்கிவிட்டு அந்த இளைஞன் சொன்னான். ''தயவு செய்து அவசர அவசரமாக இகழ்ச்சி, புகழ்ச்சிகளில் இறங்கி விடவேண்டாம். மரநிழலில் இருப்பது, நோய் வாய்ப்பட்ட என் தாய். போத்தலில் இருப்பது என் தாய்க்குக் கொடுக்கவேண்டிய மருந்து.'' ஹசனுக்கு வேர்த்துக் கொட்டியது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவுக்கு போதித்த சீடன்

ஒரு குரு அடிக்கடி கோபம் வந்து தனது சீடர்களைச் சபித்துக்கொண்டே இருப்பார்.

எல்லோரும் பயந்துகொண்டு குருவை எதிர்த்துப் பேசமாட்டார்கள்.

ஒரே ஒரு சீடன் மட்டும் அவரது குணத்தை மாற்ற நினைத்தான்.

ஒருநாள் அவனை அவர், "நீ நரகத்திற்குத்தான் போவாய்" என்று சபித்தார்.

உடனே அந்த சீடன் "அப்படியே மகிழ்ச்சியுடன் போகிறேன்" என்றான். குருவுக்கு வியப்பு தாங்கவில்லை. "ஏன் அங்கே போக சம்மதிக்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

அதற்கு சீடன் கூறினான்: "சீடர்கள் செய்யும் சிறு தவறுகளைத் திருத்தி நல்வழி காட்ட வேண்டியவர் குரு."

"அவர் அப்படிச் செய்யாமல் அடிக்கடி கோபப்பட்டு சீடர்களை 'நரகத்திற்குப் போ, போ' என்று விரட்டி சாபம்கொடுத்துக்கொண்டேயிருந்தால், அவர் கட்டாயம் நரகத்திற்குத்தான் போவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. குரு இருக்கும் இடம் தான் சொர்க்கம் என்ற நம்பிக்கையும்எண்ணமும் உடையவன் நான். ஆகவே நீங்கள் போகிற இடத்துக்கு நானும் வர வேண்டுமென்றால், நானும் நரகத்திற்குத்தானே போக வேண்டும்? அதனால் தான் அங்கே போகச் சம்மதித்தேன்" என்றான். குரு மனம் திருந்தினார். ★

# நல்லதும் கெட்டதும்!

ஜப்பான் நாட்டில் புகழ் பெற்ற புத்தத் துறவியாகப் 'பாங்கே' என்பவர் இருந்தார். அவர் மக்களுக்குத் தியானம் செய்வதைப்பற்றி அவ்வப்பொழுது சில வாரங்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்தார்.

இதில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பலர் வந்தனர்.

இப்படி வந்தவர்களில் ஒருவன் திருடுவதை மற்றவர்கள் கையும் களவுமாகப் பிடித்துவிட்டனர். அவனை நேராகத் துறவியிடம் அழைத்துச்சென்று "இவனை உடனே இங்கிருந்து அனுப்பி விடுங்கள்" என்று சொன்னார்கள்.

ஆனால் துறவி பாங்கே இந்த நிகழ்ச்சியைச் சிறிதும் கண்டுகொள்ளவில்லை. அவனை அப்படியே விட்டுவிட்டார்.

மீண்டும் திருட முயலும் போது பிடிபட்ட அவன் துறவியிடம் இழுத்து வரப்பட்டான். இந்த முறையும் அவர் அவனை விட்டுவிட்டார்.

இதைக்கண்டு எல்லோரும் கோபம் கொண்டனர். 'ஒன்று நாம் தங்க வேண்டும், இல்லையேல் இந்தத் திருடன் இங்கிருக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தார்கள் அவர்கள்.

தங்கள் கருத்தை ஓர் ஓலையில் எழுதி, அதில் எல்லோரும் கையொப்பம் இட்டனர். அந்த ஓலையைத் துறவியிடம் தந்துவிட்டு அவர் பதிலை எதிர்பார்த்து எல்லோரும் நின்றார்கள்.

அதைப் படித்துப் பார்த்த துறவி, "நீங்கள் அறிவுள்ளவர்கள்; உங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்துள்ளது. நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். நீங்கள் விரும்பிய யாரிடம் வேண்டுமானாலும் படிக்கலாம். ஆனால் இவனைப் பாருங்கள். இவன் நிலை பரிதாபமானது. அவனுக்கு நல்லது எது, கெட்டது எது என்று இன்னும் புரியவில்லை. நான் கற்றுத் தரவில்லை என்றால் யார் இவனுக்குக் கற்றுத் தருவார்கள்? நீங்கள் எல்லோரும் என்னை விட்டுப் போனாலும் சரி, நான் இவனை வைத்துக்கொள்ளப் போகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட அந்தத் திருடன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. திருடும் எண்ணம் அவன் உள்ளத்தை விட்டு மறைந்து போயிற்று.

## குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்


# மிருகத்திற்கு மதிப்பு

சீனஞானி கன்பூசியஸ், ஒரு நாள் தமது சீடர்களுடன் டாயீ மலைப்பக்கம் காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று ஒரு பெண்ணின் அழுகைக்குரல் கேட்டது.

ஒரு சமாதிக்கு அருகே பெண்ணொருத்தி துக்கம் தாளாமல் அழுதுகொண்டிருந்தாள்.

தன் சீடனை அனுப்பி விசாரிக்கச் சொன்னார் ஞானி.



"பெரியவரே! நான் என்ன சொல்வேன்? முதலில் என் கணவரின் தகப்பனாரை இங்கே ஒரு புலி அடித்துக் கொன்றது! அதே புலி பிறகு என் கணவரையும் கொன்றது! ஆனால், இப்போதோ என் மகனையும் அந்தப் புலி அடித்துக் கொன்று விட்டது!" என்றாள் அவள்.

"அப்படியானால் இந்தக் காட்டை விட்டு நாட்டுக்குள் சென்று வாழ்வது தானே!" என்று கேட்டான் சீடன்.

"நாடா! நாட்டில்தான் கொடுங்கோலாட்சி நடக்கிறதே! அங்கு எப்படிப் போவேன்" என்றாள் பெண்!

இதைக்கேட்ட கன்ஃபூசியஸ் சொன்னார்:

"சீடர்களே! இது நினைவிருக்கட்டும். கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிற்கு கடும்புலி வாழும் காடு நன்றே!!!

(சீனஞானி வாழ்ந்த காலம் கி.மு. 550. இது பாரதத்தில் புத்தர் வாழ்ந்தகாலம். 2500 ஆண்டுகளுக்கு முன் சீன ஞானி கூறிய பொன்மொழி தமிழ் நாட்டு அதிவீரராம பாண்டியன் பாடலுக்கு எப்படி ஒத்துவருகிறது பார்த்தீர்களா?)

மனிதன் மிருகமாகி விட்டால், மிருகத்திற்கே மதிப்பு வந்துவிடுகிறது பார்த்தீர்களா? ★

# காணாமல்போனமோதிரம்

மன்சாலகட்டை சுவாமி என்பவர் வைணவ அடியார்களில் ஒருவர்.

இறைவனுக்குக் கைங்கரியம் செய்வதில் அவருக்கு அலாதியான ஈடுபாடு இருந்தது.

அவர் காஞ்சீபுரத்திலுள்ள வரதராஜர் கோயிலில் ஏதாவது ஒரு விதத்தில் தொண்டு செய்வது வழக்கம்.

அன்றைய தினம் அவர், கோயிலில் பெருமாள் எழுந்தருளும் இடத்தை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்.

அப்போது அவர் கையில் அணிந்திருந்த மோதிரம் அவர் செய்துகொண்டிருந்த பணிக்கு இடைஞ்சலாக இருந்தது.

ஆகவே அவர் மோதிரத்தைக் கழற்றி ஓர் ஓரமாக வைத்துவிட்டு கைங்கரியத்தைத் தொடர்ந்தார்.

பணி முடிந்ததும் கோயிலுக்குச்சென்று, பெருமாளை வணங்கிவிட்டு தீர்த்தம் பெற கையை நீட்டினார். அப்போதுதான் அவருக்கு மோதிரத்தைத் தாம் கழற்றி வைத்தது நினைவுக்கு வந்தது.

உடனே சென்று மோதிரத்தை வைத்த இடத்தில் தேடினார். அது அங்கே இல்லை!

'ஓ' என்று அழ ஆரம்பித்தார்; புலம்பினார்.

அதைப் பார்த்த அவரது சீடர்கள், "சுவாமி, மோதிரம் காணாமல்போனதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாளைக்கே நாம் புதிதாக இன்னொரு மோதிரம் செய்து கொள்ளலாம்" என்றார்கள்.


மன்சாலகட்டை சுவாமி சற்று அமைதி அடைந்தார்; அழுகை குறைந்து அவர் பேசினார்.

"அன்பர்களே, என்னுடைய மோதிரம் தொலைந்து போனதற்காக நான் அழவில்லை. எனது அஜாக்கிரதையை நினைத்துத்தான் நான் வருத்தப்படுகிறேன். என்னுடைய கவனக்குறைவு காரணமாக யாரோ ஒருவர் அந்த மோதிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பஞ்சமாபாதகங்களிலேயே பொன்னைத்திருடுவதுதான் முதலாவது பாவமாகக் கருதப்படுகிறது. அந்தப் பாவத்தை ஒருவர் செய்வதற்கு நான் அல்லவா காரணமாகிவிட்டேன்" என்று அழுதுகொண்டே கூறினார். ★

## விடைகள்

VI ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு;

### உங்களுக்குத் தெரிகின்றதா?



### சோடி சேருங்கள்

| | |
|---|---|
| (அ) | vi |
| (ஆ) | viii |
| (இ) | vii |
| (ஈ) | x |
| (உ) | ii |
| (ஊ) | ix |
| (எ) | xii |
| (ஏ) | iii |
| (ஐ) | i |
| (ஒ) | xi |
| (ஓ) | v |
| (ஔ) | iv |

# இறக்கு முன் ஈகை செய்

ஓர் ஊரில் செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. இருந்தாலும் அவன் பெரிய கருமியாக இருந்தான். யாருக்கும் எதுவும் தர அவனுக்கு மனம் வருவதில்லை. ஊர் மக்களெல்லாம் அவனைக் குறைகூறி வந்தார்கள்.

ஒரு நாள் அந்தக் கருமி துறவி ஒருவரிடம் சென்றான். 'ஐயா! நான் இறந்த பிறகு என் சொத்துக்கள் அனைத்தும் தர்மத்திற்குத்தான் செல்லப் போகின்றன. ஆனால் ஊர் மக்கள் என்னைப் பாவி என்று திட்டுகிறார்கள். ஏன் என்று தெரியவில்லையே?" என்று சொன்னான்.

அதற்குத் துறவி, "அப்படியா? நான் ஒரு சமயம் பசுமாட்டிற்கும், பன்றிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை உனக்குச் சொல்கிறேன். உனக்கே உண்மை விளங்கும்" என்று கூறினார்.

கருமி, "சொல்லுங்கள்" என்றான்.

"ஒரு சமயம் பன்றி ஒன்று மாட்டைப் பார்த்து வருத்தத்துடன், 'மக்கள் எல்லோரும் உன்னைப் பற்றியும் உன் இனிய இயல்புகளைப் பற்றியும் புகழ்ந்து பேசுகிறார்கள். அதுவும் உண்மைதான். நீ அவர்களுக்காகப் பால் தருகிறாய். ஆனால் நானோ உன்னைவிட அதிகம் தருகிறேன். என் இறைச்சியை மக்கள் உண்ணப் போகிறார்கள். என் தொடைக் கறியைச் சுவைக்கப் போகிறார்கள். என்பாதங்களைக்கூடமென்று தின்னப் போகிறார்கள். ஏன் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விடப்போவதில்லை. நான் என்னையே முழுமையாகத் தரப்போகிறேன். இருந்தாலும் மக்கள் என்னைப் பாராட்டாமல் இகழ்கிறார்களே! இதன் காரணம் என்ன?' என்று கேட்டது.

"இதைக் கேட்ட மாடு சிறிது நேரம் சிந்தித்தது. பிறகு பன்றியைப் பார்த்து, 'நான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்குப் பயன் படுகிறேன். அதனால்தான் எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள்.' என்று பதில் சொன்னது" என்று முடித்தார் துறவி.

கருமி உண்மையை உணர்ந்தான். தான் உயிருடன் இருக்கும்போதே மக்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்று செயற்பட்டான். ★

# திறமையும்.....

(I ஆம் பக்கத் தொடர்)

கொடுக்கும்.

சரியாகத் தீனி தின்னாமலிருக்கும் பசுவின் மடியிலே அதிகமாகப் பால் சுரக்காது. சரியான உணர்ச்சி ஊறாதிருக்கும் உள்ளத்திலே முயற்சி பிறக்காது. தொடர்ந்தமுயற்சிதான் அனைத்து சாதனைகளுக்கும் அடிப்படையாய் அமைந்திருக்கின்றது.

தோமஸ் ஆல்வா எடிசன் நூற்றுக் கணக்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருந்ததால்தான் மின்சாரத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது!

விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் ஒரு தடவையிலேயே அதை உருவாக்கிவிடவில்லை! எத்தனையோ ஆண்டுகள், பல விதமான முயற்சிகளைச் செய்த பிறகுதான் அவர்கள் விமானத்தைச் செய்யமுடிந்தது.

நம்முடைய வாழ்க்கையிலும் அன்றாடம் காணும் காட்சியே கருத்துப்பாடமாக அமைகிறது. எப்படியென்றால், சிறுவன் சைக்கிளை ஓட்டத் தொடங்கும்போது ஒரே தடவையில் சைக்கிளை ஓட்டிவிடுவதில்லை.

காலில் சைக்கிளை மிதித்து ஏறி உட்கார்ந்து ஓட்ட பல தடவை முயற்சிசெய்த பிறகு தான் அதை ஓட்ட, பழக்கம் வந்து விடுகிறது. சைக்கிளை ஓட்டும் மந்திரம் அறிந்திருப்பதனால் மட்டும் சைக்கிளை ஓட்டிவிடமுடியாது! முயற்சியின் பயனாகவே சைக்கிளை ஓட்டமுடியும். மந்திரத்தால் மாஞ்செடியைக் காய்க்கவைக்க முடியாது. ஆனால் மனிதமுயற்சியால் மாஞ்செடியைக் காய்க்க வைக்கமுடியும்.

இதைப்பற்றி ஓர் அறிஞன் அழகாகச் சொல்கிறான்;

"வாழ்க்கையில் முயன்று பார்த்துத் தோல்விகண்டவர்கள் மிகச் சிலர். ஆனால் முயற்சி செய்யாமலேயே தோல்வியைத் தழுவிக் கொண்டவர் மிகப் பலர்."

முயற்சியே நமக்கு சிறந்த மூலதனம். இதைக்கொண்டு தான் நம்முடைய வாழ்க்கையை வளர்த்துக் கொள்வது மட்டுமின்றி வளப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

உங்களுடைய முயற்சியால் தோட்டத்தில் விளைந்த முள்ளங்கியைக் கடையில் விற்கும் முள்ளங்கியின் விலையோடு ஒப்பிட்டுப் பேசக் கூடாது. உங்கள் முயற்சியால் உருவாகிய காய்கறிகளுக்கு மதிப்பு அதிகம். அது போலவே சொந்த முயற்சியால் சம்பாதித்த சொத்தின் மதிப்பும் பரம்பரைச் சொத்தின் மதிப்பும் ஒன்றாகிவிடாது.

திறமையை வளர்த்துக் கொண்டவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் பேரும் புகழும் செல்வாக்கும் பெறுவார்கள் என்பது உறுதி.

அத்தகையவர்களில் ஒருவராக நாமும் விளங்க உறுதி கொள்வோம்! ★

(நன்றி:- ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.)

# அங்கோலா....

(XII ஆம் பக்கத் தொடர்)

ணையை ஏற்றுமதி செய்து வருகிறது.

பெருமளவு அமெரிக்க முதலீடுகளும் அங்கு செய்யப்பட்டுள்ளன.

ஐ. நா. சமாதானத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு மத்திய அங்கோலாவில் உள்ள வைரக்கல் சுரங்கங்களும் அங்கோலா அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டால்நன்மை அடையப் போகும் நாடு அமெரிக்காதான்.

ஏற்கனவே பல நூற்றாண்டு காலமாக போர்த்துக்கல் நாட்டினால் சுரண்டப்பட்ட நாடு அங்கோலா ஆகும். தற்பொழுது மற்றொரு ரூபத்தில் சுரண்டலை எதிர்நோக்குகிறது அது. ★

# ஈழத் தமிழர்...

(II ஆம் பக்கத் தொடர்)

இளைஞர்களை இந்த சக்கரத்தில் இருந்து மீட்கவோ எவரும் முன்வருவதாக இல்லை.

யாழ்ப்பாணம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? எங்கே மோதிக்கொண்டு தனது தனித்துவத்தை இழக்கப் போகிறது? — சமூகப் பொறுப்பும், பிரக்ஞையும் உள்ளவர்கள் ஊன்றிச் சிந்திக்க வேண்டிய கட்டம் இது! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோலா சமாதான ஒப்பந்தம்

# கை நழுவிப் போகும் நிலையில்!

## யுனிட்டா தலைவர் பின்வாங்குகிறார்

### உலக உலா
என்.பி.சீலன்

அங்கோலாவில் 30 வருட கால உள்நாட்டு யுத்தம் இந்த ஆண்டு முடிவுக்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் தீர்வுக்கான வாய்ப்பு மீண்டும் நழுவிச் செல்லும் அறிகுறிகள் தென்படுகின்றன.

அங்கோலா அரசும் கிளர்ச்சிக் குழுவான யுனிட்டா இயக்கமும் (Unita - 'National Union For Total Independence of Angola) ஐ.நாவின் ஏற்பாட்டில் 1994 நவம்பரில் சாம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

இதன்படி 1998 பெப்ரவரி 28ஆம் திகதியுடன் சமாதான ஒப்பந்தம் பூர்த்தி செய்யப் பட வேண்டும்.

அதாவது பெப்ரவரி 28ஆம் திகதி யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனஸ் சாவிம்பி (Jonas Savimbi) தலைநகர் லுவாண்டா வந்து இரண்டாவது உதவி ஜனாதிபதி பதவியை ஏற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் ஒப்பந்தத்துக்கு இணங்கி லுவாண்டா வரவும் இல்லை பதவி ஏற்கவும் இல்லை; தமக்கு அவகாசம் போதாது என்று யுனிட்டா இயக்கத் தலைவர் கோரியதை அடுத்து காலக்கெடுவை ஏப்ரல் 1ஆம் திகதியாக நிர்ணயித்தது ஐ.நா. எனினும் அந்தக் காலக்கெடுவுக்குள்ளும் காரியம் எதுவும் நடைபெறவில்லை. இதனால் ஒப்பந்தம் தற்போது கேள்விக்குறி ஆகிவிட்டது.

**10 லட்சம் பேரை பலி கொண்ட உள்நாட்டு யுத்தம்**

1990 ஆம் ஆண்டு அங்கோலாவில் உள்நாட்டு யுத்தம் மோசமடைந்ததை அடுத்து அதில் தலையிட வேண்டிய அவசியம் ஐ.நாவுக்கு ஏற்பட்டது.

உள்நாட்டு யுத்தத்தில் 10 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் ஊனமடைந்தனர். நிலக்கண்ணி மற்றும் மிதி வெடிகளாலேயே பெரும் அளவு இழப்புக்கள் ஏற்பட்டன.

யுனிட்டா இயக்கம் ஐ.நா. தலைமையிலான சமாதான ஒப்பந்தத்தை 1994 இல் ஏற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதற்கு அரச படைகளுடன் அப்பொழுது நடந்த சண்டைகளில் அது அடைந்த தோல்விகளே காரணம் என்று கூறப்படுகிறது.

மத்திய அங்கோலாவின் பிரதான நகரான ஹுவாம்போவை அப்பொழுது அரசு படைகளிடம் யுனிட்டா இயக்கம் இழந்ததே யுனிட்டா இயக்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு இட்டுச்செல்லவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் வழிவகுத்தது எனலாம்.

1994 சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம்.—

★ யுனிட்டா இயக்கம் தனது படைகளை 1998 பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் முற்றாகக் கலைத்து விட வேண்டும்.

★ மத்திய அங்கோலாவில் தனது சட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடவேண்டும்.

★ தனது வானொலி சேவையை நிறுத்திவிட வேண்டும்.

**வைரக்கல் வளம்**

மத்திய அங்கோலாவில் யுனிட்டா இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் பிரதேசங்கள் வைரக்கல் உற்பத்தியாகும் பிரதேசங்கள் ஆகும்.

கம்போடியாவில் கெமர்ரூச் இயக்கம் இரத்தினக்கல் வியாபாரம் மூலமும் மர வியாபாரம் மூலமும் பெற்ற நிதி மூலம் அரச படைகளுக்கு எதிரான போராட்டத்தில் எப்படித் தாக்குப்பிடித்து வந்ததோ அதே போன்று மத்திய அங்கோலாவில் உள்ள வைரக் கற்கள் யுனிட்டா இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெருமளவு உதவின.

அங்கோலாவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அங்கோலாவில் உள்ள வைரக்கல் விளையும் பிரதேசங்களை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவது அங்கோலா அரசுக்கு அவசியமாகத் தென்படுகிறது.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான சமயம் யுனிட்டா இயக்கத்திடம் 60 ஆயிரம் போராளிகள் இருந்தனர்.

ஆனால் தற்பொழுது தன் வசம் ஆயிரத்து 900 போராளிகள் மட்டும் இருப்பதாக யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனஸ் சாவிம்பி கூறுகிறார்.

மிகுதிப் போராளிகள் அங்கோலா —கொங்கோ எல்லைகளில் மறைந்து வாழலாம் என்று நம்பப்படுகிறது.

**நட்புநாடுகளை யுனிட்டா இழந்து விட்டது**

1990 ஆம் ஆண்டு அங்கோலாவில் உள்நாட்டு யுத்தம் உச்சம் அடைந்திருந்த சமயம் யுனிட்டா சில வெற்றிகளை ஈட்டுவதற்கு அண்டையில் உள்ள பலம் வாய்ந்த நட்பு நாடுகளும் காரணமாக இருந்தன.

யுனிட்டா இயக்கத் தலைவரின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர் ஸயரின் முன்னாள் தலைவர் மொபுட்டு.

ஸயரில் நடந்த உள்நாட்டு யுத்தத்தில் தோல்வி அடைந்து வெளிநாடு ஒன்றில் அஞ்ஞாதவாசம் செய்து வந்த மொபுட்டு 1997 செப்ரெம்பரில் மரணமடைந்து விட்டார்.

யுனிட்டா இயக்கத் தலைவரின் மற்றொரு நண்பர் கொங்கோ (பிரஸ்ஸவில்) தலைவர் பஸ்கால் லிசோபா (Pascal Lissouba). அவரும் பதவி கவிழ்க்கப்பட்டு விட்டார். தற்பொழுது யுனிட்டா இயக்கத் தலைவருக்கு உள்ள ஒரே நட்பு நாடு சாம்பியா மட்டுமே.

சாம்பிய ஜனாதிபதி பிரெடெறிக் ஷிலுபாவின் ஆதரவு யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனாஸ் சாவிம்பிக்கு இருந்து வருகிறது.

**ஐ.நா. கவலை தெரிவிப்பு**

அங்கோலாவில் தற்பொழுது உருவாகி வரும் நெருக்கடி குறித்து அங்கோலாவுக்கான ஐ.நா.பாதுகாப்புக் கமிட்டித் தலைவரான கென்யாவைச் சேர்ந்த நுக்குநாமஹூகு கவலை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விதித்த காலக்கெடுவுக்குள் யுனிட்டா இயக்கம் தனது படையைக் கலைக்காததால் அவர்கள் கொள்ளைக்காரர்களாகவே கணிக்கப்படுவார்கள் என்று அவர் எச்சரித்துள்ளார்.

**யுனிட்டாவில் பிளவு**

1994 சமாதான ஒப்பந்தம் யுனிட்டா இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தி இருக்கிறது. ஜோனஸ் சாவிம்பியின் நெருங்கிய சகாக்கள் சிலர் ஒப்பந்தத்தை ஏற்று அங்கோலா அரசியல் அமைச்சர் பதவிகளை ஏற்றுள்ளனர். முக்கிய அரச பதவிகளிலும் சிலர் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

பலர் விலகிச்சென்று அரசுடன் இணைந்த போதிலும் யுனிட்டா இயக்கத்தின் கோட்டையாக அங்கோலாவின் மத்திய உயர் பிரதேசம் இன்னும் இருந்து வருகிறது.

எனினும் அங்கோலா அரசு 'சாம்-14' ஏவுகணைகளை இந்த பிரதேசத்தை சூழ உள்ள பகுதிகளில் நிறுத்தி வைத்திருப்பதால் யுனிட்டா இயக்கத்துக்கு விமானம் மூலம் வரும் உதவிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வைரக்கல்தோண்டும் கருவிகளுக்கான உதிரிப் பாகங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றுடன் வந்த தென் ஆபிரிக்க விமானம் ஒன்றை சமீபத்தில் இந்த ஏவுகணைகள் தடுத்து திருப்பிவிட்டன.

ரஷ்யாவிடமும் கியூபாவிடமும் பயிற்சி பெற்ற இராணுவ நிபுணர்களைக் கொண்ட அங்கோலா அரசு படைகள் யுனிட்டா இயக்கத்தின் படைகளை இலகுவில் தோற்கடித்து விட முடியும் என்று நம்புகின்றன.

யுனிட்டா இயக்கத்தின் தாக்குதலை எதிர்பார்த்து 7 லட்சம் மக்களுக்கு அங்கோலா அரசு தற்போது ஆயுதங்களை வழங்கியுள்ளது. யுனிட்டா இயக்கம் சமீபத்தில் பாலங்களைத் தகர்த்திருந்தது. ஐ.நா. ஹெலி ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் அங்கோலா அரசுக்கு சாதகமாக அமைந்துவிட்ட ஒரு விடயம் அமெரிக்க ஆதரவுதான்.

ஏற்கனவே அமெரிக்கா அங்கோலாவில் இருந்து எண்

(XI ஆம் பக்கம் பார்க்க)



தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் நிலை கொண்டுள்ள அங்கோலா அரச படைகள்

# தோல்வியில் முடிவடைந்த ஆப்கான் சமாதான பேச்சு

18வருட காலமாக நடைபெற்றுவரும் ஆப்கானிஸ்தான் உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு காணும் முயற்சியாக பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து விட்டன.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தலிபான் இயக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் இடையில் காபூல் திரும்பினர். அவர்கள் திரும்பிவரத் தவறியதை அடுத்து இஸ்லாமாபாத்தில் உள்ள தலிபான் தூதுவர் தலிபான் சார்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். இதனை பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட எதிர்த்தரப்பினர் எதிர்த்து பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த மறுத்தபோது பேச்சுக்கள் முறிவடைந்தன.

**றிச்சேர்ட்சன்**

அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதுவர் றிச்சேர்ட்சன் ஏப்ரல் 18 ஆம் திகதி ஆப்கானிஸ்தான் சென்ற சமயம் தலிபான் தரப்பையும் எதிர்த்தரப்பையும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு இணங்க வைத்தார்.

அதன் அடிப்படையிலேயே இஸ்லாமாபாத்தில் பேச்சுக்கள் நடைபெற்றன.

ஆப்கானிஸ்தான் உள்நாட்டுச் சண்டையில் தலைநகர் காபூல் உட்பட ஆப்கானிஸ்தானில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி இன்னும் தலிபான் படைகளிடமே இருந்து வருகிறது.

அஹ்மத்ஷா மசூதை தலைவராகக் கொண்ட எதிர்த்தரப்புப்படைகள் காபூல் மீது ஆட்லறித் தாக்குதல் நடத்தக் கூடிய தூரத்தில் நிலை கொண்டுள்ளன.

தலிபான் படைகளும் எதிர்த்தரப்புப் படைகளும் மீண்டும் மற்றொரு யுத்தத்துக்கு தயாராகிக் கொண்டிருந்த சமயம் றிச்சேர்ட்சனின் சமரச முயற்சி இடம் பெற்று இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேடைக்கு இட்டுச் சென்றது.


தற்போது ஆப்கானிஸ்தான் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை, அரசு ஒன்று இல்லாததே ஆகும். தலிபான் அரசுக்கு பெரும்பாலான நாடுகள் இன்றும் அங்கீகாரம் வழங்கவில்லை. இஸ்லாமிய அடிப்படை வாதக் கொள்கைகளை தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தலிபான் தீவிரமாக அமுல் செய்வதால் அது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்து வருகிறது.

பெண்கள் கட்டாயம் பர்தா அணிய [illegible] செல்லக்கூடாது; உத்தியோகம் பார்க்கக்கூடாது போன்ற சட்டங்களை தலிபான் அமுல் செய்து வருகிறது. பெண்கள் ஓசை எழுப்பும் காலணிகளை அணியக்கூடாது என்பது தலிபான் போட்ட கடைசி உத்தரவு.

தலிபானுக்கு எதிரானவர்கள் இஸ்லாமிய சட்டங்களுக்கு அமைய கல் எறிந்து கொல்லப்பட்டுள்ளனர். சிலர் தூக்கிலிடப் பட்டுள்ளனர்.

தனது படையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பெண்களுக்கு நூற்றுக்கு நூறு வீத உரிமை உண்டு என்கிறார் அஹ்மத் ஷா மசூத்.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் யுத்த நிறுத்தம் செய்வது, கைதிகளை விடுவிப்பது போன்ற ஆரம்ப விவகாரங்களே முதலில் எடுக்கப்பட்டன.



ஆப்கான் பேச்சுக்களில் கலந்து கொள்ள எதிர்த் தரப்பு பிரதிநிதிகள் இருவர் இஸ்லாமாபாத் வந்தபோது எடுத்த படம்.

எனினும் தலிபான் இணங்கிப்போக மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1978 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானுக்கு படைகளை அனுப்பி தனது பொம்மை அரசு ஒன்றை உருவாக்கியது. அன்றில் இருந்து ஆரம்பமான பிரச்சினையே பல வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

80 களின் பிற்பகுதியில் சோவியத் படைகள் வெளியேறியபோதிலும் சோவியத்படைகளுக்கு எதிராகப் போரிட்ட ஆயுதக் குழுக்கள் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டதால் அது உள்நாட்டு யுத்தமாக உருவெடுத்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org